
எங்கள்

# முற்றம்

கலை இலக்கிய சமூக இதழ்









செப்டம்பர் 2025

விலை ரூ. 100/=

## மறுமலர்ச்சி மன்ற ஆண்டுவிழா-பண்ணாகம் வடக்கு அ.மி.த.க பாடசாலை மாணவர் நாடகம்










## வலி மேற்கு பிரதேச செயலக பண்பாட்டு பெருவிழா 2025, அராலி வடக்கு இந்துக் கல்லூரி அரங்கு







*சிறுவர் பாடல்கள் காட்சியுடன் பார்க்க யானைத் தாத்தா யூர்யூப் சனல் சஸ்கிரைப் பண்ணுங்கள்*

## பண்பாட்டு பெருவிழாவில் பண்மக்கள் இலவச கல்விக்கூட சிந்துநடைக்கூத்து 'மாங்கனி'








ISSN NO : 2783–8889
இதழ் : 6 செப்டம்பர் 2025

# எங்கள் முற்றம்

## கலை இலக்கிய சமூக இதழ்

ஆசிரியர் : அழ. பகீரதன்

ஆடுதல், பாடுதல், சித்திரம் –கவி
யாதி யினைய கலைகளில் – உள்ளம்
ஈடுபட் டென்றும் நடப்பவர் – பிறர்
ஈன நிலைகண்டு துள்ளுவார் – அவர்
நாடும் பொருள்கள் அனைத்தையும் – சில
நாளினில் எய்தப் பெறுகுவார் – அவர்
காடு புதரில் வளரினும் – தெய்வக்
காவனம் என்றதைப் போற்றலாம்!
–பாரதி

ஆக்கங்களிற்கு பொறுப்பு எழுதிய எழுத்தாளர்களே. கதைகளில் வரும் சம்பவங்கள், பாத்திரங்கள் யாவும் எழுத்தாளர்களின் கற்பனையே. ஆக்கங்களைச் சுருக்கவும், மாற்றவும் ஆசிரியருக்கு உரித்துண்டு. ஆக்கங்களின் கருத்துக்கள், இதழில் வரும் விளம்பரங்களின் கருத்துக்கள் எவற்றுக்கும் இதன் வெளியீட்டாளரான மறுமலர்ச்சி மன்றம் நம்பிக்கை பொறுப்பாகாது.

இதழ் வடிவமைப்பு: சிவ பரதன்
நிழற்படங்கள்: எஸ். அனுஜன்
ஆலோசகர்கள் :
மறுமலர்ச்சி மன்ற நம்பிக்கைச் சபை உறுப்பினர்கள்
சு. சுந்தரசிவம் – தலைவர்
கோ. சுதாகரன்– செயலாளர்
அ. பகீரதன் – பொருளாளர்
சோ. தேவராஜா
ந. சிவசுப்பிரமணியம்
சு. யாதவன்
ச. தனுஜன்
அச்சுப் பதிவு :
ஜே.எஸ். பிறின்ற்றேஸ்
சில்லாலை வீதி,
பண்டத்தரிப்பு
வெளியீடு :
**மறுமலர்ச்சி மன்றம்,**
**காலையடி, பண்டத்தரிப்பு.**
**புத்தகப் பண்பாட்டுப் பேரவை**
**நீதிமன்ற வீதி, மல்லாகம்.**

*Email : marumalarchy1972@gmail.com*
*T.P : +94 77 104 1945*

நாம் 'எங்கள் முற்றம்' ஆறாவது இதழில் உங்களுடன் பேசுவதையிட்டு மகிழ்கிறோம். ஆடி ஓகஸ்ட் 2025 இதழ் உங்கள் கரங்களில் தவழ்ந்த போது மாத இதழா, இருமாத இதழா என்ற சந்தேகங்கள் உங்களுக்கு எழுந்தமை அறிவோம். அக்கறையுள்ளோர் காலாண்டு இதழாக கனதியாக வெளியிடுமாறு ஆலோசனை தந்தார்கள். வெறுமனே கதைகளைத் தாங்கி வராது விஞ்ஞான கட்டுரைகளையும் தாங்கி வரவேண்டும் எனவும் கூறினார்கள்.

நாம் மாத இதழாகவே வெளியிடுவதனை இலக்காக கொண்டுள்ளோம். அதற்கமைய செப்டம்பர் இதழ் உங்கள் கரங்களில் தவழ்கின்றது.

உங்களிடமிருந்து ஆக்கங்கள் மாதந்தோறும் 15ந்திகதிக்குள் கிடைக்கும் பட்சத்தில் அடுத்தமாதம் முதலாந்திகதிக்குள் உங்கள் கரங்களில் எங்கள் முற்றம் தவழ்வது சாத்தியமாகும்.

இந்த இதழ் முகப்பில் தந்தை பெரியார், மகாகவி பாரதியார், குன்றக்குடியடிகளார் ஆகியோரின் படங்களை இணைத்துள்ளோம். அவர்கள் தொடர்பான கட்டுரைகளும் இணைத்துள்ளோம்.

எமது நோக்கம் குடும்பத்தில் உள்ள அனைவரும் வாசிக்க கூடிய விதத்தில் சமூக நோக்கு மிக்க ஆக்கங்களைக் கொண்டதாக முற்றங்கள் தோறும் பேசப்படுவதாக, கலந்துரையாடப்படுவதாக 'எங்கள் முற்றம்' இதழ் அமைய வேண்டும் என்பது தான்.

இந்த இதழை செப்டம்பர் 01 ந்திகதி வெளிக்கொணர ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி கூறுவதோடு இதழினை அடக்க விலையில் தருவதற்கு அமரர் சிவகெங்கா அழகரத்தினம் நினைவுக் குழுவினர் அனுசரணை வழங்கியமைக்கு எமது இதயபூர்வ நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அடுத்த இதழை ஒக்ரோபர் 01ந்திகதிக்குள் வெளிக்கொணர உங்கள் ஆக்கங்களை செப்டம்பர் 15ந்திகதிக்குள் அனுப்பிவைக்கவேண்டுகின்றோம்.

– ஆசிரியர்

## உள்ளே....


தென்புலத்தார் தொழுதேற்றல்

- வீரகாவியம் 'ஒரு கம்யூனிஸ்ட் இணையர் வாழ்வின் சந்திப்புக்கள் வள்ளியம்மை சுப்பிரமணியம் எழுதிய நூல் பற்றிய விளக்கவுரை – 15
- பாரதியின் புதுமைப் பெண்:விடுதலை, சமத்துவம் மற்றும் சக்தியின் குரல் – 35
- காவியுடை தரித்த சிவப்புச் சிந்தையாளர் –30
- தந்தை பெரியார் : ஒரு சீர்திருத்த முன்னோடியை மீண்டும் புரிந்துகொள்ளல் –37
- சிறுகதை
- அறம் அறியா நாகரிகம் – மாதவி உமாசுதசர்மா –05
- அம்மா – எஸ். சிவஞானராஜா – 39
- கணவனை எதிர்பார்த்து இருக்கும் பெண்ணின் வாக்குமூலம் – சை.கிங்ஸ்லி கோமஸ் –43

கவிதைகள்

- புதுயுகம் பிறந்திட – ச. நடராஜா – 03
- பாடல் இரண்டு – ஈழத்து தேவன் பூதனார் –14
- உணவும் நலமும் – அழ. பகீரதன் –366

பயில் நிலம்

- சிறுகதை: கற்பு– யதுஷாயினி பாலகிருஷ்ணன் – 23

மொழியாக்கம்

- சிங்களக் கவிதை: நினைவுக் காகிதம் – 07
- சிங்கள கவிதை: புதிய டொக்டர் சகுந்தலா நோயாளர்களைப் பார்க்கிறார் –08

கல்வியியல் நோக்கு

- இலங்கைப் பாடசாலைக் கல்வியில் தொழில்நுட்பக் கல்வியின் பங்கு – பி. முத்துலிங்கம் –41

ஆய்வரங்கு

- திருக்குறளின் கல்விச் சிந்தனை சமூகநோக்கில் ஒரு மறு வாசிப்பு– சு. ஸ்ரீகுமரன் – 11

அலசல்

- இலங்கையில் ஏற்பட்ட பிரதான அரசியல் மாற்றங்களும் இன்றைய அரசியல் மாற்றமும்: ஓர் இயங்கியல் பார்வை – பி. முத்துலிங்கம் –47

தொடர்

- வேதாளமும் முருங்கையும் – அசன் –33
- தீரணியனின் திருவிளையாடல் – செண்பகன் –19

பதிவும் பகிர்வும்

- யாழ் சர்வதேச புத்தகத் திருவிழா – 09

மூத்தோர் படையல்

- தூரத்து மின்னல் – கவிதை – எம். ஏ. நு.்மான் – 18
- தொலைவும் இரசிப்பும் – கவிதை– சி. சிவசேகரம் –27
- நமது தேவை – கவிதை– இ. முருகையன் – 30

ஆன்மீகம்

- ஒய்வு இல்லா ஓர் நினைவே சித்தம் – 21

தோட்டப் புறம்

- வெள்ளை ஈக்களிலிருந்து தென்னை மரத்தை பாதுகாத்தல் – 31


### மறுமலர்ச்சி மன்ற முன்பள்ளி செயற்பட்டு மகிழ்வோம் காட்சிகள்











# புதுயுகம் பிறந்திட

கவிதை

*ச. நடராஜா*

*கட்டாந் தரையி லென் கையே*
*தலை அணையாய் கண்ணயர்ந்த வேளை*
*மட்டற்ற வரம் ஈந்தாள் பூமகள்*
*தொட்டிரு கரம்பற்றி தூக்கி யெனை*
*வான வீதிவரை அனுப்பி வைத்து*
*வர விருக்கும் பேரழிவு காட்சிதனை*
*அங்கிருந்த வாறே காணும் திறனை*
*நான் அடைய காட்சிகள் தோன்றின*
*பாரதப் போரில் அன்று சஞ்சயன்*
*பார்த்தது நேரில் உரைத்திட்ட காட்சியால்*
*துயரத்தில் வீழ்ந்த திருதராஷ்ரன் வருந்தினனே*
*அந்நிலை எனக்கின்று இயம்பிட எவருமின்றி*
*காட்சிகள்; கோலமிட்டு பதிந்தன கண்களிலே (1)*

*கண்கள் இமைக்க மறந்திட கடலலைகள்*
*மலை அளவு மண்ணுக்குள் புகுந்திட*
*நாடு ஒன்று கபளீகரம் ஆனதங்கே*
*மனித சடலங்கள் ஓடிடும் வெள்ளத்தில்*
*உருண்டும் புரண்டும் ஒதுங்கிட இடமின்றி*
*கரை காணாது ஓடிக் கொண்டே*
*இருந்திட ஒன்று மட்டும் புரிந்தது*
*அங்கு ஜாதியில்லை மதமில்லை நிறமில்லை*
*உயர்வு தாழ்வு பேத மேதுமில்லை*
*ஓவென்று ஓலமிட சுற்றமில்லை சொந்தமில்லை*
*எரிப்பதற்கோ புதைப்பதற்கோ இடமும் இல்லை*
*என்றவாறு எண்ணற்ற சடலங்கள் ஊதிப்பெருத்து*
*உருக்குலைந்த அலங்கோல காட்சிகள் அரங்கேறின (2)*

*அரங்கேறிய காட்சியில் அச்சொட்டான குரலொன்று*
*அவலக் குரலெழுப்பி; ஆண்டவரை அழைத்து*
*பேரம் பேசியதை என்னவென்று எடுத்துரைக்க*
*எல்லை இல்லா பிரபஞ்சத்தின்; பேரொளியாய்*
*விளங்கும் இறைவனை இலகுவாக வசப்படுத்த*
*தன்னுயிர் காத்திட்டால் இத்தரையில் உந்தனுக்கு*
*ஆலயம் கட்டி கும்பாபிஷேகம் நடத்துவேனென*
*அழுது புலம்பி மரக்கிளையில் தொங்கியதை*
*பொழுது புலரும்வரை நானும் பார்த்திருக்க*
*பகவானே என்றவாறு பிடிதளர வீழ்ந்தபோது*
*கவியரசர் பாடலொன்று மனத்திரையில் ஓடியது*
*மனிதன் நினைப்பதுண்டு: வாழ்வு நிலைக்குமென்று*
*இறைவன் நினைப்பதுண்டு பாவம் மனிதனென்றானது (3)*

*மனிதன் பிறக்கின்ற போதே இறக்கின்ற*
*திகதி இருக்கின்ற தென்பது நிஜம்தானே*
*இதில் வருகின்ற துன்பம் எதுவென்றாலும்*
*நியதியின் எல்லை அதுவென்று அறிந்திடு*
*தத்துவம் என்மனம் பேசிட தவித்திடும்*
*மாந்தர் மத்தியில் மின்சாரம் இன்மையால்*
*கணப் பொழுதும் கைவிட்டு நழுவாத*
*கையின் தொலை பேசிகள் கர்வமிழந்து*
*ஒன்றொடு இரண்டும் உதவாமல் போனது*
*வாழ்கை தரமங்கே வாயடைத்து நின்றது*
*யார்முகம் பாராது ஐயத்தில் தவித்தது*
*பச்சிழம் குழந்தையும் பாலூட்டும் அன்னையும்*
*ஆரத் தழுவியவாறு ஒன்றாக மடிந்தனர் (4)*

*மடிந்த மாந்தருக்கு அஞ்சலி செலுத்திட*
*எவருமின்றி கணக்கற்ற உடல்கள் குவிந்திட*
*காட்டு விலங்குகள் வீட்டு விலங்குடன்*
*பேதமின்றி இரண்டறக் கலந்து மிதந்திட*
*காகிதக் கப்பல் போல் வாகனங்களும்*
*வீடுகளும் வீதிகள் தெரியா வெள்ளத்தில்*
*தேடிட முடியா முகவரி தொலைத்து*
*கணக்கின்றி காணு மிடமெலாம் சென்றிட*
*கலைந்திடும் காகிதக் கூட்டம் போல்*
*வானுயர் கட்டிடங்கள் இடிந்து சரிந்திட*
*ஏற்றுக் கொண்ட வெள்ளம் பாய்ந்தடித்து*
*ஒன்றின் மேல் ஒன்றாக போட்டியிட்டு*
*போகும் இடம் தெரியாமல் போயினவே (5)*

*போய்க் கொண்டு இருந்த வெள்ளம்*
*தரை தட்டுமாவென கரை தேடினேன்*
*காணும் தரைமீது கண்பார்வை போய்வீழ*
*ஆளில்லா விமானங்கள் அங்கே பறப்பதைக்*
*கண்டதும் என் பார்வை பூமகளை*
*தேடியது தலைவிரி கோலமாய் நர்த்தனம்*
*புரிந்தவள் ஓரவிழிகளால் என்மீது பார்வை*
*பதிந்திட தாயே ஏனம்மா இந்நிலை*
*என்பது போலென் பார்வையை கண்டதும்*
*இயம்பினாளிது இடை வேளை மட்டுமே*
*இன்னுமுண்டு சொன்னபடி கேள் என்றாள்*
*பகவானே என்றவாறு பார்வையை மேலெழுப்ப*
*சங்கரர் ஒற்றைக் காலில் ஆடியவாறிருந்தார் (6)*

ஆடியிலே காற்றடிக்க ஐப்பசியில் மழையுண்டு
வாயுபகவான் வர்ணபகவான் இருவரும் இதுவரை
செய்திருந்த ஒப்பந்தம் தெரியாமல் போயிட
நாற்புறம் இருந்தும் பேரோலி எழுப்பிட
வீசிய சூறைக் காற்றங்கே கடல்நீரை
காவு கொண்டு பெரும் மழையாய்
கொட்டித் தீர்த்திட இடியுடன் மின்னலும்
கும்மிருளும் துணைநிற்க அந்நாடும் அழிந்திட
வானுயர் மரங்கள் யாவும் சுழன்றடித்த
காற்றின் கோரப்பசி தாண்டவம் ஆடியதால்
நிலைத்து நிற்க முடியாமல் சரிந்திட
பறப்பின்றி விமானங்கள் வெள்ளத்தில் மிதந்திட
அந்நாடு வறுமையின் பிடியில் சிக்கியதே... (7)

சிக்கிச் சீரழிந்தவர் செய்வ தறியாது
சின்னா பின்னமாகி நாட்டில் நலிந்திட
அணு உலைகள் கவசம் உடைந்தங்கே
சிதைந்த உலைகள் ஊருக்குள் பரப்பிய
கதிர்வீச்சு காற்றின் வேகத்தால் பல்லுயிரை
காவுகொண்ட காட்சி யாருக்கும் புரியாமலே
காற்றோடு காற்றாக நிலைகெட்டு கலந்திட
பூமகள் அங்கே நர்த்தனம் புரிந்திட
சாய்ந்த மரங்கள் காய்ந்து போகமுன்
பற்றியெரிந் தவை மண்மீது சாம்பலாகிட
ஆலங்கட்டி மழை பூமகள்மீது பொழிந்திட
காலச் சக்கரம் கோலம் மாறியதால்
அழிவின் ரூபம் எழுதப்படா நாடகமானது (8)

நாடக அரங்கத்தில் தினம் நடித்தவர்
உச்ச காட்சியில் கண்ணீரை கொட்டி
அழுத போதிலும் ஓடிடும் வெள்ளத்தில்
கலந்தது ஊரறியாமல் போன போது
ஆங்காங்கே பிணக் குவியல்; ஒதுங்கிட
பேரழிவு நிகழ்வை அவை இயம்பிட
பிறிதொரு கண்டத்தில் குமுறும் எரிமலைகள்
தீக்குழம்பை ஒன்றன்பின் ஒன்றாய் கொட்டிட
நாடுகள் பல துடைத்து எரிக்கப்பட
தலைமுறைக் கென்று சேர்த்தவை அழிந்திட
இதுதான் வாழ்க்கை என்றான போதிலும்
மடிந்தவர் தொகை முடிவின்றி தொடர்ந்திட
நாட்கள் நகர்ந்திட நானும் விழித்திருந்தேன். (9)

விழிகளோ விறைத் திமைக்க மறந்திட
அளவிலாப் பனியால் மூடிய மலைகள்;
உடைந்து வெள்ளம் ஊருக்குள் பாய்ந்திட
கட்டிய பாலங்கள் உடைந்தவை கொட்டிய
வெள்ளம் கடலில் கலந்திட தீவுகள்
அனைத்தும் அகிலத்தில் இருந்து மறைந்திட
ஆகாயப் பருந்துகள் வானவீதியில் வட்டமிட
ஆழியின் கோரமுகம் பார்த்தே பறந்திட
கால புருஷரும் பூமகளும் உரையாடினர்
அடுத்து வருவது புதுயுகம் அனைத்தும்
அழிந்திட வேண்டியது அவசியம் என்றனர்
காட்சிகள் தொடர காட்டுத்தீ கொழுந்துவிட
பூமகள் மேனியிலே புயலொன்று வீசியது. (10)

வீசிய காற்றில் பிணவாடை எடுக்க
நோய் காவும் கிருமிகளோ கணக்கற்று
பெருகிட வாந்தி பேதியும் கொலராவும்
வகை தொகையின்றி வாரி அணைத்திட
மிச்சம் இருந்த மனிதரும் மடிந்திட
அனாதைப் பிணங்கள் ஆங்காங்கே குவிந்திட
அவை சொல்லாமல் சொல்லிவிடும் சேதியிலே
பொய்யில்லை களவில்லை பொருள் குவிக்கும்
எண்ணமில்லை ஏமாற்றும் தொழிலில் இலாபமி;லை
இறுதியில் எதுவும் கூடவராதென இயம்பிட
அழியாத ஆத்மா கர்மவினை கண்டு
பிறப்பு எடுத்திட பலயுகம் தவித்திருக்க
பொல்லாத மனிதரிங்கே இல்லாமல் போயினரே! (11)

போயும் போயும் மனிதா உந்தன்
அகங்காரம் எங்கே ஆணவம் எங்கே
வல்லான் வகுத்தது சட்டம் என்றாய்;
பேரழிவு கண்டிட நாடுகள் பிடித்தாய்
அழிவுப் பாதையில் ஆயுதம் படைத்தாய்
அனுபவம் கண்டும் அணுவாயுதம் செய்தாய்
காலாதி காலமாய் யுத்தங்கள் புரிந்தாய்
புலம்பெயர் மக்களை இரக்கமற்று கொன்றாய்
விகார எண்ணங்களால் விநாசம் நடத்தினாய்
காட்சிப் பொருளாயுன் கௌரவம் காட்டினாய்
கண்ணியம் தவறிட பெண்ணடிமை கொண்டாய்
காலாதி காலமாய் இத்தனையும் செய்தாய்
பூமகளோ அழிவின் நாயகியாய் ஆடினாளே! (12)

ஆடிய பூமகள் பொற்பாதம் அண்டங்கள்
அனைத்தின் வரை படத்தை மாற்றிட
பார்க்கும் இடமெங்கும் பசுமை தோன்றிட
பூமகள் இளமை அழகே வடிவமாளாள்
சத்திய யுகமெனும் புதுப்பெயர் கொண்டு
செல்வமும் சீரும் சேர்ந்தே மிளிர்ந்திட
தங்க மாளிகைகள் அழகே பொருந்திட
நியதியின் நிமித்தம் காலச் சக்கரம்
சுழன்றது கலியுகம் மாற்றி அமைந்தது
நீரோடையில் சிறுத்தை மானுடன் நீரருந்த
தேவதைகள் ஆனந்த களிப்புடன் நடனமாடிட
பூமகளின் புதுயுகம் பொற்காலம் அமைத்திட
பேரழகு கண்டதே நானிருந்த கட்டாந்தரை. (13)

சிறுகதை

# அறம் அறியா நாகரிகம்

*மாதவி உமாசுதசர்மா*



அவனுக்குத் தெரியும், அவளின் உயிர்நாடி எதென்பது... அவளுக்கே தெரியாது. ஆனாலும் அவனுக்குத் தெரியும். சங்கீதத்திலும், நாட்டியத்திலும் அவளின் பித்து எப்பேற்பட்டது என்பது அவளைச் சார்ந்தவர்கள் அனைவருக்கும் தெரியும். அவன் முதலில் அடிக்கவில்லை, மெதுவாக மிக மெதுவாக கிளிப்பிள்ளைக்கு பேச்சு சொல்வது போல சொல்லிப் புரிய வைத்தான்.

"நாங்க அவுஸ்திரேலியாவுக்கு போகப் போறம், இதெல்லாம் அங்க சரி வராது, அங்க PhD படிச்சவனுக்கே வேலை கிடைக்காம கடைவெளிய நிக்கிறான். உனக்கு அவ்வளவா இங்கிலீஷும் கதைக்க வராது. படிக்கிறதும் சாதாரண டிகிரி என்ன செய்யப் போறாய்? நான் வெளியில ஈஸியா போய்டுவன், நீ வாறதும் வராததும் உன்னோட விருப்பம். ஆனா வாறதா இருந்தா நல்ல தொழில் ஒண்டு எடுக்கணும், பிறகு தான் வரலாம்."

"நான் படிச்சனான் தானே, என்னால எங்கயும் வேலை எடுக்க முடியும். நான் எப்பிடியும் வேலை ஒண்டு எடுத்திடுவன். நீங்க பாக்கத்தானே போறீங்க..."

"நீ இங்க படிச்ச உந்த சின்ன படிப்ப வச்சு இங்கயே வேலை எடுக்கிறது கஷ்டம், உதில வெளிநாட்டில என்ன செய்ய ஏலும் ... ஒழுங்கா சொல்றத கேள், தேவை இல்லாம இப்பிடி நேரத்தை வீணடிக்காம ஏதும் படி, இல்லாட்டி என்னெண்டு வேலை எடுக்கிறது ?"

"என்னட்ட திறமையே இல்ல எண்டு ஏன் இவர் மட்டும் நினைக்கிறேர், இல்ல உண்மையிலேயே உலகத்தோட ஒப்பிட்டா எனக்கு வேலையே கிடைக்காதா?"....

அவனுக்கு நன்றாகத் தெரியும், அவளை ஒன்றுமே இல்லாமல் ஆக்குவது எப்படி என்பது... அவன் உண்மையில் அவளை கொல்லும் அளவுக்கு வெறுத்துக் கொண்டிருந்தான், ஆனால் வெளியில் இப்படியாக காய்களை நகர்த்திக்கொண்டிருந்தான். தனக்கிருக்கும் மனப்பிறழ்வுகளால் அவன் எப்போதோ மனிதர்களுடன் வாழும் தகுதியை இழந்து விட்டான் என்பது தெரியாமல் அவனை நம்பி அவனுக்காக அந்நிய தேசம் செல்வதற்காக தன்னை தகுதிப்படுத்த ஆரம்பித்தாள்.

பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணத் திற்காகத்தான் கண்ணனும், ஆரபியும் தயாராகிக் கொண்டு இருந்தார்கள். ஆரபிக்கு ஏதோ ஒன்று ஆழ்மனதில் தப்பாகவே தோன்றியது. எப்போதும் அவளைக் குறைத்துப் பேசுவதும், அவளின் சின்னச் சின்னச் சந்தோசங்களில் எல்லாம் தனக்கு மகிழ்ச்சி ஏற்படவில்லை என்று சொல்வதும், பெரியவர்களின் முன்னால் எப்போதும் அமைதியாகவே இருப்பதும், அபிப்பிராயம் சொல்ல வேண்டிய சாதாரண விடயங்களில் கூட கண்ணனின் அம்மாவே முடிவெடுப்பதும் இன்னும் இன்னும் நிறைய விஷயங்களில் கண்ணன் சரியாக இல்லை. இதெல்லாம் அவளின் எதிர்கால வாழ்க்கையைக் குறித்து அவளுக்குள் பயத்தை ஏற்படுத்தியது. நாளாக நாளாக அவனின் ஆணாதிக்க மனப்பாங்கும், அவனின் தாயின் அதிகாரப் போக்கும் எல்லோரையும் தாங்கொணாத் துன்பத்திற்குள் தள்ளியது.

ஆரபி தினமும் அழுவதும், ஏதோ ஒரு உப்புப் பெறாத சிறிய விஷயத்திற்காக அவளை குறை சொல்வதுமாக தொடர, ஒருநாள் இந்த வாழ்க்கையில் தனக்கு எதிர்காலம் இல்லை என்ற முடிவிற்கு வந்தாள்.

பெற்றோர்கள், உறவினர்கள் எல்லோரும் அவளுக்கு புத்தி சொன்னார்கள், "நிச்சயித்த கல்யாணம் நிண்டு போனா பிறகு கஸ்டமடி, சொன்னா கேள், மாமியார் எண்டா அப்பிடித்தான். மாப்பிள்ளையும் இஞ்சினியர் படிச்ச ஆள் தானே! நீ கட்டிட்டு வெளில போ, எல்லாம் சரியா வரும்"...

அவள் யார் பேச்சையும் கேட்பதாக இல்லை, அவள் ஒரே ஒரு கேள்வி கேட்டாள், அனைவரும் அதற்குப் பிறகு வாயைத் திறக்கவே இல்லை.

"கல்யாணத்துக்குப் பிறகு சரிவரேல எண்டு ஒரு பிள்ளையோட வந்து நிண்டா நீங்க எல்லாரும் சந்தோசமா இருப்பீங்களோ? உங்கட கௌரவத்துக்கு என்ர வாழ்க்கையைப் பலியாக்கிப் போடாதீங்கோ."

அத்துடன் கல்யாணம் நிறுத்தப்பட்டது. அதற்குப் பிறகும் உறவினர்களாலும், கண்ணனின் குடும்பத்தாலும் நிறையப் பிரச்சினைகளை ஆரபியும், அவளின் குடும்பமும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. கண்ணன் அடுத்த வருடமே வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து குழந்தையும் பிறந்து விட்டது என்று பலரும் ஆரபியின் காது படவே பேசினார்கள். அவள் எதையுமே பொருட்படுத்தவில்லை.

காலம் தான் எல்லாவற்றுக்கும் மருந்தாக இருக்கும் என்பது எவ்வளவு உண்மை. அவள் தொடர்ந்தும் தனது திறமைகளை வளர்ப்பதிலும், படிப்பதிலும் கவனம் செலுத்தினாள். எதெல்லாம் அவளிடம் இல்லை என்று கண்ணன் சொன்னானோ, அவை எல்லாவற்றையும் அவள் அடைந்தாள். பல்கலைக் கழகத்தில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளிலும் அவளின் பங்களிப்பு இருந்தது, போட்டி நிகழ்ச்சிகள் பலவற்றில் தேசிய ரீதியில் வெற்றியீட்டினாள். ஆங்கில விவாத மேடைகளிலும் பங்குபற்றினாள். அவள் கடந்த ஐந்து வருடங்களில் கடந்து வந்த பாதை மிகவும் கடினமானது, ஆனால் சோதனைகள் அவளை இன்னும் பலமாக்கின.

ஆரபி பல்கலைக் கழகத்தில் இரண்டு உயர்படிப்புகளை நாட்டியத்தில் முடித்து, விரிவுரையாளர் வேலை எடுத்த பிறகும் கூட அவளுக்கு வேறு திருமணம் நடக்கவில்லையே என அவளின் பெற்றோர்கள் மனம் வருந்தினார்கள்.

ஆரபியின் நண்பர்கள் பலரும் அவளுக்கு ஆறுதலாக இருந்தார்கள், அவள் தன்னுடன் கூடப் படித்த தர்சிகனை காதலித்து மணமுடித்தாள். தர்சிகன், அவளின் எல்லாமுமாக இருந்தான். எப்படியான ஒரு வாழ்க்கையை அவள் கனவு கண்டாளோ அப்படியான ஒரு வாழ்க்கையை அவள் வாழ்ந்து கொண்டிருந்தாள்.

இப்படியாக பலவற்றைக் கடந்து, ஆரபியின் வாழ்க்கை கண்ணனின் நினைவுகள் கூடப் பாதிக்காத வண்ணம் சென்றுகொண்டிருக்கும் ஒரு நாளில் மறுபடி அவனை சந்திக்க நேர்ந்தது.

ஆரபி, அவளின் நண்பி சந்தியாவுக்காக வரவேற்பறையில் காத்திருக்கும் போது, கண்ணனும் அவனின் மனைவியும் அதே வரவேற்பறையில் காத்திருந்தார்கள். ஆரபிக்கு வெளியே போவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை.

"சந்தியா வெளியில வருவாள் தானே அப்ப பாப்பம், நாளையான் ப்ரோக்ராமுக்கு அவளைக் கண்டிப்பா பிரதம விருந்தினராக் கூப்பிடணும், அவளைப் பார்த்தா, அவளிண்ட பேச்சைக் கேட்டா கண்டிப்பா படிக்கோணும் எண்டிற உத்வேகம் வரும் பிள்ளையளுக்கு..., ஆனாலும் அவளிண்ட கிளினிக்குக்கு வந்திருக்கினம் எண்டா கண்டிப்பா பெரிய பிரச்சினை இருக்கணும். சந்தியாட்ட கண்டிப்பா இதப்பத்தி கேக்க கூடாது, என்ன இருந்தாலும் எனக்கு தேவை இல்லாத விஷயம்"

கொஞ்சம் கொஞ்சமாக பழைய நினைவுகள் மேலெழ, அவள் கடினப்பட்டு நிகழ் காலத்துக்குள் தன்னை சிறைப்படுத்தினாள். அவள் வெளியே அரைமணிநேரம் காத்திருக்கவும், சந்தியா வேலை முடித்து வரவும் சரியாக இருந்தது.

"சொறியடி, காக்க வைச்சிட்டன் போல. மன்னிச்சிக்கொள்ளு.. என்ன செய்ய. கடைசி நேரத்தில சில பேர் புக் பண்ணி வருவினம், அதான் லேட்டாகிட்டு, வா வீட்டை போய்க்கொண்டு கதைப்பம், கன நாளாகிட்டு உன்னோட கதைச்சு..." என்றபடி காரில் பயணித்தார்கள்.

வேலை, குடும்பம், வாழ்க்கை, நாட்டுநடப்பு எண்டு பல விஷயங்களையும் உரையாடிய பின்னர் சந்தியாவே அந்தக் கேள்வியைக் கேட்டாள்.

"உனக்கு வெளியில கண்ட ஆளை நினைவிருக்கா?"

ஓமடி, எப்பிடி தெரியாம போகும். எண்ட வாழ்க்கையை அழிக்கப் பார்த்த ஆள் எல்லோ.

"நீ சொன்னது சரிதான், உண்ட வாழ்க்கையை மட்டும் இல்ல, கூட வாழ்ற ஆக்கள் எல்லாரையும் அழிக்கக் கூடிய ஆள்தான், இப்ப அந்த ஆளிண்ட மனிசிக்கு மனநிலை பிரச்சினை எண்டு கொண்டு வருது. இப்பிடியான ஆக்களோட இருந்தாலே அது மனநிலையை பாதிக்கும் தானே. பாவம் பிள்ளையும் ஒண்டு இருக்கு, ஸ்கூல் போகுது போல, ஆனா பெரிசா அக்ட்டிவ் இல்லாத பிள்ளை. எல்லாத்துக்கும் காரணம் உந்த ஆள் தாண்டி. நீ தப்பிட்ட, நீ எடுத்த முடிவு அண்டைக்கு கன பேருக்கு பிழையா தெரிஞ்சிருக்கலாம், ஆனா இன்டைக்கு விளங்கும் எவ்வளவு சரி எண்டு."

"சும்மா விடடி, சனங்கள் நேற்று பிழை எண்டு கதைக்கும், இண்டைக்கு இப்பிடி ஆகிட்டு சரி எண்ணும். ஆனா நான் மனசளவில பாதிக்கப் படேக்க எண்டோட கூடவே இருந்து எனக்கு சரியாய முடிவெடுக்க உதவினது நீதானே, நீ மட்டும் அண்டைக்கு இல்லாட்டி, நான் அந்தப் பிள்ளையிண்ட நிலைமையில நிண்டிருக்கோணும், இது யாருக்கு புரியுமோ இல்லையோ எனக்கும் உனக்கும் புரியும். நிச்சயம் பண்ணின கொஞ்ச மாசத்திலையே என்ன மனசளவில காயப்படுத்தி, என்னோட குறைகளை மட்டுமே பூதக்கண்ணாடி வச்சுப் பார்த்து, நான் வாழவே தகுதி இல்லை எண்டு என்னை தற்கொலை எண்ணங்களுக்கு கொண்டு போய்

கொடுமைப்படுத்தினவன கட்டியிருந்தா , ஐயோ இப்ப நினைச்சாலும் பயமா இருக்கு... கடவுள் என்னோட தான் இருக்கிறேர்."

"இதெல்லாமே தன்னுடைய தாழ்வுச்சிக்கலிண்ட வெளிப்பாடு தான், நீ ஒண்டும் யோசிக்காத... விடு."

"எனக்கு இன்னமும் பிடிபடாத விஷயம் எல்லாம், எப்படி ஆக்களின்ட மனசில இருக்கிற குறைபாட தெரிஞ்சு கொள்றது? உடலில குறைபாடு எண்டா கூட வாழலாம், ஆனா மனசில ஊனம் இருந்தா எப்பிடி வாழ ஏலும்? இது எந்த அறத்தில சேரும்? வெறுமனே நாங்க கல்யாணம் எண்டோன குடும்பம் எப்பிடி, படிப்பென்ன, வேலை என்ன, வருமானம் எப்பிடி எண்டு விசாரிக்கிறம் ... ஆனா இதெல்லாம் மட்டுமே போதுமா? இதெல்லாம் தான் ஒரு ஆளை அறிஞ்சு கொள்ளக் கூடிய அளவுகோலா?"

"ஆரபி, இதால தான் இண்டைக்கு பலபேர் கல்யாணம் முடிஞ்சோன மற்ற முகம் தெரிய வந்திட்டு எண்டு பொதுவா சொல்லீனம், ஆனா நாங்க மட்டும் கதைச்சு என்ன மாறப்போகுது சொல்லு? இண்டைக்கும் டொக்டர், இன்ஜினீயர் மாப்பிள்ளை என்டோனா தரகர்மார் சீதனம் கூட்டிக் கேக்கிறதும், இல்லாட்டி கல்யாணம் பேசேக்க பெத்தவே தங்கட எதிர்பார்ப்பு இவ்வளவு எண்டு மற்ற உறவுகள் மூலமா சொல்றதும் வழமை தானே, பிரச்சினை எண்டு சொன்னா பிள்ளை பிறந்தோன மாறிடும் எண்டுறதும், பிள்ளை பிறந்தும் பிரச்சினை எண்டா பிள்ளையும் பிறந்திட்டு இனி என்ன மாத்த ஏலும், விலக ஏலாது எண்டு சொல்றதும் தானே எங்கட சமூக வழக்கம். இப்பிடியெல்லாம் இருந்து கொண்டு நாங்க மேடையேறி சாதிக்கணும், முன்ன மாதிரி இல்ல இப்ப. முன்னேறிட்டம் எண்டும் சொல்லுவாங்களே அதுதான் பகிடி."

"என்னவோ மனசு ஒரு மாதிரியா படபடப்பாவே இருக்கடி, நீ சொல்றதெல்லாம் யோசிக்கேக்க கோவம்தான் வருகுது. சரி அதை விடு, நாங்க எங்கட கதைக்கு வருவம். நாளையான் ப்ரோக்ராமை பத்தி கதைப்பம்..."

---

**மொழியாக்கம்**

*கவிதை*

# நினைவுக் காகிதம்

*ஏதேனுமொரு நாளில் நீ விரும்பும் பகுதியில்*
*மீண்டுமொருமுறை எங்களால் சந்தித்திட முடியும்*
*விடைபெறுதலின் தகவலை எழுதியனுப்பிய கடிதம்*
*புத்தக மேசையின் அடியிலிருந்து*
*மேலே வருகின்ற தடவைகளை*
*கணக்கிட இயலாமலுள்ளது*
*ஆயிரத்து இருநூற்றி பதின்நான்கு வார்த்தைகளில்*
*நீ எழுதி வைத்திருந்தவை*
*மனப்பாடம் எனக்கு இப்போதும் சொல்லிட முடியும்*
*சிறியதொரு கட்டுரையேனும் எழுதிடாத*
*உன்னைப் பற்றி எனக்கு ஆச்சரியம் அதிகம்*
*புள்ளிகளும் அரைப் புள்ளிகளும் அறுநூறுக்கும் அதிகம்*
*கேள்விக் குறிகள் அளவுக்கு அதிகம்*
*இவற்றுள் ஒரு சிலவற்றுக்காவது நான்*
*பதில் தேடிக்கொள்ள வேண்டும்*
*(இல்லையேல், உன்னிடம் கேட்டு*
*தெரிந்துகொள்ள வேண்டும்)*
*அப்போது என்னால்,*
*கிழிந்த சட்டையை தைத்துக்கொள்ள முடியும்*
*உடைந்த கதிரை, மேசைகளை ஒருபுறம் தள்ளி*
*உடைந்த வெற்று போத்தல்களை*
*ஆங்காங்கே போட்டு வைக்காமல்*
*சிலந்தி வலைகளை அகற்றி*
*தூசு படிந்த கட்டில் விரிப்பினைக் கழுவி*
*ஒரு நாளைக்கு ஒரு தடவையேனும்*
*உன்னை*
*மறந்திட முடியும்.*

*சிங்கள மூலம்: ரஞ்சித் பிரியந்த*
*தமிழில் – இப்னு அஸூமத்*
**Ranjith Priyantha**

# புதிய டொக்டர் சகுந்தலா நோயாளர்களைப் பார்க்கிறார்

*புதிய டொக்டர் சகுந்தலா
நோயாளர்களைப் பார்க்கிறார்*

*வாயைத் திறவுங்கள்
நாக்கை வெளியில் நீட்டுங்கள்
கண்களை உருட்டுங்கள்*

*எலிக் காய்ச்சல் போல
எபெண்டிசயிட்ஸ் போல
ஆதரயிட்ஸ் போல*

*விடமின் குறைவு
இரத்தம் குறைவு
பூச்சித் தொல்லை*

*நோயாளர்கள் மத்தியிலும் சகுந்தலாவுக்கு
துஸ்யந்த
நினைவுக்கு வருகிறான்*

*வரிசையில் நிற்கின்ற நோயாளர்களில்
மூன்று பேர் துஸ்யந்தவைப் போல்*

*அதே உயரம்
அதே பருமன்
அதே நிறம்*

*புதிய டொக்டர் சகுந்தலா
நோயாளர்களைப் பார்க்கிறார்*

*வயிற்றை அழுத்திப் பார்க்கிறார்
கையைப் பிடித்துப் பார்க்கிறார்
நெற்றியில் கை வைத்துப் பார்க்கிறார்*

*நோயாளர்கள் மத்தியிலும் சகுந்தலாவுக்கு
துஸ்யந்த
நினைவுக்கு வருகிறான்*

*வரிசையில் நிற்கின்ற நோயாளர்களில்
மூன்று பேர் துஸ்யந்தவைப் போல்*

*000*

*'துஸ்மந்த 10 சகுந்தலா'
யாரடா மேசைகளின் மேல்
சுவர்களில் தூசணத்தை எழுதியிருப்பது?
வகுப்பாசிரியர் கேசர சிங்கநாதமிடுகிறார்.*

*'துஸ்மந்த 10 சகுந்தலா'*

*'சகுந்தலா 10 துஸ்மந்த'*

*'துஸ்மந்த சகுந்தலாவின்
கைகளைப் பிடித்துக் கொண்டிருந்தான்'*

*'முகத்தைப் பிடித்துக் கொண்டிருந்தான்'*

*'சகுந்தலா துஸ்மந்தவுக்கு
கடிதமொன்றைக் கொடுத்தாள்
சொக்கலெட் கொடுத்தாள்'*

*'11 ஏ வகுப்பு
கல்யாண கொட்டகை'*

*000*

*புதிய டொக்டர் சகுந்தலா
நோயாளர்களைப் பார்க்கிறார்*

*வரிசையில் நிற்கின்ற நோயாளர்களில்
மூன்று பேர் துஸ்யந்தவைப் போல்*

*மரத்திலிருந்து விழுந்து நேற்றைக்கு முன் தினம்
மருத்துவமனை டிரொலியில் வைத்து
இருந்தான் வானத்தைப் பார்த்து நித்திரையில்
நெஞ்சில் காதல் இருந்திருக்கலாம் அன்று*

*மனைவி சொல்லக்கூடியவற்றை சொல்லியவாறு
சின்ன மகளுடன் சேர்ந்து
டிரொலி கடுங் குளிரென தெரிந்தது
அவர்கள் இருந்தது இருட்டு கனவுகளில்*

*புதிய டொக்டர் சகுந்தலா
நோயாளர்களைப் பார்க்கிறார்*

*நோயாளர்களைப் பார்த்துக் கொண்டிருந்தாலும்
திடீரென துஸ்மந்தவின்
ஞாபகம் வருகிறது*

*வரிசையில் நிற்கின்ற நோயாளர்களில்
மூன்று பேர் துஸ்யந்தவைப் போல்*

*'துஸ்மந்தவுக்கு இப்படித்தான் வேண்டும்
'ஏ' வகுப்பில் இருந்தாலும் அவனுக்கில்லை
சகுந்தலா ஏ ஒன்பது எடுத்து
சென்றாள் டவுன் ஸ்கூலுக்குப் பறந்து'*

*சிங்கள மூலம் சமித்த பீ. அடுவபென்தேல
தமிழில் : இப்னு அஸூமத்*

**Samitha B. Attuwabendela**



பதிவும்
பகிர்வும்

# யாழ் சர்வதேச புத்தகத் திருவிழா

*ச. தனுஜன்*

"இந்தப் புத்தகமும் புத்தகத் திருவிழாவில் வாங்கியதுதான்." என்றாள் ஏழு வயது ஆத்விகா.

எனக்கென்றால், மூன்று நாளும் முழுதாய் அங்கேயே கிடந்தேனே, எனக்கு இந்தப் பெயர் மனதில் பதியவில்லை. இவள் போன சனிக்கிழமை மாலை, ஒரு முறைதான் வந்து சென்றாள். மூன்று நாட்கள் கடந்த பின்பும் அதன் நினைவுகளில் திளைத்திருக்கிறாளே, என்ற ஆச்சரியம் இன்னும் குறையவில்லை.



இரண்டாவது யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழாவில் இம்முறை தேசிய கலை இலக்கியப் பேரவைக்கான காட்சியறை ஒன்றையும் அமைக்க வாய்த்தது. கடந்த பதினைந்து வருடங்களுக்கு மேலாகத் தேசிய கலை இலக்கியப் பேரவையின் புத்தகப் பண்பாட்டுப் பணியிலே இணைந்து செயற்பட்டுவரும் எனக்கு, அறுபதுக்கு மேற்பட்ட புத்தகக் கண்காட்சிகளை இலங்கையின் பல பாகங்களிலும் முன்னெடுத்திருந்தபோதும், இது ஒரு புது அனுபவமாகவே இருந்தது.



வேலை நாளான வெள்ளிக்கிழமை வந்த மக்களின் எண்ணிக்கை ஆச்சரியத்தைத் தந்தது. அவ் வாரம் பாடசாலைகளுக்கு விடுமுறைக் காலமாக இருந்தமையும் அதற்கொரு காரணமாக இருக்கலாம். அடுத்த இரண்டு நாட்களும் அதைவிடவும் அதிகமானோர் வருகை தந்தனர். கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, கொழும்பில் இருந்தெல்லாம் பலர் வந்திருந்தனர். ஆனாலும், போன வருடம் போல இல்லை என்று சிலர் சொன்னதைக் கேட்க முடிந்தது.




யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சியினைக் கடந்த பல வருடங்களாக மிகவும் வெற்றிகரமாக நடாத்தி வரும் யாழ்ப்பாண வர்த்தகத் தொழில்துறை மன்றத்தினரும், அதன் தற்போதைய தலைவரான குலசிங்கம் வசிகரன் அவர்களும் நிச்சயமாகப் பாராட்டப்படவேண்டியவர்கள். இத்தகையதொரு பிரமாண்டமான முன்னெடுப்பு அவர்களால் மாத்திரமே சாத்தியமாக்கப்படக்கூடியது.

இத்தகையதொரு நிகழ்வு இன்னும் விரிவாக்கப்பட வேண்டும். இதை ஒரு வியாபார நோக்குடைய நிகழ்வாகப் பார்க்காது, கல்வியோடும் எமது சமூகத்தின் அறிவு விருத்தியோடும் தொடர்புடைய விடயமொன்று என்பதை அனைவரும் உணர்ந்து கூட்டிணைய வேண்டும்.



குறிப்பாக யாழ் மாநகர சபை, வடக்கு மாகாணப் பாடசாலைகள் (வட மாகாண கல்வி அமைச்சு), யாழ்ப்பாண வர்த்தகர் சங்கங்கள், இலங்கை இந்திய மற்றும் புலம்பெயர் புத்தக வெளியீட்டாளர்கள் (தமிழில் வெளியீடுகளைச் செய்வோர்.) ஊடகங்கள் இதற்குத் தமது முழுமையான ஒத்துழைப்பினை வழங்கவேண்டும்.



பரவலாகப் பாடசாலை மாணவர்கள் வந்து பார்த்துச் செல்லக்கூடிய வகையில் நாட்கள் அதிகரிக்கப்பட வேண்டும். காட்சிக் கூடங்களும் இயன்றவரை விரிவாக்கப்படவேண்டும்.

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தின் அனுசரணையும் ஒத்துழைப்பும் இன்னும் அதிகமாகக் கிடைக்குமானால் சிறப்பு. ஏனெனில் அதன் முன் பகுதியின் இரண்டு தளங்களும் கண்காட்சிகளை நடத்துவதற்காகவே அமைக்கப்பட்டுள்ளன. இப் பகுதியில் ஏழாலை சித்திவிநாயகர் நூலகம் போன்ற பழைய புத்தக சேகரிப்பாளர்களிடம் இருந்து அரிய புத்தகங்களைப் பெற்றுக் காட்சிப்படுத்துவது பயனளிக்கும்.

இதனுடன் இணைந்ததாக யாழ் பொதுசன நூலகமும் சில செயற்பாடுகளை முன்னெடுக்கலாம். வடக்கு மாகாண அரச நூலகங்கள் (வட மாகாண உள்ளூராட்சி அமைச்சு) இதனைப் பயன்படுத்திப் புத்தகக் கொள்வனவுகளை மேற்கொள்ளலாம்.

இன்னும் சிறப்பாக இலக்கிய நிகழ்வுகள், நூல் வெளியீடுகள், ஆய்வரங்குகள், கலந்துரையாடல்கள் மற்றும் கலை நிகழ்வுகளை முன்னெடுக்க வேண்டும். இத்தகையதொரு சந்தர்ப்பத்தைச் சரிவரப் பயன்படுத்த எமது எழுத்தாளர்களும் வெளியீட்டாளர்களும் முயல வேண்டும்.

உண்மையில் இதுவொரு திருவிழாவாகவே அடுத்த வருடம் இடம்பெற வேண்டும்.




















ஆய்வரங்கு

# திருக்குறளின் கல்விச் சிந்தனை சமூக நோக்கில் ஒரு மறு வாசிப்பு

*சு. ஸ்ரீகுமரன் (இயல்வாணன்)*


நமது பண்பாடு சார்ந்து, கீழைத்தேய பண்பாட்டுருவாக்கத்தில் முதன்மை பெற்று இந்துத்துவம் சார்ந்து, இந்துத்துவ தத்துவஞ்சார்ந்து, மார்க்சியம் சார்ந்து பல்வேறு ஆய்வு நூல்களை இலக்கியவுலகுக்குத் தந்தவர் ந. இரவீந்திரன் அவர்கள். அவர் தனது கலாநிதி பட்டத்துக்காக சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு சமர்ப்பித்த ஆய்வேடு 'திருக்குறளின் கல்விச் சிந்தனை' என்பதாகும். அதனை அதே வடிவில் நூலாக்கியுள்ளார்.

திருக்குறளின் கல்விச் சிந்தனையை சமூக நோக்கில் மறு வாசிப்புக்கு உட்படுத்துவதாக இவ்வாய்வேடு உள்ளது. திருக்குறள் தொடர்பில் பல நூறு ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. அநேகமான ஆய்வுகள் திருக்குறளை ஒரு புனிதப் பொருளாக எடுத்து அது காட்டும் சிறப்புகளை வெளிப்படுத்துவனவாகவே உள்ளன. புறநிலை நின்று திருக்குறளைப் பார்ப்பதை அத்தகைய ஆய்வுகள் தவிர்க்கின்றன.

மாறாக, கலாநிதி ந. இரவீந்திரன் புறநிலை நின்று திருக்குறளை அணுகியிருக்கிறார். வழக்கமான ஆய்வு அணுகலைத்தான் இவ்வாய்வேடும் கொண்டுள்ளதெனிலும் இரவீந்திரன் அவர்களிடம் இருக்கின்ற பார்வையையும் இதனுள் உட்பொதிந்திருக்கிறார்.

குறிப்பாக, திருக்குறள் ஒரு இயங்கியல் அணுகலைக் கொண்டிருப்பதை அவர் வெளிப்படுத்துகிறார்.

கருத்துமுதல் வாதக் கருத்துகள் துருத்திக் கொண்டிருந்தாலும் பொருள்முதல்வாதக் கருத்துக்களை அவர் கொண்டிருக்குமாற்றை வெளிப்படுத்தி திருவள்ளுவர் பல இடங்களில் கார்ல் மார்க்சுடன் இணங்கிச் செல்கிறார் என்பதை வலியுறுத்துகிறார். 'நில்லாதவற்றை நிலையின என்றுணரும் புல்லறிவாண்மை கடை' என்பது இயங்கியல் அணுகுமுறைபடி என்கிறார்.




திருக்குறள் தனது கருத்துகளை ஈரடி வெண்பாவால் வலிதாக முன்வைத்த போதும் திருக்குறள் எழுந்தமை தொடர்பிலும், திருவள்ளுவர் தொடர்பிலும், பின்வந்த உரைகள் தொடர்பிலும் இடியப்பச் சிக்கலே நிலவி வந்துள்ளன.

இன்றளவும் திருக்குறள் எழுந்த காலம் தொடர்பில் சரியான வரையறைகள் இல்லை. திருவள்ளுவரின் பிறப்பு தொடர்பிலும், அல்லது சாதி தொடர்பிலும், மதம்தொடர்பிலும் பல்வேறு ஊகங்களும் கட்டுக் கதைகளும் உள்ளன. திருக்குறள் வெவ்வேறு கால கட்டங்களில் எழுந்த பாடல்களைத் தொகுத்த ஒன்று என்ற கருத்துக் கூட உள்ளது. இவை பற்றியெல்லாம் இந்த நூலின் இரண்டாவது இயலில் விரிவாகப் பார்க்கப் பட்டுள்ளது.

திருக்குறள் எழுந்து ஆயிரம் முதல் இரண்டாயிரம் ஆண்டு வரையான காலத்திலேயே அதற்கான உரைகள் எழுதப்பட்டன. அத்தகைய உரைகள் தொடர்பிலும், குறிப்பாக மணக்குடவர், பரிமேலழகர் உரைகள் தொடர்பில் பல்வேறு அறிஞர்கள் முன்வைத்த விமர்சனங்களையும் உள்வாங்கி விரிவாக இந்நூலில் ஆராயப்பட்டுள்ளது. ஏனைய உரையாசிரியர்களான காலிங்கர், பரிப்பெருமாள், பருதியார் தொடர்பிலும் இந்நூலில் ஆராயப்பட்டுள்ளது.

திருவள்ளுவர் காலத்தில் பல்வேறு மதங்களினதும் ஆதிக்கம் நிலவியது. வர்க்க பேதம் மிக்க சமூகக் கட்டமைப்பு நிலவியது. ஆயினும் ஏற்றத்தாழ்வற்ற சமூகப் பொதுமையைத் திருவள்ளுவர் அவாவினார் என்பதை கலாநிதி ந. இரவீந்திரன் பல்வேறு அறிஞர்களின் கருத்துக்கள் வாயிலாக இந்த ஆய்வில் வலியுறுத்தி உள்ளார்.

குறிப்பாக "அந்தணர் என்பவர் அறவோர் மற்றெல்லாவுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலால்" என்ற குறளை முன் வைத்து அந்தணர் என்ற பதம் பிராமணர் என்ற சாதியைக் குறிக்கவில்லை. "எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாத எவரும் அந்தணர்" என வலியுறுத்துமாற்றைக் குறிப்பிடலாம்.

அதுபோல திருவள்ளுவர் சாதியை– சாதிப்பாகுபாட்டை– நிராகரித்த ஒருவர் 'பிறப்பொக்கும் எல்லாவுயிக்கும்' என்பதனூடாக 'எல்லோரும் சமமானவர்கள்' என்ற கருத்தை அவர் முன்வைக்கிறார் என்பதை இந்த ஆய்வு வலியுறுத்துகிறது.

அதேவேளை திருவள்ளுவர் எந்த மதத்தைச் சார்ந்தவர் என்பதையோ, எந்த மதக் கருத்துக்களை அதிகம் வலியுறுத்துகிறார் என்பதையோ காண முடியாது. குறிப்பாக, அவர் எவ்வாறு வைணவம் முதலான கருத்து நிலைகளில் இருந்து மாறுபடுகிறார் என்பதை வெளிப்படுத்துவதனூடாக அவர் சமய சார்பற்றுச் செயற்பட்டுள்ளார் என்பதை இந்த ஆய்வு பேசுகிறது.

கடவுள் கோடபாட்டைத் திருக்குறள் கொண்டிருக்கிறது. அது அவரவர் பின்பறுகின்ற கடவுளுக்குப் பொதுவானது.

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு'

இங்கு குறிப்பிடும் ஆதி பகவனே கடவுள். அந்தக் கடவுள் யாரென்பதை பின்வந்த உரையாசிரியர்களில் வைணவரான பரிமேலழகர் கூட குறிப்பிடவில்லை. வள்ளுவரை புரிந்த வகையில்– அவரது கருத்து நிலையை– விளங்கிய வகையில் பரிமேலழகரும் மதச் சார்பின்மையைத் தனது உரையிலே வலியுறுத்தி யுள்ளார்.

பிராமணரான பகவனுக்கும் புலைச்சியான ஆதிக்கும் பிறந்த 7 பிள்ளைகள் பல்வேறு சாதிகளி டத்தும் வளர்ந்தனர். அவர்களில் ஒருவரே வள்ளுவர் என்று 'கபிலர் அகவல்' நூல் கூறுகிறது என்பதற்கமைய தனது தாய் தந்தையரையே திருவள்ளுவர் கடவுளாகக் கருதினார் என்று கூறுவோரும் உளர்.

எவ்வாறாயினும் திருக்குறள் எந்த மதஞ் சார்ந்தும், எந்த மதங்கள் வலியுறுத்தும் தத்துவங்கள் கருத்து நிலைகள் சார்ந்தும் வெளிப்பாடடையவில்லை என்பதை இந்த ஆய்வு வலியுறுத்துகிறது.

கல்வி என்பது அந்தந்த சமூகங்களின் கருத்துநிலைக் கூடாகக் கட்டமைக்கப்படுவது. அந்தக் கருத்துநிலை என்பது மதங்களுக்கூடாக அதிகாரத்தால் கட்டமைக்கப்படுவது. எனவே, திருக்குறள் வலியுறுத்த விளையும் கல்வி என்பது சமத்துவ நோக்குடையது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆயினும் திருக்குறள் ஆண் மைய நோக்கில் எழுதப்பட்டது. பெண்ணை உடைமைப் பொருளாகப் பார்க்கின்ற, பெண் ஒடுக்குமுறைக் கருத்துக்களைக் கொண்டது என்பதை ராஜம் கிருஸ்ணன் முதலானோர் சுட்டிக் காட்டி பெண்ணிய விரோதக் கருத்துக்களை நீக்கிய திருக்குறள் பதிப்பு வரவேண்டும் என வலியுறுத்தியதை இந்நூல் பேசுகிறது.

ஆயினும் பெண்வழிச் சேறல், வரைவின் மகளிர் ஆகிய இரு அதிகாரங்களும் குடும்ப வாழ்க்கைக்கு இடையூறாகும். பெண்மையினைக் கடிந்துரைக்கிறது. குடும்ப வாழ்க்கை சீர்குலையக் கூடாது என்ற நன்நோக்கிலேயே வள்ளுவர் இத்தகைய கருத்துகளை முன் வைக்கிறார். அதற்காக பெண்ண்டிமைத் தனத்தை வள்ளுவர் வலியுறுத்துகிறார் என்று வாதிடுவது பொருத்தமானதல்ல" என்று தாமரைச்செல்வி, காமாட்சி சீனிவாசன் முதலானோர் வாதிடுவதும் கவனிக்கத் தக்கது.

திருக்குறளைக் கல்வியுடன் பிணைப்பதற்காக நூலாசிரியர் நான்கு இயல்களை ஆக்கியுள்ளார். கல்விச் சிந்தனைப் பின்புலம், கல்வி, சமூக மாற்றமும் கல்வியியலாளரும், கல்விச் செல்நெறியில் திருக்குறள் என்பவையே அவை.

கல்விச்சிந்தனைப் பின்புலம் என்பதிலே தமிழகச் சூழலில் கல்வி எவ்வாறு மேம்பட்டது என்பதை வரலாற்று மூலாதாரங்களில் இருந்து இவ்வாய்வு முன்வைக்கிறது. திருக்குறள் தோன்றவதற்கு ஆயிரம் வருடங்களுக்கு முன்னரே தமிழகம் இரும்பு கண்டுபிடிப்புடன் துரித வளர்ச்சி அடைந்தது. நீலமணிக் கற்கள், முத்து, ஏலம், கறுவா, இஞ்சி என்பன கிரேக்கம் முதலான தூர தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

"எகிப்தின் நைல் நதி முகத்துவாரத்தைச் சேர்ந்த அலெக்சாண்டிரியா துறைமுகத்தில் வாழ்ந்த கிரேக்க வணிகன் ஒருவனுக்கும், தமிழ் வணிகனுக்கும் இடையே பப்ரிஸ் புல் தாளில் கிரேக்க மொழியில் ஒப்பந்தம் ஒன்று எழுதப்பட்டுள்ளது.இது வியன்னா அருங்காட்சியகத்தில் உள்ளது" இது போன்ற தகவல்கள் மூலம் பல்வேறு நாடுகளுக்கு இடையே தமிழர்கள் வாணிபம் செய்தமையையும், அதன் காரணமாக பல மொழிகளை அவர்கள் அறிந்து வைத்திருந்தமையையும் இந்நூல் பேசுகிறது.

எழுதுருவாக்கம், நெடுங்கல்– நடுகல்– முதுமக்கள் தாழி என்பவற்றூடாக கண்டடையப்பட்ட பண்பாட்டுத் தொடர்ச்சி, இதன் மூலமாக ஏற்பட்ட கல்வி வளர்ச்சி பற்றி இந்த இயலிலே விரிவாகப் பார்க்கப்பட்டுள்ளது.

சிந்துவெளி நாகரீகத்துக்கு முன்னரே கல்விச் செழுமை மிக்க நாகரீகம் ஒன்று தமிழகத்திலே நிலவியது. அது வணிகத்தால் மேம்படுத்தப்பட்டது எனபதை இந்த இயலிலே நாம் அறிந்து கொள்ளலாம்.

வணிக எழுச்சியில் மக்கள் ஆர்வம் அதிகரித் திருந்த சூழலிலேயே உற்பத்தியை/ பயிர் உற்பத்தியை அதிகரிக்க வலியுறுத்தி திருவள்ளுவர் 'சுழன்றும் ஏர் பின்னது உலகம்' என்று எழுதினார் என்பதையும் இந்த இயல் சுட்டிக்காட்டுகிறது.

கல்வி என்ற இயலிலே கல்வியின் நான்கு தூண்களான *(Pillers)* அறிதலுக்காக, செய்வதற்காக, வாழ்வதற்காக, சேர்ந்து வாழ்வதற்காக கற்றல் என்பன ஆராயப்பட்டு அதற்கிணங்க திருக்குறள் பொருந்தி வருமாற்றை விபரிக்கின்றது.

அறிவுடமை, மக்கட்பேறு, கல்வி, கல்லாமை அதிகாரங்களில் வரும் குறள்களூடாக இதனை இவ்வாய்வு நிறுவ விழைகிறது.

சமூக மாற்றமும் கல்வியியலாளரும் என்ற இயலினூடாக கல்விசார் நிறுவனங்கள் எவ்வாறு தோன்றின? சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதில் கற்றவர்கள் எவ்வாறு பங்களித்தனர்? ஆசிரிய உருவாக்கம் எவ்வாறு நேர்ந்தது? சமூக மாற்றத்தின் முகவராக ஆசிரியர் எவ்வாறுசெயற்பட்டார்? அதனை ஆசிரியர் சார்ந்து திருக்குறள் எந்தெந்த இடங்களில் தொட்டுச் செல்கிறது? என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். கி.பி. முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த திகம்பரச் சமணச் சான்றோராகிய குந்த குந்தாச்சாரியார் தாம் இயற்றிய பிலவசன சாரத்தில் சித்தர், அருகர், ஆசாரியார், உபாத்தியாயர், சாதுக்கள் ஆகிய பஞ்சபரமேட்டிகளைக் குறிப்பிட்டு உள்ளார். காசு பெறாமல் கற்பிப்பவர் ஆச்சாரியார். காசு பெற்றுக் கற்பிப்பவர் உபாத்தியாயர்" முதலிய தகவல்களை இந்நூல் தந்துள்ளது.

குருகுலப் பள்ளிகள், திண்ணைப் பள்ளிகள், நிலாப்பள்ளிகள், கோயிற் பள்ளிகள், பட்டறைப் பள்ளிகள், சங்கம் முதலிய கற்றல், கற்பித்தல் அமைப்புகள் காணப்பட்ட செய்திகளும் இவ்வியலில் விரவியுள்ளன.

கல்விச் செல்நெறியில் திருக்குறள் என்ற இயலில் கல்விச் சிந்தனையாளர்களான பிளேட்டோ, சாக்கிரடீஸ, அரிஸ்டாட்டில், ரூசோ, ஜோன்டுயி, புரொபெல் ஆகியோரின் கருத்துகள், கீழைத்தேய சிந்தனை மரபில் வந்த விவேகானந்தர், இரவீந்திரநாத் தாகூர் ஆகியோரின் கருத்துக்கள், அறிவு குறித்த பௌத்த சமணக் கருத்துக்கள் என்பவற்றை முன்வைத்து இந்தச் சிந்தனைகளில் ஏதோவொரு குறைபாடு காணப்படுகிறது. மாறாக திருக்குறளின் கல்விச் சிந்தனை உன்னதமான சமத்துவக்கோட்பாட்டுடன் நடைமுறைச் சாத்தியமுள்ளதாக தெளிவாக வெளிப்பாடடைகிறது என்பது வலியுறுத்தப்படுகிறது.

இந்த நூல் திருக்குறளை மட்டுமல்ல தமிழ்ச் சமூகத்தை அதன் இயங்குநிலையை மறுவாசிப்புச் செய்துள்ளது. குறிப்பாக நூலாசிரியரிடம் இருக்கின்ற மார்க்ஸியப் மார்வை சார்ந்து திருக்குறளையும் பகவத்கீதை, அர்த்தசாஸ்திரம், மனுதர்ம சாஸ்திரம், காம சூத்திரம், கம்பராமாயணம் முதலான நூல்களில் இருந்து திருக்குறள் வேறுபடுமாற்றையும் பகுப்பாய்வு செய்துள்ளார்.

தமிழ்ச் சமூகம் எவ்வாறு மதம், சாதி, பாலின வேறுபாடு, அதிகாரப் போட்டி, வர்க்கப் பிரிவினை களால் பேதப்படுத்தப் பட்டதோ அவற்றையெல்லாம் வெளிப்படுத்தி, இதற்குள் ஒரு சமத்துவத்தைக் காண்பதற்கு திருக்குறள் எவ்வாறு முயன்றிருக்கிறது என்பதை இந்நூலில் நூலாசிரியர் நிறுவுகிறார். 'கல்விச் சிந்தனை' என்று குறிப்பிட்டாலும் கல்விக்கும் அப்பாலான பார்வையையே இந்நூல் கொண்டுள்ளது.

## மறுமலர்ச்சி மன்ற முன்பள்ளி செயற்பட்டு மகிழ்வோம் காட்சிகள்









பாடல்

# நாங்களும் மனிசர்

# கற்றோர்

*நாங்கள் நல்லவர்கள் - மிக*
*நல்லவர்கள்*
*கற்பதில் வல்லவர்கள் - கலந்து*
*பேசுவதில் வல்லவர்கள்*

*எவருக்கும் எத்தீங்கும்*
*ஏற்படாதிருக்க நினைப்பவர்கள்*
*மிதிச்ச புல்லும் சாகாதிருக்க*
*விரும்பும் மென்மையாளர்*
*-நாங்கள்-*

*இறக்கும் வரை மற்றவர் போல்*
*பறக்க ஆசைப்படாப் பண்பாளர்*
*எவரும எமக்கெதிராக*
*எக்காலமும் இயங்கார்*
*-நாங்கள்-*

*மற்றோர் செய்யும் தவறுகளை*
*கற்போம் விவாதிப்போம்*
*சிற்றெறும்பின் சுறுசுறுப்பை*
*உற்றுப் பார்ப்போம்*
*-நாங்கள்-*

*தவறற்ற மனிதர் நாங்களெனத்*
*தக்கார் யாவரும் மதிப்பார்*
*ஏனென்றால் நாங்கள்*
*ஏதுமே செய்யாத கற்றோர்*
*-நாங்கள்-*

*கமக்காரர் நாங்கள் கமக்காரர்*
*காலம் முழுதும் கடும்பனி குளிரும்*
*சுட்டெரிக்கும் சூரியனும் மாரி மழையும்*
*பட்டு உழைத்து வியர்வை சிந்தி-காசு பணத்தில்*
*கெட்டு நொந்தாலும் நாங்களும் மனிசரடா*
*- கமக்காரர்*


*நாங்கள் எவருக்கும் தலை சாயோம்*
*உழவுத் தொழிலின் பணி ஓயோம்*
*பழகிப் பலதொழில் பயின்றாலும்*
*உலகம் முழுவதும் உழவர் பின்னே*
*- கமக்காரர்*

*இல்லையென்று ஏங்காதீர் எங்கள்*
*நிலமகள் பார்த்து நகைத்திடுவாள்*
*நிலத்தை உழுது பண்படுத்தி நேசம் பூணா*
*உதிரிகளை ஊடல் செய்து ஒதுக்கிடுவாள்*
*- கமக்காரர்*

*நச்சு உரங்கள் தூவி நானிலத்தையே நாசமாக்கி*
*கிருமி நாசினியென்றே எம்பயிரும் நிலமும் பாழாச்சே*
*அருவருக்கும் செயல் அரசே செய்து*
*தெருவில் விற்பார் பிறநாட்டார் பண்டம்*
*- கமக்காரர்*

*நாங்கள் மனிசர் நாட்டை மீட்போம்*
*நானிலங் காப்போம் வேற்றார் வீசும்*
*வலையில் வீழோம் ஜஎம்வுக்கும்*
*அடிபணியோம்*
*அகிலம் முழுதும் அன்பே செழிக்கும்*
*ஆட்சி படைப்போம்*
*- கமக்காரர்*

**ஈழத்துத் தேவன் பூதனார்**



# வீரகாவியம்

**"ஒரு கம்யூனிஸ்ட் இணையர் வாழ்வின் சந்திப்புக்கள்" என்ற தலைப்பில் வள்ளியம்மை சுப்பிரமணியம் எழுதிய நூல் பற்றிய விளக்கவுரை**




*சோ. தேவராஜா*

## கொம்யூனிஸ்ட் அரசியல் போராளி கே. ஏ. சு

கே.ஏ.சு வை அவரது மூத்தக்கா தங்கமணி கொழும்பு சென். ஜோசேப் கல்லூரியில் சிறுவயதில் சேர்த்துப் படிப்பித்ததுடன் முற்போக்கு அறிஞர்களின் வாழ்க்கை பற்றிய கதைகளையும் அவருக்குக் கூறுவார்.

இந்நூலில் வரலாறு, அரசியல், போராட்டம், போராளிகள், வர்க்கப்பாசம், தீண்டாமைப் போராட்டம், கம்யூனிஸ்ட் கட்சி, அதில் இயங்கிய தோழர்கள் பற்றிய விபரக்குறிப்புகளை ஆங்காங்கே பரவலாக எழுதியுள்ளார்.

'ஆயிரத்தில் ஒருவர் சமூக சேவை என்று புறப்பட்டால் அவனை உலகோர் "வாழத் தெரியாத மடையன், பைத்தியக்காரன்" என்று எள்ளி நகையாடுவர். நாம் வாசித்த வரலாற்று நூல்களில் சமூகத்திற்கு நல்ல கருத்துக்களை விழிப்புணர்வுகளை ஊட்டுபவர் சொந்த வாழ்வின் வறுமை, நோய், துன்பம், கை வரட்சி போன்ற இல்லாமை, இயலாமை ஆகிய இடர்களுக்கு ஆளாவார்கள் என்பதனைக் கண்டிருக்கிறோம். ஆயுள் முழுதும் அதனைக் கைக் கொள்ளவோ முன்னெடுக்கவோ முடியாமல் சிலர் இடைநிறுத்தம் செய்கிற இக்கட்டான நிலையால் பின்னடைவு காண்பர். லட்சத்தில் ஒருவர் தனது மூதாதையரின் சொத்தை வைத்து அதனைத் தனது லட்சியத்திற்கும், சமூக மாற்றத்திற்கும் பயன்படுத்துவர். ஒரு சிலர் தனது வாழ்க்கைத்துணையின் ஒத்துழைப்புடன் ஓரளவுக்குத் தன்னால் முடிந்த நற்காரியங்களைச் செய்வர். சிலர் 'தானுண்டு தன் குடும்பம் உண்டு' என்று ஒருவருக்கும் தீங்கில்லாமல் அமைதியாக வாழ்ந்து முடிப்பர். இப்படி உலகில் பிறந்த மக்களின் வாழ்வு பல ரகம்' எனச் சமூகத்தை யதார்த்தமாகக் கணிக்கும் சக்தி வ. சு.வுக்கு வாய்த்துள்ளது.

1969–ம் ஆண்டுச் சட்டமறுப்பு மேதின ஊர்வலம் கே. ஏ. சு. தலைமையில் நடந்தபோது காவல்துறையினர் தாக்குதல் நடத்தினர். அதில் கே. ஏ. சு. பலத்த காயங்களுக்கு உள்ளாகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அப்போது தோழர் சண்முகதாசன் இணையர் பரமேஸ்வரி எழுதிய கடிதத்தை இன்றுவரை பாதுகாத்து வ. சு. அதனையும் இந்நூலில் பிரசுரித்துள்ளார். இக்கடிதத்தில் வ. சு. வுக்கு 'புரட்சிகர வணக்கம்' சொல்லி பரமேஸ்வரி சண்முகதாசன் நிறைவு செய்துள்ளார்.

'பொலீஸ் அடியால் சிதைந்தார் கே. ஏ. சு. இடதுகை தோள்மூட்டில் தகரம் பொருத்தப் பட்டும், இடது கை சின்ன விரல் கம்பி கோர்க்கப்பட்டும் இருந்தது. எஸ். டி. பண்டாரநாயக்க அவர்கள் இத்தாக்குதல் பற்றிப் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டுப் பேசினார்கள் (பக்.77)

கொழும்பில், கொள்ளுப்பிட்டியில் தோழர் சண்ணின் இல்லத்தில் வைத்துப் பராமரித்தனர். மாதக் கணக்கில் தோழர் ஹன்சூர் கே. ஏ. சு. வுக்கு உடை மாற்றுதல், உணவு ஊட்டுதல், கழிவுகள் அகற்றி சுத்தம் செய்தல் போன்ற பேருதவிகளைச் செய்தார்.

'இந்தத் தாக்குதல் எங்கள் ஏழுவருட தாம்பத்திய வாழ்வையும் முடிவுக்கு கொண்டு வந்தது. இவை எதையும் அவர் யாரிடமும் சொன்னதில்லை' (பக்–78)

'பிள்ளைகள் பிறந்த காலங்களில் சரியான கவனிப்போ உணவோ கிடைக்கவில்லை. தோழர் காலை போய் இரவு வருவார். இரவு உணவைச் சமைத்துச் சாப்பிடுவோம். (பக்.81) ஒரு நேர உணவுடன் வாழ்க்கையை ஓட்டியுள்ளனர்.

## இல்லறம் பற்றி கே. ஏ. சு.

தேவகுமாரின் திருமணம் கே.ஏ.சுவின் தலைமையில் நடைபெற்றது. தோழர் தாலியை எடுத்துக் கொடுக்க திருமணம் நடந்தது. பின் அவ்வைபவத்தில் அவர் குறிப்பிடப்பட்டதாவது.

"வாழ்க்கை ஒரு போராட்டம். இவர்களுடைய வாழ்க்கையில் இவர்கள் இரண்டாம் கட்டத்தை ஆரம்பிக்கிறார்கள் என்று அர்த்தம். இவர்களுடைய வாழ்க்கையில் முதலாவது கட்டம், தமது பாடசாலைக்கல்வி, சமூக ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம், வறுமைக்கெதிரான போராட்டம் என இவர்கள் இருவரும் தனித்தனியாகக் கடந்து வந்திருக்கின்றனர்.

இன்று இவர்கள் ஒருவருக்கொருவர்

வாழ்க்கைத்துணையாக ஒருவரை ஒருவர் சார்ந்து ஈடுபடும் வாழ்க்கைப்போராட்டத்தில் புற உலகில் நாடுகளின் சுதந்திரத்திற்கும் தேசங்களின் விடுதலைக்கும் மக்களின் புரட்சியுடனும் உங்கள் போராட்டம் இணையட்டும். உலக சமாதானத்திற்கும் மனித நல்வாழ்வுக்குமான பெரும் போராட்டத்தில் உங்கள் பங்கும் இணையட்டும்" என்று வாழ்த்தி திருமண நிகழ்வை இனிதே நடத்தினார்.(பக்கம்–189)

**புலம்பெயர் தமிழர் பற்றி கே. ஏ. சு**

தோழர் கே. ஏ. சு. புலம்பெயர் தமிழர்கள் செய்ய வேண்டியதென்னவென்று தோழர் தேவகுமாரன் இத்தாலி செல்லும் சந்தர்ப்பத்தில் ஒரு பிரசங்கமே செய்கிறார்.

"இலங்கையிலிருந்து போயிருக்கக் கூடிய தமிழ்த் தோழர்கள், அங்கிருக்கக் கூடிய சிங்களத் தோழர்களுடன் ஒன்றுபட்டுத் தேசத்தின் ஐக்கியத்தையும், சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்காகக் கூடப் பாடுபட வேண்டும். மற்றது இங்கே உண்மையிலே பொருளாதார நெருக்கடி காரணமாகத்தான் உழைப்புப் பிரச்சினை சம்பந்தமாகத்தான் அவர்கள் போக வேண்டி வந்தது. சரி அவை அந்த நிலைமையை எடுத்திருந்தாலும் கூட, எதிர்காலத்திலையும் அதை நாட்டின்ரை தேவைக்கும், நன்மைக்கும், நாட்டின் சுதந்திரத்துக்கும் அவை உழைப்பினம் என்பது நம்பிக்கை. அவை செய்வினம் என்றுதான் நம்புகின்றேன். குமார் இப்போ இரண்டாவது முறை வந்து போய் இருக்கிறார். அவருக்கு இத்தாலி அனுபவங்கள் கூட இருக்கும். இத்தாலி நாட்டிலே சரியான மாற்றங்கள் ஏற்பட்டு இருக்குது. அவையின்ர பொருளாதார, சமூக அபிவிருத்திகள் கூட நடந்திருக்கிறது. இன்றும் இங்கிருந்து போனவை இத்தாலி நாட்டுப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் அதன் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும் அங்கே பாடுபடும் அதேவேளை, எங்கட நாட்டுச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும், அதன் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதிலையும் அவை கூடுதல் பங்கு வகிக்க வேண்டும். அதற்கு அவை அங்கேயுள்ள இளைஞர்களை அணிதிரட்டுவது, அவைக்குக் கல்வியறிவு கொடுக்கிறது, நாட்டு நிலைமைகளை விளங்கப்படுத்துவதன் மூலம் அவை கூடிய சேவையையாற்ற முடியும்."

(பக்கம்– 155) என இவ் உரையாடலை வ.சு. பதிவு செய்துள்ளார்.

**இந்திய அத்துமீறல் பற்றி கே. ஏ. சு**

இந்திய வான்படை 1987 ஜூன் 4–இல் இலங்கை அரச அனுமதி இன்றி யாழ் மக்களுக்கு உணவுப்பொருட்களை 'ஒப்பரேசன் பூமாலை' மூலம் வீசியது.

"இந்திய மேலாதிக்க வல்லரசு எம்நாட்டினுள் அத்துமீறி உள் நுழைவதை அனுமதிக்க முடியாது" எனப் புதிய பூமி பத்திரிகையில் கண்டித்திருந்தார்.

அதற்குப் பதிலாக ஈழமுரசு பத்திரிகையில் அதன் ஆசிரியர் எஸ். எம். கோபாலரத்தினம், ஈ.ஆர்.திருச்செல்வம் அதனைக் கண்டித்து இந்தியாவின் உதவியை கொம்யூனிஸ்டுகள் விரும்பவில்லை என எழுதினர். (பக்கம்–190)

விடுதலைப்புலிகள், இலங்கை இந்திய ஒப்பந்தம் 1987ல் கைச்சாத்திடப்பட்ட பின் மாலைபோட்டு திலகமிட்டு K.K.S ல் இருந்துவந்த இந்திய இராணுவத்தை வரவேற்றனர். அவர்கள் மக்களுக்கு உலர் உணவுப்பொருட்களை வழங்கினர். புலிகளுடன் சண்டை ஆரம்பித்தது. "அவர்களால் வழங்கப்பட்ட எந்த உணவுப் பொருட்களும் வீட்டினுள் வரக்கூடாது" என்று கே.ஏ.எஸ் கூறிவிட்டார்.

யாழ் பத்திரிகை பணிமனைகள் இந்திய இராணுவத்தால் குண்டு போட்டுத் தகர்க்கப் பட்டன. எனவே சத்தியமனையில் கோபு தங்கி, அங்கிருந்தே ஈழமுரசு பத்திரிகையைத் தலைமறைவாக வெளியிட்டார்.

"எங்கள் நட்பில் எதுவும் இடையூறாக வர முடியாது. வளரவும் முடியாது" என்றார் மணியம். மணியம் நட்புக்கு வகுத்த இலக்கணம் இது" என்று கோபு குறிப்பிட்டார். (பக்கம்–191)

'வேற்று அரசியலிலும், வேறு தளத்திலும் இருந்து நண்பர் கோபாலரத்தினம் கோபு உண்மைகளை நினைவில் நிறுத்தி எழுதியது, மிகுந்த ஆறுதலை தந்தது. உண்மைகள் புதைந்தழிந்து போகாது என்ற உணர்வைத் தந்தது' (பக்கம்–191) என வ.சு குறிப்பிடுகின்றார்.

1986 களில் 'தோழருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனது. சலரோகம், உயர் இரத்த அழுத்தம் இவற்றால் மயங்கி விழுந்துவிட்டார். 1966,1969 பாதுகாப்பு படையினரின் மிலேச்சதிகாரத் தாக்குதல்களால் உடல் சிதைந்து போயிருந்தது. அத்தோடு எழுச்சி பெற்று வந்த சமதர்மசமுதாயச் சிந்தனைகள், குறுந்தேசியவாதத்தால் அழுந்தப் போவதும் தோழருக்கு மனவலியை ஏற்படுத்தியது. வீட்டில் வறுமை,

மூத்த மகன் சிறையில், இவருக்கு நோய், எல்லாம் எனக்குப் பயத்தையே தந்தன' (பக்கம் –179) என வருந்துகிறார் வ.சு

இந்த நெருக்கடிச் சூழலிலும் 1986–மே மாதத்தில் நல்லூரில் இருந்து ஆரம்பித்துத் திருநெல்வேலி வரை நடைபெற்ற ஊர்வலத்திலும் கூட்டத்திலும் அந்தச் சுடு வெய்யிலிலும் கே.ஏ.சு. தலைமைதாங்கி நடாத்தினர்.

'உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்'

'பட்டாளிவர்க்கம் பாராளும் வர்க்கம்– என்ற பல கோசங்களுடன் ஊர்வலம் சென்றது. கூட்டத்தின் தலைமையுரையில் "இந்நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படும்போது நீதி மறுக்கப்படும்போது சுதந்திரம் மறுக்கப்படும்போது, நிச்சயமாக பலாத்காரம் இருக்கத்தான் செய்யும். பலவந்தமாகத் தங்களது உரிமைகளை மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பு மக்களுக்குள்ளது" என்று (பக்கம்–179) பிரகடனப்படுத்தினார்.

"தமிழ் மக்களுடைய வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள் அவர்களுடைய தாயகமாக அங்கீகரிக்கப்படவேண்டும்" என்று முழங்கினார்.(பக்கம்–180)

### தோழர்கள்- உட்கட்சிப் போராட்டங்கள் - பிளவுகள்

தோழர்கள் நா. சண்முகதாசன், எஸ். டி. பண்டாரநாயக்க, தோழர் ஹன்சூர், தோழர் கதிரேசு, தோழர் செ. யோகநாதன், தோழர் வீ. ஏ. கந்தசாமி, தோழர்கள் இரவி, சந்திரன், தேவர், யோகேஸ்வரன், தயாளன், கிருட்டி, வேல்முருகன், தோழர் நல்லப்பு, தோழர்கள் சமல் த. சில்வா, ரட்ணாயக்கா, காந்தி அபயசேகர, புதுவை இரத்தினதுரை, சி. கா. செந்திவேல், தோழர் சோ. தேவகுமாரன், பேராசிரியர் சி. சிவசேகரம், தோழர்கள் ஆர்.கே.சூடாமணி, எஸ்.ரி.என். நாகரத்தினம், கே.டானியல், டாக்டர் சு. வே. சீனிவாசகம், சிறீமனோகரன், கதிரவேலு, சதா, நடனசபாபதி, பேராசிரியர் கைலாசபதி, தில்லைநாதன், நுஃமான், மௌனகுரு, எஸ். சிவதாசன், தோழர் கதிரவேலு,தோழர்கள் தம்பையா, இராஜேந்திரன், கவிஞர் முருகையன், நாவலன், குயிலி, ஈ.ஆர். திருச்செல்வம், எஸ். எம். கோபாலரத்தினம் (கோபு), நீதியரசர் வனராஜா இராசரத்தினம், சட்டத்தரணி T.C. இராசரத்தினம், தோழர் அண்ணாமலை, தோழர் சு. வைத்தியலிங்கம், தோழர் எஸ். விஜயானந்தன், தோழர் திருநாவுக்கரசு, இராஜசுந்தரம் மாஸ்ரர், தோழர் எஸ். ஜெய்குமார் என இன்னும் பல தோழர்களைப் பற்றிய தகவல்களைப் பகிர்கிறார் வ. சு.

'ஒரு தடவை தோழர் வி.ஏ கந்தசாமியும் தோழர் மணியமும் எமது காலையடி வீட்டிற்கு வந்த போது தோழர் மணியம் பஸ் தரிப்பிடத்தில் இருந்து நடக்கமுடியாது இருந்து அவரைத் தன் கைகளில் காவி வந்ததாகத் தோழர் வி. ஏ. க. சொன்னார். (பக்கம்–99)

'அந்தக் காலப்பகுதியில் மீண்டும் கட்சியினுள் கருத்து மோதல்கள் ஆரம்பித்தன'. 'மீண்டும் பிரிவோ என்கிற பயத்தைத் தோழர்களின் வருகைகளும், கதைகளும் உணர்த்தின. தோழரிடம் 'ஏதாவது பிரச்சினையா' என்று கேட்டபோது " "உட் கட்சிப்போராட்டம் என்பது, சிறந்த மக்களுக்கான அமைப்பை ஒற்றுமையுடன் கொண்டு செல்ல கருத்தை கருத்தில் புரிந்து கொள்வதன்மூலமே முடியும். இவை இருப்பதுதான் சரி" என்றார். (பக்கம்–99)

'ஒரு நாள் காலை தோழர் வீட்டின் வளை மீது 'கொள்கையற்ற நடைமுறை குருட்டுத்தனம். நடைமுறையற்ற உகொள்கை மலட்டுத்தனம்' என்று எழுதிவைத்துவிட்டுச் சென்றுவிட்டார். தோழர் வீ.ஏ கந்தசாமி தனியே வந்தார். சுக விசாரிப்புக்களின் பின்னே வீட்டு வளைவைப் பார்த்தார். "ஓ! எனக்காகத்தான் எழுதி வைத்துவிட்டு போய்விட்டாரோ" என்று கேட்டார். அவரிடம் இருந்து தகவல் அறிய நான் முற்படவில்லை. அதை எப்போதும் செய்ததும் இல்லை. "வந்தேன் என்று சொல்லுங்கள். குழந்தைகளைக் கவனமாய்ப் பாருங்கள்" என்று தோழர் வீ.ஏ கந்தசாமி அவர்கள் சொல்லிச்சென்றார். ஏனோ எனக்குக் கண்ணீர் தளம் தட்டியது' என்கிறார் வ.சு.(பக்கம்–100)

"ஜே.வி.பி. பிரச்சினையால் தோழர் சண் ஜெயிலில் இருந்தார். அத்தருணம் வாட்சன் பெர்னான்டோ, றொசாரிபோ ராமையா, E.T. மூர்த்தி, (செங்கொடிச்சங்கத் தோழர்கள்) H.L.K கரவிட்ட, நிகால்டயஸ் எனச் சில தோழர்களுடன் நீர்வை பொன்னையன், வீ .ஏ கந்தசாமி, கார்த்திகேசன் மாஸ்ரர், தோழர் கதிரேசு எனச் சிலரும் தோழர் சண்ணை கட்சியிலிருந்து வெளியேற்றுவதாகக் கூறிப் பிரிந்தனர். தோழர் மணியம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. (பக்கம்–100)

1977 ஓகஸ்டில் நடந்த பாராளுமன்றத் தேர்தல் தமிழீழத்துக்கான சர்வஜன வாக்கெடுப்பு எனத் தமிழர் விடுதலைக் கூட்டணி பிரச்சாரம் செய்தது. இத்தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி காலையடியில் தேர்தலைப் பகிஸ்கரித்துக் கூட்டம் நடாத்திய வேளையில் நிகழ்ந்த துப்பாக்கி சூட்டுச்சம்பவத்தில், 'இளைஞர்களை விடுவிக்கவும் தோழர் மணியத்தை சிறை வைக்காத வகையில் வெளியில் எடுக்கவும் இராஜசுந்தரம் மாஸ்ரர் உதவினார்.'(பக்கம்–123)

–அடுத்த இதழிலும்

மூத்தோர் படையல்

# தூரத்து மின்னல்

எம். ஏ. நு:மான்

பூவாணம் போல்
என்னுள் புத்துணர்வு சீறியது
ஓர்கணம்தான்
மீண்டும் உன்புறத்தில் பார்த்தேன் நான்.

தார்வீதியில் எழும்பும்
சந்தடியைப் பார்த்தபடி
நின்றிருந்தாய்
கேற்றின் சிறு நீக்கலுக்குள்.

சைக்கிளிலே
என்றும்போல் சென்ற எனது விழிகளிலே
உன் தோற்றம் தற்செயலாய்
மோதி உலுப்பியதும்
பூவாணம்போல் என்னுள்
புத்துணர்வு சீறியது.

நீதானா முன்பும் இங்கு
நிற்கும் இளம் சிறுமி?
ஏதோ ஓர் நாட்காலை
வெய்யில் எரிக்கையில்
இக் கேற்றடியில்
கையில் கிளிசெறியாக் கம்பெடுத்து
ஓர் ஆட்டைத் துரத்திய
அச்சிறுமி நீதானா?

நீதான் அவள்
அந்த நீண்ட கருவிழிகள்
ஆதாரமாக அதை எனக்குக் கூறின.
ஆம்,
அப்போது நீயோர் அரும்பு.
அடிக்கடி நான்
இப்பக்கம் சைக்கிளிலே
ஏறி வருகையில்
நீ
நிற்பதனைக் கண்டுள்ளேன்.
நேரம் பொழுதின்றி
எப்போதும் இந்த இடத்தில்
இரைச்சலுடன்
வாகனங்கள் போகையில்
நீ வந்து நிற்கக் கண்டுள்ளேன்.

ஆனாலும் பின்னர் உனை
அவ்விடத்தில் காணவில்லை.
எப்போதும் நிற்கும் இடத்தில்
பலநாளாய்
இப்பக்கம் சைக்கிளில்
நான் ஏறி வருகையில்
நீ நில்லா திருந்த
நினைவே எனக்கில்லை.
எனக்கும் பலநூறு
தொல்லைகள்தான்.
இன்றோ,
தொலைவில் திடீரென்றோர்
மின்னல் அடித்ததுபோல்
உன்விழியைக் கண்டேன் நான்.

நீதான் அவள்
அந்த நீண்ட கருவிழிகள்
ஆதாரமாக அதை எனக்குக் கூறின.
கேற்றடியில்
கையில் கிளிசெறியாக் கம்பெடுத்து
ஓர் ஆட்டைத் துரத்திய
அச்சிறுமி நீயேதான்.

இப்போது நீயோர்
இளைய புதியமலர்.

முக்காட்டு நெற்றி
இக் கேற்றின் சிறுமுடுக்கால்
எப்போ தெனினும்
எனக்கு இனித் தெரியும்.

1-12-1968

நன்றி : அழியா நிழல்கள்

**நூல் நயம்**

*தொடர்*

# தீரனியன் திருவிளையாடல்

## (ஓட்டிச உலகில் நானும் ... தன் வரலாறு – மைதிலி றெஜினோல்ட் –நூல் அறிமுகம் )

*செண்பகன்*

### திருவிளையாடல்-04

இன்னொருநாள் " 'பெட்டி திறபட்டு உள்ளேயிருந்த பொருட்கள் அனைத்தும் பொசுங்கிவிட்டிருந்தன' (பக்கம்148). பஞ்ச பூதங்களில் அக்கினி பகவானை அணைத்து ஆனந்தமடைந்தார் றினோஷ்.

கட்டிடம் முழுவதிலும் புகைமணம் பரவினாலும் நெருப்பணைப்புப் படையுடன் உயிர் ஆபத்துக்கள் எதுவுமின்றி அக்கினி பகவான் அருள்புரிந்தார்.

"தொடர்மாடி வீட்டு வசிப்பிடம் தோதாகாது " என மைதிலி "எலி வளையானாலும் தனிவளை வேணுமெண்டு" வெம்பினார்.

மைதிலி யோகா பயிற்சியில் ஈடுபட்டதுடன் றினோஷ்க்கு சிறுகச் சிறுகப் பழக்கினார். சிறிது முன்னேற்றம் தெரிந்து மகிழ்ந்தார் மைதிலி.

மைதிலியின் சமையல் பணி நாற்பது நிமிடங்கள் எனில் ஐந்து நிமிடத்துக்கு ஒரு தடவை றினோஷைக் கவனிப்பதால் இரண்டு மணிநேரம் ஆகிறது.

### திருவிளையாடல்-05

இன்னொரு நாள் வீடு முழுவதும் இரத்தம் சொட்டுச் சொட்டாக பரந்திருந்தது. பார்த்தால் றினோஷின் மூக்கிலிருந்து இரத்தம் வழிந்தது. உயரத்தில் அலுமாரியில் வைத்த முதலுதவிப் பெட்டியிலுள்ள பஞ்சுகளை ஏறி எடுத்து உருட்டி உருட்டி மூக்கினில் தள்ளி விட்டான்.


தானாக வரவழைத்த இரத்தத்தை கண்டு அஞ்சித் துடிக்கவில்லை.அதைச் சுகமாக அனுபவித்து ஆடிக்கொண்டிருந்தான்.

மருத்துவரிடம் சென்றோம். அவரது மூக்கினுளிருந்த பஞ்சை மீட்டார். மீண்டும் தலையணையைக் கிழித்து அப் பஞ்சுகளையும் தனது மூக்கினுள் மீண்டும் திணித்தார்.

தொடர்ந்து ஷோபாவிலிருந்த பஞ்சை தனது விரல்களால் பிரித்து மூக்கினுள் வைத்துவிட்டார்.

மைதிலியும் றெயினோல்ட்டும் இணைந்து மருத்துவரின் உதவி இன்றி நிதானமாக அவரது மூக்கினுளிருந்து இழுத்து எடுத்தனர்.

எனினும் றினோஷ் அவ்வலியை உணர்ந்ததாக தெரியவில்லை.




றினோஷின் கதை கேட்ட டக்சிகன் என்ற 11வயதுச்சிறுவன் மைதிலிக்குக் கிடைத்தது பேரானந்தம்.

"மைதிலி அன்ரி இண்டைக்கும் சொல்லுறிங்களே றினோஷின்ட திருவிளையாடல்கள் என்னவெல்லாம் இன்னும் இருக்கெண்டு" (பக்கம்–187) என டக்சிகன் கேட்டது தாய்க்கு வேதனைதான். எனினும் உள்ளூர மகிழ்ச்சி இருந்ததென தெரிகிறது.

'றினோஷ் பாடசாலை சென்று பல பயிற்சி பெற்று முன்னேறினார். "றினோஷ் வாய் பேசமுடியாது வாசிக்க முடியாது விளங்கிக் கொள்ள முடியாது எனத் தெரிந்தாலும் அவரை அருகில் இருத்தி வைத்து அந்த வகுப்பாசிரியர் ஒரே வாசித்துக் கொண்டே இருந்தார்'(பக்கம்–189).

மேலும் கணக்குப்பாடம், சுகாதாரபாடம், வரலாற்றுபாடம், இசை வகுப்புகள், ஆங்கில மொழிப்பாடம் என சாதாரண பாடங்களைத்தான் அவரவருக்கேற்றவாறு அங்கும் கற்பித்தார்கள்" (பக்கம்–190).

" "முழு நம்பிக்கையுடன் ஒரு விடயத்தைத் தொடர்ந்து செய்யும் போது பலன் கிடைத்தே ஆகும். சாதாரண பிள்ளையைப் போலவே எப்பொழுதும் நாங்கள் றினோஷைக் கையாள வேண்டும்.என்ன வேறுபாடு எனில், சாதாரண பிள்ளைக்கு ஒரு முறை கூறுவது றினோஷிற்கு இருபது முறை கூற வேண்டும். அவ்வளவு தான்" என இரண்டு தோள் மூட்டுக்களையும்

நெற்றியையும் உயர்த்திச் சிரித்துக் கொண்டார் ஆசிரியர் (பக்கம் 191)

" நிலத்தில் சிந்தியிருக்கும் குப்பைகளைச் சிந்தித்து தும்புத்தடி எடுத்து வந்து கூட்டிக் குப்பையில் போடுவார். ஒவ்வொரு பாவனையின் பின்னரும் கழிவறையை ஈரமில்லாது துடைத்துவிட்டு கைகளையும் சவர்க்காரம் கொண்டு கழுவியபின் வெளியே வருவார். உடைகளைக் கழற்றிய பின் அழகாக மடித்துவிட்டு அலுமாரிக்குள் வைத்துவிட்டுத்தான் வெளியே வருவார்.தோய்த்து முடிந்த உடைகளை காயப்போட்டு விடுவார்"(பக்கம் 192)

வீட்டில் அன்றாட செயற்பாடுகளையும் நீச்சல், மலையேறுதல், துள்ளும் விளையாட்டு போன்ற பொழுதுபோக்கு ஒழுங்குகளையும் வழமையாகப் பழக்கப் படுத்தினோம் (பக்கம்192).

தமிழ்ப்பாடசாலையில் றினோஷ் சேர்ந்தார். அங்கு சரஸ்வதி பூஜை, தமிழர் பண்பாட்டுவிழா, அன்னை பூபதி ஞாபகார்த்த நிகழ்வு, சிறுவர் நாடக நிகழ்வுகளில் நேரத்தை செலவழித்ததன் மூலம் அவனின் ஊக்கம் அதிகரித்தது.

சுவிசில் வாழும் றினோஷ் பெற்றோருடன் குளிர்கால உள்ளரங்க ஒன்று கூடல்களில் தமிழ்மக்களுடன் செயற்பட்டார். அந்நிகழ்வில் பங்குபெறும் அனைவரும் றினோஷை கண்காணித்தனர்.

றினோஷ் சனிக்கிழமைகளில் கராத்தே வகுப்பிலும் பங்கேற்றார்.குப்பைகள் சேகரிக்கும் இடத்தில் பிறிம்பாக மட்டைகள் பிறிம்பாக போத்தல்கள் இரும்புகள் உணவுப்பாகங்கள் எனப் பிறிம்பு பிறிம்பாக குப்பைகளை றினோஷ் வகைப்படுத்திவிடுவார் (பக்கம் 203). சாதாரணமானவர்களின் செயற்பாடுகளை விட றினோஷினுடையது இன்னும் ஒழுங்காக இருக்கும்(பக்கம் 204).

நடைபயணம் நாற்பது நிமிடங்களாவது மலைமேல் நடக்கும். " சின்ன சின்ன மாற்றங்கள் சேர்ந்துதான் பெரும்புரட்சியை உருவாக்கும் எனும் நம்பிக்கை என்னிடம் தாராளமாக இருக்கிறது"(பக்கம் 205) என்ற தன்னம்பிக்கை தாயாருக்கு பிறந்துவிடுகிறது.

### திருவிளையாடல்-06

நடைப்பயணத்தின் பின் ஊரில் உள்ள நூலகத்தில் றினோஷ் தனக்குப்பிடித்த விமானப்படங்கள், கடற்கரைகள், இனிப்பான சமையல் புத்தகங்கள், சுற்றுலா தளங்கள் உள்ள நூல்களை ஆர்வமாக எடுத்துப் பார்ப்பார்(பக்கம் 206).

"கோயிலுக்குச் சென்று யேசுபிரானை மௌனமாக வணங்குவதற்கும் றினோஷ் பிரியப்படுவார்."

ஒரு சனிக்கிழமை நூலகம் செல்வதற்கு மைதிலி றினோஷுடன் ஆயத்தமானார். றினோஷுடன் கதைத்தபடியே மூன்று கிலோமீற்றர் தூரத்திலுள்ள நூலகத்திற்கு சென்றபின் காரில் இறங்கிப் பார்த்தார். றினோஷை காணவில்லை.

றினோஷ் காரின் பின்னால் நின்றுவிட்டு ஆள் மாறிவிட்டார். தேடித்திரிந்த மைதிலியை நோக்கிப் பலர் கூப்பிட்டனர். "பாழடைந்த பண்ணை ஒன்றின் உச்சியில் நின்றார்.அதன் பலகைகள் நொருங்குமளவிற்கு உக்கிப் போயிருந்தன. அங்கு நின்றவர்கள் உதவியதால் றினோஷை இறக்கிக்கொண்டு அசம்பாவிதம் எதுவுமின்றி வீடு திரும்பினோம்" என மைதிலி திருப்தி அடைந்தாள்(பக்கம் 208).

பாடசாலை உள்ளரங்கில் றினோஷ் கூடைப்பந்தைப் போட்டு விளையாடுவான்.சனிக்கிழமைகளில் இரவு பதினொருமணியளவில் றினோஷ் தமிழ்த்திரைப்படம் பார்க்க விரும்புவான்.இவ்வாறு பொழுது போகும்.

### திருவிளையாடல்-07

றினோஷிற்கு எட்டு வயது. ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை. றினோஷ் குடும்பம் ஆனந்தராஜ் அண்ணா + சாந்தியக்கா குடும்பத்தினரிடம் சென்றனர். அங்கு கிடைத்த இனிப்புக்களை சுவைத்த பின்னர் திடீரென றினோஷ் எழுந்து நின்று இருகால்களையும் மேலும் கீழுமாகத் தூக்கி தூக்கித் துள்ளினான்.

"கொமேட்டில இருங்கோ" எனத் தாய் கூறியதை சாதகமாக்கிச் சாமித் தட்டிலிருந்த தீப்பொறியை எடுத்து தீயை மூட்டினார். "சாமித்தட்டிலிருந்த பொருட்கள் எரிந்து சாம்பலாகிப் போய்விட்டன" (பக்கம்215).

சாந்தி றினோஷ் வாறாரெண்டு ஒழித்து வைத்ததை எப்படித்தான் றினோஷ் கண்டுபிடித்தாரோ ! எல்லாம் அரோகராதான்.

மறுமலர்ச்சி மன்ற முன்பள்ளியின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் சிறப்பு விருந்தினராக மறுமலர்ச்சிமன்ற துணைத் தலைவர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.



# ஓய்வு இல்லா ஓர் நினைவே சித்தம்

"ஓய்வு இல்லா ஓர்நினைவே சித்தம்" என்பது ஒரு ஆழமான தத்துவார்த்த கருத்தைக் கொண்டுள்ளது.

இந்த வார்த்தைகளை பின்வருமாறு பிரிக்கலாம்:

ஓய்வு இல்லா = ஓய்வு/அமைதி/நிறுத்தம் இல்லாத

ஓர் நினைவு = ஒரே ஒரு நினைவு/எண்ணம்/சிந்தனை

சித்தம் = மனம்/உள்ளம்/ஆன்மீக நிலை/சித்து (நிலை)

நேரடிப் பொருள்: "ஓய்வறியாத, ஒரேயொரு நினைவுதான் (உண்மையில்) மனம் அல்லது சித்தம் ஆகும்."

ஆழமான பொருள் (தத்துவம்/ஆன்மிகம்):

மனம் என்பது என்றென்றும் ஒரே நினைவாகவே இயங்கிக்கொண்டிருக்கிறது. அது எப்போதுமே செயற்பாட்டில் இருக்கிறது, ஒருபோதும் ஓய்வு எடுப்பதில்லை. இந்த "நினைவு" என்பது பல்வேறு வடிவங்களில் (ஆசை, கோபம், மயக்கம், முதலியன) தன்னை வெளிப்படுத்திக்கொண்டே இருக்கும் ஒரு தொடர் ஓட்டமாகும்.

ஆன்மிக அடிப்படையில், இந்த ஒரேயொரு தொடர் நினைவின் ஓட்டத்திலிருந்து விடுபட்டால், அதுவே "சித்தம்" அல்லது "சித்து" எனப்படும் உணர்வு நிலைப்படுத்தப்பட்ட மன அமைதியின் நிலையை அடையும் வழியாகும். மனத்தின் இயல்பையும், அதிலிருந்து விடுபடுவதன் முக்கியத்துவத்தையும் இது சுட்டிக்காட்டுகிறது.

இந்த கருத்து தமிழ் சித்தர் பாடல்கள், தத்துவ ஞான நூல்கள் போன்ற தியானப் பயிற்சிகளில் காணப்படும் "மனத்தின் இயல்பு" பற்றிய கருத்துடன் ஒத்துப்போகிறது.

சுருக்கமாக: "மனம் என்பது ஒரேயொரு தொடர் நினைவின் அலை; அதுவே அதன் இயல்பு. அந்த நினைவின் ஓட்டத்தை அறிந்து அதிலிருந்து விடுபடுவதே ஆன்மிக வளர்ச்சியின் பாதை" என்பதே இதன் உயர் பொருளாகும்.

இந்த சொல் தொடர் திருமந்திர மாலையின் ஓரறிவு முதல் ஓர்நினைவு ஈறு என்னும் பாடலின் (சூத்திரத்தின்) ஒரு பகுதியாக வருகிறது. இது மனிதனின் எண்ண அடுக்குகள் (கோணங்கள்) மற்றும் ஆன்மிக வளர்ச்சியின் படிகளை விளக்கும் மிக முக்கியமான ஒரு சூத்திரம்.

சூத்திரம்:

ஓரறிவு முதல் ஓர்நினைவு ஈறாய்
ஊன்றி நின்று உணர்வார் அறிவார் –
ஓர்நினைவே சித்தம் ஓய்வு இல்லாததே
ஆர்நினைவு அற்றால் அது.

***வார்த்தைக்கு வார்த்தை பொருள்:***

- ஓரறிவு முதல்: ஒரே ஒரு அறிவு (உணர்வு மட்டும்) உள்ள தாவரங்கள் போன்ற உயிர்களில் இருந்து தொடங்கி.
- ஓர்நினைவு ஈறாய்: (வளர்ந்து வந்து) 'ஓர்நினைவு' (த continuous stream of thought) என்னும் நிலையில் முடியும்.
- ஊன்றி நின்று உணர்வார்: (இந்த வளர்ச்சிப் படிகளை) ஆழமாக ஊன்றி நின்று தெளிவாக உணர்பவர்கள்.
- அறிவார்: (உண்மையான பரம்பொருளைப்) பற்றிய ஞானத்தை அடைவார்கள்.
- ஓர்நினைவே சித்தம்: (மனிதனின்) மனம் (சித்தம்) என்பது ஒரேயொரு நினைவின் தொடரோட்டமே.
- ஓய்வு இல்லாததே: அதற்கு (அந்த நினைவுகளின் ஓட்டத்திற்கு) எப்போதுமே ஓய்வே இல்லை.
- ஆர்நினைவு அற்றால்: எந்த வகையான ('ஆர்' என்றால் 'வகை' அல்லது 'எந்த') நினைவும் முழுமையாக அற்றுப்போனால்.
- அது: அந்த நிலைதான் (முக்தி அல்லது சிவமாகும் நிலை).

***சூத்திரத்தின் முழு பொருள் மற்றும் தத்துவம்:***

இந்தச் சூத்திரத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்து புரிந்துகொள்ளலாம்:

1. உயிரின் படிநிலை வளர்ச்சி (*Evolution*):

"ஓரறிவு முதல் ஓர்நினைவு ஈறாய்..."

திருமூலர், உயிர்கள் ஒரு அறிவு (உணர்வு மட்டும்) உள்ள தாவரத்தின் நிலையில் இருந்து படிப்படியாக வளர்ந்து, ஐம்பொறிகளைக் கொண்ட விலங்குகள், பிறகு மனிதன் வரை எவ்வாறு உயர்ந்துள்ளது என்பதைச் சொல்கிறார். மனிதனின் உச்ச நிலை "ஓர்நினைவு" (*continuous stream of thought*) ஆகும்.

அதாவது, சிந்திக்கும் திறன், எண்ணங்களின் தொடர் ஓட்டம் – இதுவே மனிதனை மற்ற உயிர்களிலிருந்து வேறுபடுத்தும் உயர்ந்த அம்சம்.

2. மனத்தின் இயல்பு (*The Nature of Mind*):

"...ஓர்நினைவே சித்தம் ஓய்வு இல்லாததே"

மனிதனின் மனம் (சித்தம்) என்றால் என்ன? அது ஒரு நினைவின் தொடர் ஓட்டம் தான். ஒரு நினைவு மறைந்தால், மற்றொரு நினைவு தோன்றும். இந்தப் பிரவாகத்திற்கு ("*stream of consciousness*") ஒரு கணங்கூட ஓய்வே இல்லை. கண் உறங்கும் போதும் கனவுகளாக இது தொடர்கிறது. இந்திய தத்துவ ஞானம் மற்றும் நவீன உளவியலும் இதை ஏற்கும்.

3. முக்தி அடையும் வழி (*The Path to Liberation*):

"...ஆர்நினைவு அற்றால் அது."

இங்குதான் திருமூலரின் ஆன்மிக அறிவு மிளிர்கிறது. மனிதனின் உயர் நிலை 'நினைப்பது' தான். ஆனால் அதையும் கடந்தால்தான் உண்மையான விடுதலை கிடைக்கும். "ஆர் நினைவு அற்றால்" – அதாவது, எந்த வகையான நினைவுகளின் ஓட்டமும் முற்றிலும் நின்றுவிட்டால், அந்தப் பேரின்ப அமைதியான நிலை "அது" – அந்தப் பரம்பொருளின் நிலை, சிவத்துடன் இரண்டறக் கலக்கும் முக்தி நிலை.

ஒரு சுருக்கமான எடுத்துக்காட்டு:


ஒரு மீன் (நீரில் வாழும்) –> ஒரு பறவை (வானத்தில் பறக்கும்) –> ஒரு மனிதன் (சிந்திக்கும்) –> ஒரு ஞானி (சிந்தனையை கடந்தவர்).

முடிவுரை:

இந்தச் சூத்திரத்தின் முக்கிய கருத்து:

மனிதப் பிறவியின் உச்சம் சிந்தனை திறன். ஆனால், அந்தச் சிந்தனை என்னும் கடலைக் கடந்தால்தான் உண்மையான கரை (முக்தி) கிடைக்கும். சிந்தனையின் இயல்பை அறிந்து, அதிலிருந்து விடுபடுவதே ஆன்மிகப் பயணத்தின் இறுதி இலக்கு என்பது திருமூலரின் சிறந்த வாக்கு.

---




# புது வரவு

எழுநாவின் புதிய பதிப்பான ந. இரவீந்திரன் அவர்களின் 'தமிழ்ப் பண்பாடு : ஊற்றுகளும் ஓட்டங்களும்' என்ற நூலினை நேரடியாகவும், தபால் மூலமும் பெற்றுக்கொள்ளலாம் என்பதனை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம்.

நூலின் விலை: ரூ. 2400/=

தொடர்புகளுக்கு:


இல. 63, சேர்.பொன். இராமநாதன் வீதி,<br>
கலட்டிச் சந்தி, திருநெல்வேலி,<br>
யாழ்ப்பாணம்.<br>
+94 77 797 5029

---

## சண்முகதாசன் நூற்றாண்டு மனப்பதிவுகள்

கம்யூனிஸ்ட் தலைவர் என். சண்முகதாசன் நூற்றாண்டை முன்னிட்டு அரசியல் ஆய்வாளர்கள், கல்விமான்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பான 'சண்முகதாசன் நூற்றாண்டு மனப்பதிவுகள்' (தமிழிலும் ஆங்கிலத்திலும்)

நூலின் அறிமுகநிகழ்வு 24 - 08 - 2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு எங்கட புத்தகங்கள் இல்லத்தில் (18/2 அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்) நடைபெற்றது.





# கற்பு

யதுஷாயினி பாலகிருஷ்ணன்

**பயில் நிலம்**

*சிறுகதை*

சிட்டுக்குருவிகளாய் மாணவர் கூட்டம் வாழ்க்கை பற்றிய பயம் ஏதுமின்றி சுதந்திரமாய் சுற்றித்திரியும் சரணாலயமாக அக்கல்லூரி பரந்து விரிந்து காணப்பட்டது. இயற்கை அழகு மிக்கதாகவும் திகழ்ந்தது. எங்கு பார்த்தாலும் மாணவர்ள் சிரித்து மகிழ்ந்து கதைத்துக்கொண்டிருந்தனர். கல்லூரி என்றாலே பரிகாசங்களுக்குப் பஞ்சம் இருப்பது இல்லையல்லவா? இங்கும் குறைவின்றி நிகழ்ந்தன பரிகாசங்கள்.

கவலைகள் இன்றிக் கழிப்பதே கல்லூரிக் காலம் என்றாலும், அன்றாட வாழ்வைச் சராசரி முறையில் கழிக்கத் தவிக்கும் மாணவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். அவர்களில ஒருத்திதான் திவ்யா. பல்வேறு சிக்கல்களுக்கு மத்தியிலும் கல்லூரி வரை வெற்றிகரமாகக் கல்வியைச் சிறப்பாக தொடர முயன்று, அதில் ஓரளவு வெற்றியும் கண்டவள். வசதிக்கும் வாசிப்புக்கும் சம்பந்தம் இல்லை என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு அவள்.

அதே கல்லூரியில் காலம் கழிக்கும் கருவி மட்டுமே கல்வியென வரும் மாணவர்களும் இருக்கத்தான் செய்தனர். அவர்களுக்காகவே நிறுவப்பட்ட குழுவின் பெயரிடப்படாத தலைவனாக இருந்தவன் மிதுன். பெயர், பணம், புகழ், ஆட்கள் என எதற்கும் பஞ்சம் இல்லாத மிக முக்கியமான புள்ளி ஒருவரின் பாசப் புதல்வன். பாசம் என்றால் மகனைக் கண்டிக்கும் அளவு பாசம் அல்ல. மகன் செய்வது அனைத்தும் சரி. மகன் கேட்பதெல்லாம கிடைக்க வேண்டும் என எண்ணுமளவு பாசம் கொண்ட தந்தையின் புதல்வன் அவன்.

அவன் தவறுகள் தெரிந்திருந்தும் அவற்றைக் கண்டிக்கவோ தண்டிக்கவோ நிர்வாகம் முன்வராததற்கு காரணம், அக் கல்லூரியின் பங்குதாரர்களில் ஒருவராக அவன் தந்தை இருப்பதே. அதனாலேயே அவனைத் தவிர்க்கும் மாணவர்களும் இருக்கத்தான் செய்தனர். அக் கல்லூரியில் திவ்யாவும் அன்றுவரை அவ்வாறு தவிர்ப்பவர்களில் ஒருத்தியாகத்தான் இருந்து வந்தாள். அந்தச் சம்பவம் வரையில்.

வழக்கம் போல அன்றும் மிதுன் தன் நண்பர்களோடு கல்லூரி வளாக மரத்தடியில் அமர்ந்து தீவிரமான 'ஆராய்ச்சி' ஒன்றில் ஈடுபட்டிருந்தான். அதாவது கடந்து செல்லும் பெண்கள் அனைவரிற்கும் மதிப்பெண் போட்டுக் கொண்டிருந்தான். இதில் மாணவிகள், விரிவுரையாளர்கள் என்ற பாகுபாடு இல்லை. அதில் புதிதாக இணைந்த மாணவியும் ஒருத்தி. ஆரம்பத்தில் பொறுமை காத்த அந்த மாணவி, இவர்கள் எல்லை கடக்கவே, அவர்களைத் திட்ட ஆரம்பித்தாள்.

அவள் திட்டியதில் சினம் கொண்ட அக்குழுவில் ஒருவன் அவளை நோக்கி, "கேலி செய்தால் சிரி. இல்லை என்றால் வேலையைப் பார்த்துக்கொண்டு போ. வாய்க்கு வந்தபடி பேசாதே!" என அவளைப் பார்த்துக் கத்தினான். அவளும் பதிலுக்குக் கத்த, இருவருக்கிடையே வாக்குவாதம் முற்றியது. விளைவாக அவன் அப்பெண்ணின் ஆடையில் கைவைக்க முயன்றான். இவை அனைத்தையும் மிதுன் பார்த்துக் கொண்டுதான் இருந்தான். அதாவது பார்த்துக் கொண்டு மட்டுமே! ஆனால் அவனைப்போல் திவ்யாவால் இருக்க முடியவில்லை. அதன் விளைவுகளை அறியாமல், அந்த மாணவிக்காகப் பேச திவ்யா அவ்விடம் சென்றாள்.

மிதுனும் அவன் நண்பர்களும் அமர்ந்திருந்த மரத்திற்கு அருகில் இருந்த வேறு ஒரு மரத்தடியில் அமர்ந்து படித்துக்கொண்டிருந்தாள். திவ்யா அவர்களின் கேலிளை எல்லாம் கண்டும் காணாமலும் இருந்த அவள், மிதுனின் நண்பன் அந்தப் பெண்ணின் ஆடையில் கை வைக்கப் போக, வேகமாக எழுந்து அவர்கள் இருக்கும் இடம்நோக்கிச் சென்றாள்.

ஏற்கனவே திவ்யாவைக் கண்டாலே மிதுனுக்கு பிடிக்காது. காரணம், எல்லா வசதிகளும் இருந்தும் அவனும் அவன் குழுவும் படிப்பில் பின்தங்கியிருக்க, வறுமையிலும் கல்வியில் சிறந்து விளங்குவதுதான். அதோடு விரிவுரையாளர்கள் அவளை உதாரணம் காட்டி அறிவுரை வழங்குவது. இவ்வாறு இருக்க, தன்

நண்பனுடன் அவள் வாக்குவாதத்தில் ஈடுபட, மிதுனும் அவர்களிடம் சென்றான். நண்பனுக்காக மிதுன் பேச, அம்மாணவிக்காக திவ்யா பேச, வாக்குவாதம் முற்ற, மிதுனின் கோபம் திவ்யாவைத் திருப்ப அவள் ஆடையில் கைவைக்க முயல கணநேரத்தில், அவன் கன்னத்தைப் பதம்பார்த்தது அவள் கைகள்.

அத்தனை நாட்களாக அவன்மேல் சகமாணவர்கள் கொண்டிருந்த பயம், விரிவுரையாளர்கள் ஒதுங்கி சென்றது. கல்லூரியில் அவனுக்கிருந்த அடையாளம் அனைத்தையும் அவள் தவிடுபொடியாக்கிவிட்டுச் செல்ல, சிலையெனச் சமைந்தான் மிதுன். இவை எதையுமே கண்டுகொள்ளாமல், குறித்த அந்த பெண்ணோடு அவ்விடம் விட்டு அகன்றாள் திவ்யா. அந்தச் சம்பவம் அவள் மனதில் இருந்து நீங்க, மிதுன் மனதில் மாறா வடுவானது. அவன் பின்னே செல்ல விளைந்த நண்பர்களைத் தடுத்த அவனது மனம் மட்டும், ஒட்டு மொத்த கல்லூரியும் காண, தன் கன்னத்தில் அறைந்தவள் மனத்தில் ஊர் காண, அவையே காத்திருந்தது.

நாட்கள் தெளிந்த நீரோடையாகக் கடக்க நடந்தவை அனைத்தையும் மறந்து படிப்பில் கவனம் செலுத்தினாள். இவ்வாறு இருக்கையில், மிதுன் ஒருநாள் திவ்யாவைக் கல்லூரி நூலகத்தில் சந்தித்தாள். இவனைப் பார்த்து அவள் வேகமாக நகர, அவசரமாக தடுத்தான் மிதுன். எந்த உணர்வுகளையும் முகத்தில் காட்டாமல் திவ்யா மிதுனை காண, அவனே பேச்சைத் தொடங்கினான். அன்று நடந்த சம்பவத்திற்கு மன்னிப்பு கேட்டான். ஆனால் அவளோ, அதை ஏற்கவும் இல்லை. மறுக்கவுமில்ல. அவனிடம் இருந்து விலகியே இருந்தாள்.

ஆனால் விதி யாரை விட்டது? தொடர்ந்தும் மிதுன் அவளிடம் மன்னிப்பு கேட்க, ஒரு கட்டத்தில் மறுக்க முடியாமல் அவளும் மன்னித்தாள். ஆனால் அவனிடம் இருந்து விலகியே இருந்தாள். அவன் தானாகச் சென்று மன்னிப்பு கேட்பது அவன் நண்பர்களுக்கு பிடிக்கவில்லை. இருப்பினும் அவன் எதையும் கண்டுகொள்வதாய் இல்லை. மாறாக, பாடம் சம்பந்தமாக சந்தேகங்களைக் கேட்பது, சமூகமளிக்காத வகுப்புகளின் குறிப்புகளைக் கேட்டுப் பெறுவது என திவ்யாவை நெருங்கினான்.

திவ்யாவோ ஆரம்பத்தில் இவற்றை எல்லாம் தவிர்க்க நினைத்தாலும் பாடம் சம்பந்தமாக என்பதால் அவளும் பெரிதாக எடுத்துக்கொள்ளவும் இல்லை. இருந்தாலும் அளவோடு நிறுத்திக் கொண்டாள். அவனின் இந்த மாற்றம் அவன் நண்பர்களுக்கும், விரிவுரையாளர்களுக்குமே நம்ப முடியாத ஒன்றுதான்.

நாட்கள் முயலின் வேகத்தில் ஓடின. திவ்யாவுக்கு மிதுன் மீது நம்பிக்கை ஏற்படத் தொடங்கியது. இருவரும் நல்ல நண்பர்களாக மாறினர். திவ்யாவின் உதவியால் அந்தப் பரீட்சையில் மிதுன் நல்ல மதிப்பெண்கள் பெற்றான். இவ்வாறு அவர்களின் நட்பு வளர்ந்து வர, அடுத்த பரீட்சைக்காக இணைந்து படிக்க மிதுன் தனது வீட்டுக்கு திவ்யாவை அழைத்தான்.

அவனின் அழைப்பை ஏற்கத் திவ்யா முதலில் தயங்கினாள். எனினும், இத்தனை நாட்களாக அவன் காட்டிய மாற்றத்தையும், தன்னிடம் வளர்த்த நம்பகத்தன்மையையும் எண்ணி இறுதியில் ஒப்புக்கொண்டாள். மேலும், தன்னுடன் வகுப்புத் தோழிகள் சிலரும் வருவதாகக் கூறியபோது, அவளது மன அமைதிக்காக அதற்கும் சம்மதித்தாள்.

அடுத்த சில நாட்களில், மிதுனின் வீட்டுக்குச் சென்றாள் திவ்யா. அவன் சொன்னது போலவே, அவர்கள் வகுப்பைச் சேர்ந்த மற்ற மாணவர்கள் சிலரும் வந்திருந்தனர். இதனால் தைரியம் பெற்ற திவ்யா, சிறிது நேரம் அனைவருடனும் பேசியபின், எல்லோரும் படிப்பில் ஈடுபட்டனர்.

இவ்வாறு, பரீட்சைக் காலங்களில் அவர்கள் ஒருவரின் வீட்டில் கூடிப் படிப்பது வழக்கமாகி விட்டது. அவர்களின் நட்பும் நல்ல முறையில் தொடர்ந்தது. ஒரு முறை, திவ்யா மிதுனின் வீட்டிற்குச் சென்றபோது, அங்கு அவர்கள் இருவரைத் தவிர வேறு யாரும் இல்லை. இதைக் கண்ட திவ்யா மிதுனிடம் கேட்டபோது, "கடைசி நிமிடத்தில் மற்றவர்கள் எல்லாரும் திரைப்படத்திற்குச் சென்றுவிட்டார்கள்" என்று அவன் விளக்கம் கூறினான்.

திவ்யா தலையசைத்தாலும், உள்ளூர சிறிது பதட்டமாக இருந்தாள். எனினும், மிதுன் எப்போதும்போலவே இயல்பாகவே நடந்து கொண்டான். வழக்கம் போலவே நன்றாக உபசரித்தான். இதனால் எந்த அச்சமும் இல்லாமல், அவளும் இயல்பான நிலைக்குத் திரும்பினாள். அன்றைய தினம் அவர்கள் இருவரும் மட்டுமே மீள்பார்வைப் பயிற்சிகளைச் செய்தனர். இந்த நிகழ்வு அன்றோடு நிற்கவில்லை; அவ்வப்போது இதேபோன்ற சூழ்நிலைகள் ஏற்பட்டன.

அன்றும் அவள் மிதுனின் வீட்டிற்குச் சென்ற போது, அங்கே அவன் மட்டுமே இருந்தான். அவளும் இதைப் பெரிதாகக் கருதவில்லை. வழக்கம் போலவே அவன் அவளுக்குக் குளிர்பானம் கொடுத்தான். தான் அவன்மீது வைத்திருந்த நம்பிக்கையாலோ, அல்லது இது அவர்களின் வழக்கமான நிகழ்வு என்பதாலோ, அவனது பார்வையில் ஏதேனும் மாற்றம் இருக்கிறதா என்பதைக் கூட கவனிக்காமல், அந்தப் பானத்தை அருந்தினாள்.

ஆனால் சிறிது நேரம் கழித்து, அவள் கண்களில் மங்கலாகத் தெரிந்தது ஒன்று – மிதுனின் கண்களில் துடித்துக் கொண்டிருந்த காமவெறிதான். இதை உணர்ந்த போதும், தன்னைக் காத்துக் கொள்ள எந்தவொரு முயற்சியையும் மேற்கொள்ள முடியாத அந்தரங்கமான பலவீனத்தில் சிக்கியிருந்தாள் திவ்யா.

அந்த இருண்ட அறையின் அமைதியைக் கலைத்தவாறு, அவ்வப்போது மின்விசிறியின் ஓசை மட்டுமே ஒலித்து ஓய்ந்தது. காற்றில் சிகரெட்டின் புகை

அலைந்தாடி மறைந்தது. லேசாகக் கண்களைத் திறந்து சுற்றுப் பார்த்த திவ்யாவால், எந்தவொரு எதிர்ப்பையும் தெரிவிக்க முடியவில்லை. கடுமையான முயற்சியால் உடலை அசைத்து எழுந்த அவள், தன் நிலையை உணர்ந்து அதிர்ச்சியில் விம்மினாள்.

அவளது அதிர்ச்சியைச் சிறிதும் பொருட்படுத்தாதவனாய், அமைதியாக அவளை நோக்கி நடந்தான் மிதுன். அவள் கண்களில் தேங்கியிருந்தது துயரக் கண்ணீர். அவன் கண்களில் மின்னியது வெற்றிக் களிப்பின் மிடுக்கு.

வகுப்பறையில் பாடங்கள் தொடர்ந்தன. ஆனால் திவ்யாவின் மனம் மட்டும் அன்றைய கொடூர சம்பவத்தில் சிக்கியிருந்தது.

கண்களைத் திறந்தபோது, தலை பாரமாக இருந்தது; உடல் அசைக்க முடியாத அளவுக்கு வலித்தது. தனக்கு நேர்ந்ததை உணர முடியாத அளவுக்கு அவள் முட்டாள் அல்ல. கண்களில் தேங்கிய கண்ணீர் ஊற்றெடுத்தது. 'ஏன்?' என்ற ஒரே வார்த்தை மட்டுமே அவள் உதடுகளில் தவித்தது – வேறெதுவும் கேட்க முடியாத நிலையில்...

ஒரு கொடூரமான சிரிப்புடன் அவன் பதிலளித்தான்:

"அன்றைக்கு நீ எத்தனை பேருக்கு முன்னால் என்னைக் கைநீட்டச் செய்தாயோ, அந்த அவமானத்தை நீயும் சுவைக்க வேண்டாமா? அதுக்காகத்தான் இத்தனை நாள் காத்திருந்தேன். இன்று என் எண்ணத்தை நிறைவேற்றிவிட்டேன்!"

அவன் முகத்தில் எந்த மாற்றமும் தெரியவில்லை. உடனடியாக அவள் அந்த வீட்டை விட்டு வெளியேறினாள். ஆனால் அவள் மனதில், "இனி ஓடி எதைக் காப்பாற்றப் போகிறேன்...?" என்ற கேள்வி எழாமல் இல்லை.

தன்னால் இனி எதையும் மாற்ற முடியாது என்பது புரிந்திருந்தும், தன் வாழ்வை முடித்துக் கொள்ளும் துணிச்சல் அவளுக்கு வரவில்லை. காரணம், தன்னை முழுமையாக நம்பி நிற்கும் குடும்பம் – தன்னை எதிர்பார்த்துக் காத்திருக்கும் அன்புக்குரியவர்களை, ஒரு கொடியவனின் செயலால் தவிக்க விடத் தயாராக இல்லை அவள்.

ஆயினும், இந்த அதிர்ச்சியிலிருந்து எளிதாக விடுபட முடியவில்லை. இருதலைக் கொள்ளி எறும்புபோல் தவித்தாள் திவ்யா.

அதன் பிறகு மிதுன் அவள் முன் தோன்றவே இல்லை. ஆனால் அவனது நண்பர்கள் மூலம் இந்த சம்பவம் கல்லூரியில் சிலரிடையே பரவியது. இதன் விளைவாக, அவள் பலரின் இரக்கப் பார்வைகளுக்கும், கேலிச் சிரிப்புகளுக்கும் இலக்காக நிற்க நேர்ந்தது.

அவளின் கல்லூரிக் காலத்தின் இறுதி நாட்கள் இத்தகைய கொடூர சூழலில் கழிந்தன. பட்டப்படிப்பை முடித்து ஒரு வாரத்திற்குள் வேலையில் சேர்ந்தாள் திவ்யா. வாழ்வின் அடுத்த கட்டம் பற்றி யோசிக்கவே இல்லை; திருமணம் என்பதே தன் வாழ்வில் இல்லை என்ற முடிவில் உறுதியாக இருந்தாள். நடந்த சம்பவங்கள் எதுவும் தன் குடும்பத்திற்குத் தெரியாமல் பார்த்துக் கொண்டாள். கடின உழைப்பால் குடும்பத்தின் நிலையை உயர்த்தினாள். எனினும், வீட்டில் திருமணப் பேச்சு எழுந்தால் எப்போதும் ஏதோ ஒரு காரணம் காட்டித் தவிர்த்துவந்தாள். ஆனால் இந்த நிலைக்கும் ஒரு முடிவு வரவிருப்பதை அப்போது அவள் அறியாதிருந்தாள்.

மறுபுறம், கல்லூரி வாழ்க்கை முடிந்த சில நாட்கள் வரை சந்தோஷமாக காலத்தை கடத்திய மிதுன், தந்தையின் மரணத்தைத் தொடர்ந்து தன் விளையாட்டுத்தனங்களை அடியோடு விட்டொழித்தான். குடும்பத் தொழிலைப் பொறுப்போடு ஏற்று நிர்வகிக்கத் தொடங்கினான். இதில் வெற்றியும் கண்டான். தன் வீட்டில் நடந்த சம்பவங்கள் எதுவும் குடும்பத்தினர் அறியாமல் நடந்தேறின. அவனது நண்பர்களும் இந்த நிகழ்வுகளை மறந்து தங்கள் வாழ்க்கையின் அடுத்த கட்டங்களுக்கு முன்னேறினர். மிதுனின் குடும்பத்திலும் அவனுக்கான திருமண ஏற்பாடுகள் தொடர்ந்தன.

இவ்வாறு இருவரின் வாழ்க்கையும் தனித்தனியே நகர்ந்து கொண்டிருக்கும் போது, அவர்களின் விதியை மாற்ற ஒருவர் வெளிநாட்டிலிருந்து தாய்நாடு திரும்பினார். அவர் வருண். தந்தை தாய்நாட்டில் வெற்றிகரமான தொழிலை நடத்தியவர். தொழில் சம்பந்தப்பட்ட படிப்புக்காக வெளிநாட்டில் கல்வி பயின்ற, வசதியான குடும்பத்தைச் சேர்ந்த ஒரே மகன். வெளிநாட்டில் கல்வி கற்றாலும் தாய்நாட்டுக் கலாசாரத்தோடு இணைந்து வளர்ந்த குணமுள்ளவர். நான்கு ஆண்டுகால கல்வியை முடித்து தாய்நாடு திரும்பிய அவர், தந்தையின் தொழிலைத் திறம்பட நிர்வகிக்கத் தொடங்கினார். இப்போது அவரது பெற்றோர் அவருக்குக் குடும்ப வாழ்வை அமைத்துக் கொடுக்கத் திட்டமிட்டனர்.

பெற்றோர் தன் திருமணப் பேச்சைத் தொடங்கியபோது, தன் தந்தையின் முன்னாள் செயலாளராக இருந்த திவ்யாவிடம் தன் விருப்பத்தைப் பகிர்ந்தான் வருண். முதலில் அதிர்ச்சியடைந்த அவள், வாழ்க்கைத் தரத்தில் உள்ள வேறுபாட்டைக் காரணம் காட்டி முற்றிலும் மறுத்தாள். திவ்யா அவன் கண்களில் தெரிந்த உண்மையான நோக்கத்தை உணர்ந்தும், பல காரணங்கள் கூறியும் அவன் தன் முடிவில் உறுதியாக இருந்ததால், இறுதியாக தன் கடந்தகாலத்தை வெளிப்படுத்தினாள். வருணின் பதில் அவளை மலைக்க வைத்தது.

திவ்யாவின் காரணங்களை ஏற்க மறுத்த வருண், அவள் வெளியிட்ட உண்மையைக் கேட்டபோது தன் முடிவை மாற்றிக்கொண்டான். இது திவ்யாவுக்கு எதிர்பாராததாக இருந்தது.

தந்தையின் தொழிலை வருண் ஏற்றபிறகு, முதலாளி – செயலாளர் சந்திப்புகளாகவே திவ்யாவுடனான தொடர்பு தொடங்கியது. காலப்போக்கில் இது காதலாக மாறியபோதும், திவ்யாவின் அசாதாரணமான அமைதியும், ஆண்களிடம் காட்டும் பயம் நிறைந்த நடத்தையும் அவனை சிந்திக்க வைத்தன. இதனால் அவளைப் பற்றி அவளறியாமல் விசாரித்தான். இறுதியாக தன் பெற்றோருடன் சென்று முறைப்படி திவ்யாவை மணம் கேட்டான். முதலில் பயந்த அவள் பெற்றோர், வருணின் குணத்தை அறிந்தபின் சம்மதம் தெரிவித்தனர். தன் பெற்றோரும் ஒப்புக்கொண்டதால், உண்மையான காரணத்தை வெளிப்படுத்த முடியாமல் திருமணத்திற்கு சம்மதித்தாள் திவ்யா.

அலங்கார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட நட்சத்திர விடுதி தோட்டத்தில் கோலாகலமாக நடந்த திருமண விழாவில், வருண்–திவ்யா இணையின் முகத்தில் மகிழ்ச்சி தெரிந்தது. ஆனால் திவ்யாவின் கண்களில் ஒரு சோகம் நிழலாடியது. ஐந்தாம் ஆண்டு திருமண விழாவில், "இனி உங்கள் இருவரை மூவராகப் பார்க்க வேண்டும்" என்ற வாழ்த்துக்கள் அவளை உள்ளூர வருத்தின. எனினும் வரவேற்பில் முழுக் கவனத்துடன் இருந்தாள்.

விழாவிற்கு வந்த பலருள், மிதுனுடன் புதிய தொழில் ஒப்பந்தத்தில் இறங்கியிருந்த வருணும் அவர் மனைவி திவ்யாவும், மூன்று வயது மகளுடன் வந்திருந்தனர். தான் மிதுனின் திருமண விழாவிற்கு வருவதை அறியாத திவ்யா அவனைக் கண்டு அதிர்ச்சியடைந்தாள். வருணோ, தன்னால் வாழ்வு பாழான ஒரு பெண்ணின் தற்போதைய மகிழ்ச்சியை மிதுனுக்குக் காட்டவே விரும்பினான். ஆனால் அடுத்து நடந்ததை அவன் எதிர்பார்க்கவில்லை.

முதலில் திவ்யாவையும் அவள் கையிலிருந்த குழந்தையையும் அதிர்ச்சியுடன் பார்த்த மிதுன், "இது என் காதல் மனைவி திருமதி திவ்யா வருண்" என்று வருண் அறிமுகப்படுத்தியபோது மேலும் திகைத்தான். தன்னால் ஏற்பட்ட துயரத்திற்குப் பிறகு அவள் வாழ்வில் மகிழ்ச்சி இருக்காது என நினைத்த அவனால், அவளின் இந்த வெற்றியை ஏற்க முடியவில்லை. அவளை மீண்டும் துயரத்தில் ஆழ்த்த எண்ணினான். இதற்காக வருணைத் தனியே அழைத்துச் சென்று கல்லூரிக் காலத்தில் நடந்த உண்மைகளை எல்லாம் வெளிப்படுத்தினான்.

வருண் அனைத்தையும் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்தான். ஆனால் அவன் மட்டுமல்ல, திவ்யாவும் அவர்களுடன் இருந்தாள். மிதுனையும் வருணையும் உணவுக்கு அழைக்க வந்த வர்ஷா, அவர்கள் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டாள். கதவு சற்றே திறந்திருப்பதைக் கண்டும், அவர்கள் கவனிக்கவில்லை. வர்ஷா அனைத்தையும் கேட்டுக்கொண்டிருந்தாள்.

ஒரு சாதாரண கேலிக்காக ஒரு பெண்ணின் வாழ்வை அழித்த கணவனை எண்ணி வெட்கப்பட்ட அதே வேளை, பாதிக்கப்பட்ட பெண்ணின் கடந்தகாலத்தைப் பற்றிக் கவலைப்படாமல் உண்மையான காதலை நிலைநாட்டிய வருணை எண்ணி பெருமை கொண்டாள். எனினும், குழந்தை பிறப்பு குறித்து ஏற்கனவே மனக்கவலையில் இருந்த அவளால், கணவனின் இழிசெயலை ஏற்க முடியவில்லை. ஒரு முடிவெடுத்து, அவர்களை உணவு அறைக்கு அழைத்துச் சென்றாள்.

நள்ளிரவில் விழா முடிந்து, அனைவரும் சென்றபின், வேலைகளை எல்லாம் முடித்துவிட்டு மனைவியைத் தேடி வந்தான் மிதுன். அவனைப் பார்த்தும் பாராதது போல், தன் உடைமைகளைப் பயணப் பொதியில் அடுக்கிக் கொண்டிருந்தாள் வர்ஷா. இதுவரை தன்னிடம் எதையும் மறைக்காதவள் இன்று ஏதும் சொல்லாமல் இப்படி செய்வது அவனுக்கு வியப்பைத் தந்தது.

"இந்த நடுச்சாமத்தில் எங்கே வெளியே... காலையில் போகலாம் நிதானமாக," என்றான் மிதுன்.

"இல்லை... நான் இப்போதே போகிறேன்.

விவாகரத்து ஆவணத்தில் கையெழுத்து வைக்க" என்று உறுதியாகச் சொன்னாள்.

"என்ன பைத்தியமா உனக்கு? எதுக்கு இப்ப விவாகரத்து?" என்று கோபத்துடன் கேட்டான் மிதுன்.

அதற்கு வர்ஷா சொன்ன பதில் அவனை முடக்கிவிட்டது: "கலியாணத்துக்கு முதலே கற்பு இழந்த ஒருத்தன் எண்டு தெரிஞ்ச பிறகும் என்னால இனி உங்களோட இருக்க ஏலாது"

"கல்யாணத்துக்கு முன்னே கற்பிழந்தவள் என்று தெரிந்தும் எப்படி அவளோடு இருக்க முடிகிறது...?"

அவன் வருணை நோட்டமிட்டுக் கேட்ட அதே கேள்வி. திவ்யாவின் முன்னால் வருணே இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும் என்று அவன் ஆசைப்பட்ட அதே சொற்கள். இப்போது அந்தச் சொற்களே தன் மனைவியின் உதடுகளிலிருந்து வெளிப்படுவதைக் கண்டு, மிதுன் கல்லாக உறைந்து நின்றான். எப்படித் தடுப்பது, என்ன சொல்வது என்று அறியாமல், அவன் உள்ளங்கை வியர்வையில் நனைந்தது.

"கற்பு" என்ற அந்த ஒரே அளவுகோல் பெண்களுக்கு மட்டுமே விதிக்கப்படும் வரையில், பெண்களின் கற்புக்கு உண்மையான பாதுகாப்பு எப்போதுமே கிடைக்காது. தன் மனைவி தன்னிடமே முதல் முறையாகவும், இறுதி முறையாகவும் தன் கற்பை அர்ப்பணிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் ஆண்களில், சிலராவது தாமும் தங்கள் மனைவியிடம் மட்டுமே தங்கள் கற்பைக் காத்துக்கொள்ள வேண்டும் என்பதை உணர வேண்டும்.

இருவருக்குமிடையே ஓரங்கட்டப்பட்ட இந்தக் கற்பு கோட்பாடு மட்டுமே உண்மையான சமத்துவத்தை நிலைநாட்ட முடியும். ஒரு திருமணத்தில் இருவரும் ஒருவருக்கொருவர் முழுமையாக அர்ப்பணிக்கப்படுவதே உண்மையான காதலின் அடையாளம். பெண்ணின் மானம் மட்டுமே சோதனைக்கு உட்படுத்தப்படும் இந்தச் சமூகத்தில், ஆண்களும் தங்கள் கற்பைப் பற்றிய உணர்வை வளர்க்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

இதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். ஆயிரம் கதைகள் சொல்லியும், ஆயிரம் பேச்சுகள் நடத்தியும், "கற்பு" என்பது ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவானது என்பதை நாம் ஏற்க மறுக்கும் வரை, பெண்களின் கற்பைக் கையாலடிக்கத் திட்டமிடும் ஆண்களின் மனப்பாங்கு மாறாது.

கற்பு என்பது பெண்ணின் உடல் மீதே கணிக்கப்படும் வரையில், பாரதியின் கண்ணம்மாவைப் போன்ற பெண்கள் கற்பனை உலகத்தில் மட்டுமே வாழ்வார்கள் – இதுவே கசப்பான உண்மை.

கற்பு என்பது குருதிக்கு நிகரானது. மனிதன் உயிர்வாழ்வதற்கு இன்றியமையாதது. ஆணாயினும், பெண்ணாயினும் – இருவருக்கும் இந்த நெறிமுறை ஒன்றே. இருவரும் ஒருவருக்கொருவர் அளிக்கும் முழுமையான அர்ப்பணிப்பே உண்மையான கற்பின் வெளிப்பாடு.

---

## தொலைவும் ரசிப்பும்

*கணணி வழியே கனமான மின்மடல் வந்து*
*விழுந்தது.*
*விரித்துப் பார்த்தேன்.*
*அருவி ஒன்று நுரை பொங்கத் துள்ளிக் குதித்தது;*
*அந்தி வானம் சூரியனின் செம்மையை அணிந்து மகிழ்ந்தது;*
*பனி மலைகள் பாதரசமாய் உருகி வழிந்தன*
*வனங்கள் வானுயர நிமிர்ந்து நின்றன*
*மலர்கள் மரணத்தை மறந்து சிரித்திருந்தன*
*வல்லூரறொன்று வான்வெளியை அளந்தது;*
*அணில்களும் ஆந்தைகளும்*
*பாலையும் புல்வெளியுமாய்ப்*
*படங்கள் ஒரு நூறாய் விளைந்தன.*


*ஒவ்வொரு படத்திலும்*
*இயற்கையின் அழகின் உன்னதத்தை*
*வியந்து போற்றும் ஒரு வாசகம்.*

*கணனி முன் குந்தியிருந்து*
*படங்களை எனக்கு அனுப்பியவன்*
*எப்போதாவது ஆறுதலாகத்*
*தன் அறையின் யன்னல் வழியாக*
*இரவிலோ பகலிலோ*
*தன் தலைக்கு மேலிருந்த*
*வானத்தைப் பார்த்திருப்பானா?*



கவிஞர் சி. சிவசேகரம்

நன்றி : சிவசேகரம் கவிதைகள்



# தந்தை பெரியார்:

## ஒரு சீர்திருத்த முன்னோடியை மீண்டும் புரிந்துகொள்ளல்

*உலவி*

*முன்னுரை*

"சுயமரியாதை, சமத்துவம், நியாயம்" ஆகியவற்றைத் தன் வாழ்க்கைக் கொள்கையாகக் கொண்ட ஒரு மாபெரும் சிந்தனையாளரைப் பற்றி பேசும்போது, அவரைச் 'சார்பாக'வோ 'எதிராக'வோ மட்டும் பார்க்காமல், வரலாற்று சூழலில் (historical context) அவரது சீர்திருத்தப் பணியைப் பார்க்க வேண்டும். திராவிட இயக்கத்தின் தந்தையான பெரியார் ஈ.வெ.ராமசாமியைப் பற்றிய பல காழ்ப்புணர்வுகள் (Misconceptions) அவரது கொள்கைகளை முழுமையாகப் புரிந்துகொள்ளாததில் இருந்தும், அவர் பயன்படுத்திய கடுமையான சொற்களின் அர்த்தத்தைத் தவறாகப் புரிந்துகொள்வதில் இருந்தும் தோன்றியவை.

*காழ்ப்புணர்வு 1: 'பெரியார் இந்து மதத்தை எதிர்த்தவர்'*

காழ்ப்புணர்வு: பெரியார் இந்து மதத்தையும், அதன் கடவுள்களையும் துவேஷிப்பவர்.

*வரலாற்று உண்மை:*

பெரியார் மதத்தையல்ல, மதத்தின் பெயரால் நடைபெறும் அநீதிகளை எதிர்த்தவர். அவர் எதிர்த்தது:

- சாதி வேறுபாடு: மத நூல்களில் சாதி அமைப்புக்கு ஆதரவு தரும் பகுதிகள்.
- புரோகித மையம்: சாதிப்பட்டியல்களின் அடிப்படையில் மட்டுமே சிலருக்கு மதச் சடங்குகளை நடத்த உரிமை வழங்கும் முறை.
- நம்பிக்கை சுரண்டல்: மக்களை மூடநம்பிக்கையில் வைத்து சுரண்டுவதை அவர் கடுமையாக விமர்சித்தார்.

அவரது குறிக்கோள், மனிதன் மதத்தின் அடிமையாக இருக்காமல், காரண காரியத்தை ஆராய்ந்து, சுயமரியாதையோடு வாழ்வதாகும். "நானே என் கடவுள்" (Self-Respect is my God) என்பது அவரது பிரசித்தமான முழக்கம்.

*காழ்ப்புணர்வு 2: 'பெரியார் தமிழகத்தை விந்தியத்திற்குத் தெற்கே பிரிக்க விரும்பினார்'*

காழ்ப்புணர்வு: பெரியார் தமிழ்நாட்டை இந்தியாவில் இருந்து பிரிக்க விரும்பினார் (பிரிந்தியதுவாதம்).

*வரலாற்று உண்மை:*

இது பெரியாரின் கொள்கையை மிகவும் தவறாகப் புரிந்துகொள்ளும் ஒரு கருத்து. பெரியார் திராவிட நாடு" கோரிக்கையை முன்வைத்தது, வட இந்திய மேலாதிக்கத்தால் தமிழர் மொழி, கலாசாரம், பொருளாதாரம் புறக்கணிக்கப்படுவதை எதிர்க்கும் ஒரு எதிர்ப்பு இயக்கமாக இருந்தது. இது ஒரு அரசியல் கோரிக்கை; இன்றைய கூட்டரசு முறைக்கு (federalism) இணையானது. பின்னர், இந்திய அரசியலமைப்பு மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் அளித்தபோது, இந்தக் கோரிக்கை தானாகவே தீர்வு கண்டது. பெரியார் ஒரு பிரிவினைவாதியல்ல, ஒரு சமத்துவவாதி மற்றும் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடியவர்.

*காழ்ப்புணர்வு 3: 'பெரியார் தமிழ் மொழியை வெறுத்தவர்'*

காழ்ப்புணர்வு: சமசுகிருதச் சொற்கள் நிறைந்த இந்தியை எதிர்த்ததால், தமிழை வளர்க்க விரும்பவில்லை.

*வரலாற்று உண்மை:*

இது முற்றிலும் தவறான கருத்து. பெரியார் மொழி வழிக் கல்வி (mother tongue education)-இன் மிகப் பெரிய ஆதரவாளர். அவர் எதிர்த்தது:

- இந்தி மொழி ஆதிக்கம்: இந்தியை கட்டாயப் படுத்துவதை மட்டுமே எதிர்த்தார். தமிழர்களின் தாய்மொழியான தமிழில் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.
- மொழிச் சார்பின்மை: தமிழ் மொழி வளர வேண்டும்,

ஆனால் அது மூடநம்பிக்கை மற்றும் சாதி வேறுபாட்டிலிருந்து விடுபட வேண்டும் என்று கருதினார்.

அவரது இயக்கம் தமிழ் மொழியில் ஏராளமான நூல்கள், பத்திரிகைகள் மற்றும் இலக்கியங்களை உருவாக்கியது. தமிழ் சமூகத்தின் முன்னேற்றத்திற்காகவே அவர் தன் வாழ்நாளை அர்ப்பணித்தார்.

*காழ்ப்புணர்வு 4: 'பெரியாரின் பேச்சு மரியாதையற்றது'*

காழ்ப்புணர்வு: பெரியார் கடுமையான மற்றும் மரியாதையற்ற மொழியைப் பயன்படுத்தினார்.

*வரலாற்று உண்மை:*

அவர் பயன்படுத்திய கடுமையான மொழி, ஒரு நோக்கத்திற்காக. நூற்றாண்டுகளாக சமூகத்தில் ஆழப் பதிந்து கிடந்த மூடநம்பிக்கைகள் மற்றும் அநீதிகளை உடைக்க, ஒரு "சுத்தியல்" (hammer) போன்ற தாக்கம் தேவைப்பட்டது. அந்தக் காலக்கட்டத்தில், மென்மையான பேச்சு மக்களின் கவனத்தை ஈர்க்கவோ, நிலைத்திருக்கும் சமூகக் கட்டமைப்புகளை அசைக்கவோ இயலவில்லை. அவரது கடுமையான சொற்கள் ஆத்திரமானவை அல்ல, ஆனால் ஒரு சீர்திருத்தவாதியின் வேண்டுமென்றே தேர்ந்தெடுக்கப்பட்ட மொழிக் கருவியாகும்.

*காழ்ப்புணர்வு 5 :*

"பெரியார் தனது சொந்த மகளாக வளர்த்தவரை திருமணம் செய்து கொண்டார், இது ஒரு தவறான மற்றும் நெறிமுறையற்ற செயல்" என்பதே முக்கிய காழ்ப்புணர்வு.

*வரலாற்று உண்மைகள் மற்றும் முழுமையான பின்னணி*

இந்த நிகழ்வைப் புரிந்துகொள்ள, அதை அக்கால சூழலுக்குள் வைத்துப் பார்ப்பது மிகவும் அவசியம்.

1. உறவுமுறை மற்றும் வளர்ப்பு:

மணியம்மை பெரியாரின் சொந்த மகள் அல்ல.

அவர் பெரியாரின் மனைவி நாகம்மையாரின் சகோதரனின் மகள். அதாவது, பெரியாருக்கு மணியம்மை மைத்துனி மகள் (niece).

மணியம்மை சிறு வயதில் தன் பெற்றோரை இழந்தபோது, பெரியார் மற்றும் நாகம்மையார் அவரை தத்தெடுத்து (வளர்ப்பு மகளாக) வளர்த்தனர். இந்த "வளர்ப்பு" ஒரு கண்ணியமான, சமூகப் பொறுப்பாக அல்லாமல், ஒரு குடும்ப உறவினருக்கு ஆதரவு அளிப்பதாக இருந்தது.

2. திருமணத்தின் நோக்கம் மற்றும் சூழல்:

இந்த திருமணம் ஒரு தனிப்பட்ட காம இச்சையால் ஏற்பட்டது அல்ல. இது ஒரு கொள்கை சார்ந்த, சமூகத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கும் சீர்திருத்த நிகழ்வாக (a radical social reform) திட்டமிடப்பட்டது.

வயது வித்தியாசத்தை எதிர்த்து: அக்காலத்தில் முதிய வயதான ஆண்கள் இளம் பெண்களை (குறிப்பாக சிறுபெண்களை) திருமணம் செய்து கொள்வது ஒரு பொதுவான சமூகக் கொடுமையாக இருந்தது. பெரியார், தனக்கு (பெரியவருக்கு) மணியம்மை (இளம் பெண்) திருமணம் செய்து கொள்வதன் மூலம், இந்த வயது வித்தியாசத்தைக் கொண்ட திருமணங்களின் முட்டாள்தனத்தை சாடுவதே அவரது நோக்கம்.

வளர்ப்பு மகள் கருத்தை சவால் செய்தது: "வளர்ப்பு மகள்" என்ற பெயரில் ஒருவரை வளர்த்தால், அவர் வாழ்நாள் முழுவதும் "மகள்" என்ற நிலையிலேயே இருக்க வேண்டுமா? அவரும் ஒரு முழு உரிமையுள்ள பெண்ணாக வளர்ந்து, தன் வாழ்க்கையைத் தேர்வு செய்யக் கூடாதா? என்ற கேள்வியை இந்த திருமணம் எழுப்பியது.

சமூகத்தின் போலித்தனத்தை வெளிக்காட்டுதல்: பெரியார், சமூகம் "தத்தெடுப்பு" மற்றும் "திருமணம்" போன்ற வார்த்தைகளின் மீது கொண்டுள்ள போலி நெறிமுறைகளை (hypocrisy) தாக்குவதற்காகவே இந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்தார். இது ஒரு சமூக சோதனை (social experiment) போன்றது.

3. மணியம்மையின் சம்மதம் மற்றும் பங்கு

இந்தத் திருமணம் மணியம்மையின் முழுச் சம்மதத்தோடு நடந்தது. அவர் ஒரு பகுத்தறிவாளராகவும், பெரியாரின் கொள்கைகளில் நம்பிக்கையுள்ளவராகவும் வளர்ந்திருந்தார். இந்தத் திருமணம் ஒரு கொள்கைச் சேர்ப்பாக (ideological partnership) அவராலும் கருதப்பட்டது. பெரியார் அந்தத் திருமணத்தின் மூலம் மணியம்மைக்கு ஒரு சமூக மரியாதை மற்றும் அங்கீகாரத்தை வழங்கினார், அவர் வாழ்நாள் முழுவதும் ஒரு "வளர்ப்பு மகள்" என்ற தாழ்வான ஸ்தானத்தில் இருக்க வேண்டியதில்லை என்பதை உறுதி செய்தார்.

*ஒரு தீர்மானமான சமூகச் செய்தி*

பெரியார்–மணியம்மை திருமணத்தை "நெறி முறைக் கேடு" என்று பார்க்கும் பார்வை, அதன் ஆழமான சீர்திருத்தத் தத்துவத்தை முழுமையாகத் தவறவிடுகிறது.

இது ஒரு தனிப்பட்ட சம்பவம் அல்ல; இது ஒரு கண்ணியமான, கொள்கை சார்ந்த, சமூகத்தின் மூட நம்பிக்கைகளை உடைக்க திட்டமிடப்பட்ட ஒரு சாதனை.

அவர்களின் வாழ்க்கை இணைந்து வாழ்ந்த விதம், பெரியாரின் இயக்கத்தில் மணியம்மையின் முக்கிய பங்கு, மற்றும் அவர் தனக்குப் பின் பெரியார் சொத்துக்களின் முழு உரிமையாளராக விளங்கியது

ஆகியவை, இத்திருமணம் ஒரு உண்மையான மற்றும் மரியாதைக்குரிய கூட்டணி என்பதை நிரூபிக்கிறது.

எனவே, இந்த நிகழ்வை ஒரு காழ்ப்புணர்வின் (வக்கிரம்) வழியாகப் பார்ப்பதை விட்டுவிட்டு, ஒரு சமூக சீர்திருத்தவாதி, தனது சொந்த வாழ்க்கையை ஒரு எடுத்துக்காட்டாகப் பயன்படுத்தி, சமூகத்தின் ஊனப்படும் நடைமுறைகளை எதிர்த்து எவ்வாறு போராடினார் என்பதைப் புரிந்துகொள்வதே நியாயமான மற்றும் பகுத்தறிவுள்ள அணுகுமுறையாகும்.

***முடிவுரை: ஒரு மாபெரும் சீர்திருத்தவாதி***

தந்தை பெரியாரை மதிப்பிடுவதற்கு முன், நாம் நம்மைக் கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி: "அவர் எதிர்த்தது என்ன? அவர் கட்டியது என்ன?"

- அவர் எதிர்த்தது: சாதி, மூடநம்பிக்கை, மதத்தின் பெயராலான சுரண்டல், பெண்ணடிமைத்தனம், கல்விக் குறைபாடு.
- அவர் கட்டியது: சுயமரியாதை, பகுத்தறிவு, பெண்ணுரிமை, சமத்துவம், சமூக நீதி.

அவரது சொற்கள் கடுமையாக இருந்திருக்கலாம், ஆனால் அவரது செயல்கள் சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வலிமை அளித்தன. அவர் ஒரு "அழிப்பவர்" அல்ல; ஒரு "பழமையான, அழுகிய கட்டிடத்தை இடித்து, அதன் இடத்தில் சமத்துவம் என்ற புதிய அடித்தளம் போட முயன்ற ஒரு கட்டிடக் கலைஞர்."

ஒரு சமூக சீர்திருத்தவாதியை முழுமையாகப் புரிந்துகொள்ள, அவரது கருவிகளை (சொற்கள்) மட்டும் பார்ப்பதில்லை, அவர் உருவாக்க முயன்ற கட்டிடத்தின் (சமூகம்) திட்டத்தையும் பார்க்க வேண்டும். அந்த வகையில், தந்தை பெரியார் தமிழுக்கு அளித்த சீர்திருத்தப் பாரம்பரியம், இன்றும் நமது சமத்துவம் மற்றும் நீதிக்கான போராட்டத்திற்கு வழிகாட்டும் ஒரு விளக்காகத் திகழ்கிறது.

---

# நமது தேவை

*முருகையன்*

*கலைகள் எல்லாம் மனிதர்களின் நுகர்ச்சிக்காக*
*கருத்துகளைக் கையாளும் திறமை என்ற*
*வலுவும் உள்ளோர் கலைஞர்களாய் வாய்ப்பார் என்றால்*
*மண் முழுதும் அவராலே பயன் எய்தாதோ?*
*சிலர் கலையை மறைவாகப் பொத்தி வைத்தால்,*
*சிரித்தொதுக்கத் தக்கது அந்தச் சிறிய செய்கை*
*உலகமெலாம் தழுவியதே*
*உண்மையான உயர் கலையாம்*
*அதுவே தான் நமக்கும் தேவை.*
*சமீன்தாரின் மாளிகையில்,*
*தனி அறைக்குள்*
*தம்மளவில் தலயாட்டித் தாளம் போட*
*அமைவதுதான் பரதம் என்ற நிலைமை மாறி*
*ஆண்டு பல ஆயிற்றே!*



*ஆனால்... ஒன்று-*
*நவ வாழ்வில் ஊறி நிற்கும உணர்வினோடும்*
*நம்முடைய பரதகலை உறவு கொண்டால்,*
*சுவையான பல புதிய படைப்புத் தோன்றும்*
*சொக்கிநிற்பார் எல்லோரும்-*
*அதுவும் தேவை.*

*1967*
*- நன்றி: மாடும் கயிறுகள் அறுக்கும்*

தோட்டப்புறம்

# வெள்ளை ஈக்களிலிருந்து தென்னை மரங்களைப் பாதுகாத்தல்:

## ஒரு விரிவான வழிகாட்டி

*உலவி*

தென்னை மரங்கள் நம் வாழ்வாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் மிகவும் முக்கியமானவை. ஆனால் வெள்ளை ஈக்கள் (*Whiteflies – Bemisia tabaci* மற்றும் பிற இனங்கள்) என்ற சிறிய பூச்சிகள் இந்த மரங்களுக்கு கடுமையான அச்சுறுத்தலாக உள்ளன. இவை இலைகளின் அடிப்பகுதியில் தங்கி, தாவரச்சாற்றை உறிஞ்சி, தென்னையின் ஆரோக்கியத்தையும் மகசூலையும் பெரிதும் பாதிக்கின்றன. இவற்றிலிருந்து தென்னையைப் பாதுகாக்க பல்வேறு முறைகளைப் பின்பற்றலாம்:

வெள்ளை ஈக்களின் பாதிப்புகள்:

- சாற்றை உறிஞ்சுதல்: இளம் இலைகள் மற்றும் தண்டுகளில் இருந்து சாற்றை உறிஞ்சி, தாவரத்தை பலவீனப்படுத்துகின்றன.
- கொப்புளப் பூஞ்சை (*Sooty Mold*): வெள்ளை ஈக்கள் வெளியேற்றும் தேன் பசை (Honeydew) எனப்படும் சர்க்கரைப் பசையில் ஒரு கரும் பூஞ்சை வளரும். இது இலைகளை கருப்பாக மூடி, ஒளிச்சேர்க்கை மற்றும் சுவாசத்தைத் தடுக்கிறது.
- வளர்ச்சி குன்றுதல்: பலவீனமடைந்த மரங்களின் வளர்ச்சி குறைகிறது, காய்கள் சிறியதாகவோ அல்லது குறைவாகவோ இருக்கலாம்.
- நோய்களைப் பரப்புதல்: சில வெள்ளை ஈக்கள் தென்னை லீஃப் கருமைப்பு நோய் (*Coconut Cadang-Cadang Viroid – CCCVd*) போன்ற அபாயகரமான வைரஸ் நோய்களை பரப்புகின்றன.

பாதுகாப்பு முறைகள்:

1. கண்காணிப்பும் தடுப்பும்:

- வழக்கமான சோதனை: தென்னை இலைகளின் (குறிப்பாக இளம் இலைகள்) அடிப்புறத்தை வழக்கமாகப் பார்வையிடுங்கள். வெள்ளை நிற, சிறிய, பறக்கக்கூடிய பூச்சிகளின் திரட்சியையோ அல்லது அவற்றின் முட்டைகள்/குடம்பிகளையோ கண்டறியலாம்.
- சுகாதாரம்: வீழ்ந்த இலைகள், காய்ந்த கிளைகள் போன்றவற்றை அப்புறப்படுத்தி, பூச்சிகள் வாழ்வதற்கான இடங்களைக் குறைக்கவும். களைகளைக் கட்டுப்படுத்தவும்.
- உரமிடுதல்: சீரான உரமிடுதல் ஆரோக்கியமான மரங்களை வளர்க்க உதவுகிறது, அவை பூச்சி அழுத்தத்தைச் சிறப்பாகத் தாங்கும்.

2. இயற்கை/உயிரியல் கட்டுப்பாடு:

- இயற்கை எதிரிகள்: வெள்ளை ஈக்களின் இயற்கை எதிரிகளை ஊக்குவிக்கவும் பாதுகாக்கவும். இவற்றில் அடங்கும்:
- பரிசேய்டாய்டு குளவிகள் (*Parasitoid Wasps – 'Encarsia' spp., 'Eretmocerus' spp.*): இவை வெள்ளை ஈக்களின் குடம்பிகளில் முட்டையிடுகின்றன.
- திண்ணிப்பூச்சிகள் (*Ladybird Beetles – 'Serangium' spp.*): இவை வெள்ளை ஈக்களின்



குடம்பிகளையும் முதிர் பூச்சிகளையும் உண்கின்றன.

- பூச்சித் தின்னிகள் (*Lacewings*), கணுக்காலிப் பூச்சிகள் (*Predatory Mites*), தவளைகள், பறவைகள்.
- பூச்சிக்கொல்லி தாவரங்கள்: நெல்லி, துளசி, வெந்தயம், பூண்டு போன்ற பூச்சி விரட்டும் தாவரங்களை தென்னைத் தோட்டத்தின் சுற்றுப்புறங்களில் நடவு செய்யலாம்.
- * பூச்சி விரட்டும் பொருட்கள்: நீர்மிளகாய்த் தூள், பூண்டு, சிறுநெருஞ்சில் ஆகியவற்றைக் கொண்டு தயாரிக்கப்படும் இயற்கைக் கரைசல்களைத் தெளிக்கலாம் (எ.கா: 1 லிட்டர் தண்ணீரில் 10–15 மிளகாய் + 10–15 பூண்டு பற்கள் அரைத்து, 24 மணி நேரம் ஊறவைத்து, வடிகட்டி, சிறிது சோப்புநீர் சேர்க்கப்பட்ட கரைசல்).

3. இயற்கைப் பூச்சிக்கொல்லிகள்:

- நீம் எண்ணெய் (*Neem Oil*): இது வெள்ளை ஈக்களின் வளர்ச்சியையும் இனப்பெருக்கத்தையும் தடுக்கிறது. பரிந்துரைக்கப்பட்ட அளவில் (பொதுவாக 2–5 மிலி/லிட்டர் தண்ணீர்) நன்கு கலந்து, குறிப்பாக இலைகளின் அடிப்பகுதிக்கு தெளிக்கவும். 7–10 நாட்கள் இடைவெளியில் 2–3 முறை தெளிக்கவும். நேரடி வெயிலில் தவிர்க்கவும்.
- சோப்புக் கரைசல் (*Insecticidal Soap*): இது பூச்சிகளின் புறத்தோலை உடைத்து அவற்றை வதைக்கிறது. வணிக ரீதியான பூச்சிக்கொல்லி சோப்புகளை அல்லது மென்மையான திரைச்சோப்பை (5–10 மிலி/லிட்டர் தண்ணீர்) பயன்படுத்தி, இலைகளின் அடிப்பகுதிக்கு நேரடியாகத் தெளிக்கவும்.

4. வேதிப்பூச்சிக்கொல்லிகள் (கடைசி முயற்சியாக):

வேதிப்பூச்சிக்கொல்லிகளை கடைசிவாய்ப்பாக மட்டுமே பயன்படுத்தவும். அவை பயனுள்ள பூச்சிகளையும் கொல்லும் மற்றும் சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும்.

- தேர்வு: இமிடாக்ளோப்ரிட் (*Imidacloprid*), அசீடாமிப்ரிட் (*Acetamiprid*), பைரித்ர்ராய்டுகள் (*Pyrethroids* – எ.கா: லேம்ப்டா–சைஹாலோத்ரின்) போன்றவை பயன்பாட்டில் உள்ளன. எப்போதும் பரிந்துரைக்கப்பட்ட பூச்சிக்கொல்லியையும், சரியான அளவையும் பயன்படுத்தவும்.
- கவனம்: இலைகளின் அடிப்பகுதிக்கு நன்றாகத் தெளிக்க வேண்டும். பூச்சிக்கொல்லிகளில் மாறி மாறி பயன்படுத்தவும் (ஒரே மாதிரியான வேதிப்பொருளை தொடர்ந்து பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்), இல்லையெனில் வெள்ளை ஈக்கள் எதிர்ப்புத் திறனை வளர்த்துக்கொள்ளும்.
- பாதுகாப்பு: தெளிக்கும் போது கைக்குறைகள், முகமூடி, கண்காடி போன்ற பாதுகாப்பு சாதனங்களை அணியவும்.

5. பிற நடவடிக்கைகள்:


- கொப்புளப் பூஞ்சையைக் கட்டுப்படுத்துதல்: கொப்புளப் பூஞ்சை பிரச்சினையாக இருந்தால், அதைக் கட்டுப்படுத்த சோப்புக் கரைசல் அல்லது நீம் எண்ணெயைப் பயன்படுத்தலாம்.
- காற்றோட்டம்: மரங்கள் நெருக்கமாக நட்டிருந்தால், சிலவற்றை நீக்கி காற்றோட்டத்தை மேம்படுத்தவும்.

முக்கிய பரிந்துரைகள்:

- தொடர்ந்து கண்காணிக்கவும்: ஆரம்பத்திலேயே பூச்சிகளைக் கண்டறிவது மிகவும் எளிதான மற்றும் பயனுள்ளதாக இருக்கும்.
- உயிரியல் முறைகளுக்கு முன்னுரிமை: இயற்கை எதிரிகள், நீம் எண்ணெய், சோப்புக் கரைசல் ஆகியவற்றை முதலில் முயற்சிக்கவும். இவை சுற்றுச்சூழலுக்கு குறைந்த தீங்கு விளைவிப்பவை.
- வேதிப்பூச்சிக்கொல்லிகளைக் கவனமாகப் பயன்படுத்தவும்: அவை தேவைப்பட்டால் மட்டுமே, சரியான முறையில், பரிந்துரைக்கப்பட்ட அளவில் பயன்படுத்தவும்.
- உள்ளூர் ஆலோசனை: உள்ளூர் வேளாண்மை விரிவாக்க அலுவலர் அல்லது தோட்டக்கலை நிபுணரின் ஆலோசனையைப் பெறவும். அவர்கள் உங்கள் பகுதியில் உள்ள குறிப்பிட்ட சிக்கல்கள் மற்றும் பூச்சிக்கொல்லி பதிவுகள் குறித்து துல்லியமான வழிகாட்டுதலை வழங்க முடியும்.

வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்துவது ஒரு தொடர்ச்சியான செயல்முறை ஆகும். ஒற்றைத் தீர்வு இல்லை. ஆரோக்கியமான மரங்களைப் பராமரித்தல், வழக்கமான கண்காணிப்பு, பொருத்தமான முறைகளின் சீரான பயன்பாடு ஆகியவற்றின் மூலம் உங்கள் தென்னை மரங்களை வெள்ளை ஈக்களின் பேரழிவுகளிலிருந்து வெற்றிகரமாகப் பாதுகாக்க முடியும். இயற்கை முறைகளுக்கு முன்னுரிமை அளிப்பது நீண்ட காலத்திற்கு நிலையான பாதுகாப்பை வழங்கும்.





# வேதாளமும் முருங்கையும்

**நாவல்**

*தொடர்*

**-2-**

*அசன்*

ஆறரை மணிக்குக் கோட்டை புகையிரத நிலையத்திற்கு யாழ் மெயில் வரும்போது முதலாவது பிளாட்போம் ஒரு போருக்குத் தயாரான நிலையில் இருந்தது. யாழ் பெரும்குடிமக்கள் கோனர்சீற்றைக் கைப்பற்றக் களத்திலே காத்திருந்தனர். இளம் கன்னிகைகளுக்குக் கோனர்சீட் பிடித்துக் கொடுப்பதே இலட்சியமாகக் கொண்ட பயிற்சி பெற்ற வாலிபர்கள் சிலர் இந்தப் பிளாட்போமே தங்கள் ஆட்சிக்கு உட்பட்டதுபோல் பாவனை செய்தனர். வெறும் கைக்குட்டையை வைத்தே பல கோனர்சீட்டுகளைக் கைப்பற்றி வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என நிருபித்த புத்திசாலிகளையும் வரலாறு கண்டுள்ளது.

விக்ரமாதித்தன் கொழும்புக்கு புறப்பட முன்னரே நண்பர்கள் கோனர்சீட்டின் முக்கியத்துவத்தையும் அதைக் கைப்பற்றும் வழிவகைகளையும் விலா வாரியாக விளக்கியிருந்தார்கள். அனுபவப்பட்ட கொழும்பு உத்தியோகத்தர்கள் புகையிரதத்தின் கதவுகள் வரும் இடத்தைச் சரியாகக் கணித்து அந்த இடங்களை ஆக்கிரமித்து இருப்பார்கள். அவர்களை அடையாளம் கண்டு அவர்கள் அருகில் நிற்க வேண்டுமென்பதே நண்பர்களின் வழிகாட்டியில் உள்ள முதல் ஆலோசனை. அதனைச் சரியாகக் கடைப்பிடித்து வெகு லாவகமாக விக்ரமாதித்தன் தன் முதல் பயணத்திலேயே கோனார்சீட்டைக் கைப்பற்றிச் சாதனை படைத்தான்.

முன்னால் உள்ள இருக்கைகளில் நான்கைந்து இளம் பெண்களுக்காக ஒரு இளைஞர் பட்டாளம் இடம் பிடித்துக் குடுப்பதும் பெட்டிகளைத் தூக்கி மேல்தட்டில் வைப்பதுமாக அமளிப் படுத்தினர். அவர்கள் பல்கலைக் கழக மாணவர்கள் போல் தெரிந்தார்கள். அமளி முடிய இளைஞர்கள் கீழே இறங்கியன்னலூடாகப் பெண்களின் நன்றிகளை வெற்றிக்களிப்போடு ஏற்றுக்கொண்டனர். திடீரென ஒரு பெண் தனது பெட்டியைக் காணவில்லை எனக் கூச்சலிட்டாள். மீண்டும் இளைஞர் பட்டாளம் உள்ளே ஏறி சல்லடை போட்டுத் தேடியது. கிடைக்கவே இல்லை. இவர்களுடைய சிந்தை பொருட்களில் இல்லை.

யாருக்கு யார் உதவுவது என்பதிலேயே குவிந்துள்ளதை வியாபார நுணுக்கம் தெரிந்த திருடன் நன்கு அவதானித்துத் தன் தொழிலைக் கச்சிதமாகச் செய்துவிட்டான். அழுதுகொண்டு அந்தப் பெண் இறங்கினாள். புறமுதுகில் வேல் பாய்ந்த போர்வீரர் போல் இளைஞர்கள் தலை கவிழ்ந்தனர். மற்ற பெண்களை உசாராக இருக்கும்படி எச்சரித்துவிட்டுப் பாதிக்கப்பட்ட பெண்ணைப் புடை சூழ ரயில்வே பொலிசிற்கு அழைத்துச் சென்றனர்.

விக்கிரமாதித்தனுக்குப் பயம் தொத்திக் கொண்டது. நித்திரை கொள்ளாமல் இறங்குப் பெட்டியைப் பாதுகாப்பாகக் கொண்டு சேர்க்க வேண்டுமெனத் திட சங்கர்ப்பம் பூண்டான். பெட்டியிலே பெறுமதியான ஒன்றும் இல்லாவிட்டாலும் பெட்டி பெறுமதியானது. அவன் பிறக்கமுதலே இருந்த குடும்பச் சொத்து என்பதால் பெட்டி பத்திரம் என்று தாயும் தந்தையும் சொன்னதை நினைவில் நிறுத்தினான். கொழும்புக்கு வரும்போது கொண்டுவந்த கறுத்த கொழும்பான் மாம்பழத்தின் வாசம் பெட்டியை விட்டு இன்னும் அகலவில்லை.

பெட்டி நிலைகொண்ட களநிலை பற்றியும் அதன் பாதுகாப்பு வியூகங்கள் பற்றியும் விக்ரமாதித்தன் சிந்தித்துக்கொண்டிருந்த வேளை திடுமென ஒரு புத்த பிக்கு தோன்றி புன்னகைத்துவிட்டு அருகில் அமர்ந்தார். இதை எங்கோ நின்று அவதானித்த ஒரு குடிகார சிங்களவன் ஓடி வந்து பிக்குவிற்குத் தோத்திரம் சொல்லி அவரை எழுந்து விக்ரமாதித்தனுடைய கோனர்சீரில் இருக்கும்படி மன்றாடினான். விக்ரமாதித்தன் எழும்ப நினைக்க வேதாளத்துக்கு அடக்கமுடியாக் கோவம் வந்தது. எழும்பாதை என்று விக்கிரமாதித்தனுக்குக் கட்டளை இட்டது. நல்ல காலமாகப் புத்த பிக்கு குடிகார சிங்களவனின் இரவல் தானத்தை ஏற்கவில்லை. தேர்தல் காலங்களில் அம்மன் கோயிலடியில் நடக்கும் தமிழ் அரசுக் கட்சியின் கூட்டங்களில் பெற்ற அரசியல் ஞானத்தால் புத்த பிக்குவிக்கு அருகில் அமர்ந்திருப்பது விக்கிரமாதித்தனுக்குப் பெரும் அச்சமூட்டியது. இளம் பிக்குவான அவரோ ஆங்கிலத்தில் தான் ஒரு ஆங்கில ஆசிரியர் என்றும் இப்போது தனது ஊரான ஹம்பஹவிற்குச் செல்வதாகவும் கூறி விக்ரமாதித்தனின் பயணம் பற்றி விசாரித்தார். பயம் தெளிந்த விக்ரமாதித்தனும் தன்னுடைய ஆங்கில அறிவை இயலுமானவரை விஸ்தரித்துப் பதிலளித்தான். தன்னுடன் ஒருவர் ஆங்கிலத்தில் கதைப்பதை

நினைத்தபோது பெருமை உச்சம்தலைகேறியது. ஆனால் வேதாளம் இதை ரசிக்கவேயில்லை.

ஹம்பஹா வருமட்டும் புத்த பிக்குவிடமிருந்து ஆங்கிலம் கற்பதில் நேரம் போனது. பொல்காவெலயை அடைந்ததும் ரயில் பெட்டி சாப்பாட்டுக் கடையானது. பக்கத்தில் அமர்ந்தவர் வீரகேசரியால் சுற்றிவைத்த வாழையிலை பொதியை திறந்தார். தேங்காய்ப் புட்டும் முட்டைப் பொரியலும் விக்ரமாதித்தனின் பசியைக் கிளறியது. நீங்கள் சாப்பிடவில்லையோ எண்டு விக்கிரமாதித்தனைக் கேட்டார். ஓமோம் என்று எழுந்து ரயில்வே ரெஸ்டாரண்டை நோக்கி நடந்தான். பாதை முழுக்க யாழ்ப்பாணப் பலகாரங்களின் வாசம் மூக்கை நிறைத்தது. மாமி இடியப்பம் அவித்துத் தாரன் எண்டு சொல்லியும் வேதாளத்தின் கதையைக் கேட்டு வேண்டாம் எண்டது எவ்வளவு தவறென்பதை ரெஸ்டாரண்டை பார்த்ததும் உணர்ந்தான். ஒரு தமிழ் சாப்பாடும் இல்லை. ஆனால் உணவு பகுதி இளம் வாலிபர்களால் நிரம்பி வழிந்தது. யாழ் மெயிலில் பியர் வாங்கிக் குடிக்கும் போதுதான் யாழ்பாணத்தான் வேலிக் கலாசாரத்திலிருந்து வெளியேற துவங்கிகிறான் என விக்கிரமாதித்தனுக்கு நண்பர்கள் தந்த பயணக் குறிப்புகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது. விக்ரமாதித்தனுக்கும் இந்தச் சுதந்திரத்தை அனுபவிக்கும் உணர்வு இயல்பாக எழுந்தாலும் அந்த ஆசையை வேதாளம் முளையிலேயே கிள்ளி எறிந்தது. இடியப்பம், புட்டு, தோசை என்று எல்லோரும் உண்டு மகிழ பாணும் தேநீரோடும் விக்ரமாதித்தனின் இரவு உணவு நிறைவு பெற்றது. பொல்காவலையில் பேராதெனிய பல்கலைக்கழக மாணவர்களும் ஏற நடை பாதைகளும் நிரம்பின.

உண்ட மயக்கத்தில் சிலர் கண் அயர்ந்தனர். கொழும்பு பல்கலைக்கழகக் காளைகள் எழுந்து பேராதெனிய கன்னியரை இருக்கையில் அமர்த்தி உயரிய தமிழ் பண்பாட்டைக் காத்து பல்கலைக் கழகங்களிடையே நட்புறவை விதைத்தனர். விக்ரமாதித்தனின் கண்கள் இறங்குப்பெட்டியில் நிலை கொண்டிருப்பதை அவதானித்த பக்கத்து பயணி,

"அனுராதபுரம் மட்டும்தான் கள்ளர் பயம். அதுக்குப் பிறகு தமிழர் மட்டும்தான். நிம்மதியாய் படுக்கலாம்" எனத் தைரியம் ஊட்டினார்.

அனுராதபுரத்தில் மிஞ்சி இருந்த சிங்களவர்களும் இறங்க யாழ் மெயில் தமிழர் வசமானது. பக்கத்து பயணி சொன்னது போலவே அனுதாரபுரம் கடந்ததும் மடிப்புக்குலையாத உடுப்புகளைக் களைந்து சாரத்துள் புகுந்தார். சாப்பாடு கட்டி வந்த வீரகேசரியைப் படுக்கையாக்கிக் கைப்பையைத் தலையணை ஆக்கி இருக்கைக்குக் கீழே போய் உறக்கத்தில் ஆழ்ந்தார். அவருடைய இடத்தைப் பேராதெனிய கன்னிக்கு இடதானம் செய்த கொழும்பு மாணவன் கைப்பற்றிக்கொண்டான்.

இரயில் தன் இயல்பான லயத்தில் தாலாட்டுப் பாடி பயணிகளை உறக்கத்தில் ஆழ்த்தியது. விக்ரமாதித்தன் நித்திரை கொள்வதில்லை என்ற தன் தீர்மானத்திலிருந்து சிறிதும் பின்வாங்கவில்லை. பேராதெனிய மாணவி தூங்கித் தூங்கி விழுந்து எழும்பினாள். ஒவ்வொரு முறையும் தவறாமல் கொழும்பு மாணவனின் பக்கமாகவே தற்செயலாக விழுவதுபோல் விழுந்தாள். அவள் விழும்போதெல்லாம் தான் ஆழ்ந்த தூக்கத்தில் இருப்பதாகக் கொழும்பு மாணவன் மிகச் சிரமத்தோடு நிரூபித்துக்கொண்டான். இந்த நாடகத்தைக் கொஞ்ச நேரம் அவதானித்த விக்ரமாதித்தன் தான் விழித்திருப்பதுதான் பிரச்சினையோ என ஐயுற்று சிறிது நேரம் கண் மூடினான். மூடிய கண்ணுக்குள்ளும் இறங்குப்பெட்டி முழிப்பாய்த் தெரிந்தது. மீண்டும் கண்ணைத் திறந்து பார்த்தால் கன்னி இப்போது காளையின் தோளில் நிரந்தரமாகப் படர்ந்துவிட்டாள். வேறு இருக்கைகள் தூரத்தே கிடைத்தும் கொழும்பு மாணவன் இதுவரை நின்றுகொண்டே தவம் செய்ததன் நோக்கம் விக்ரமாத்திதனுக்கு இப்போதுதான் வெளிச்சமானது. இவர்கள் ஏற்கனவே திட்டமிட்டு வந்தவர்களோ அல்லது திடீரெனத் தோன்றிய உறவோ என விக்கிரமாதித்தனுக்கு விளக்கமில்லை.

இவர்கள் இருவரினதும் அடுத்த நடவடிக்கை என்ன என்பதை அறிவதில் விக்கிரமாதித்தனுக்கு ஆர்வம் துளிர்த்தது. அந்த ஆர்வத்தை வளர்த்தால் நித்திரையிலிருந்தும் தப்பிக்கொள்ளலாம். ஒரு கல்லில் இரு மாங்காய். ஆனால் விக்ரமாதித்தனின் இந்த எண்ணத்தை யூகித்தறிந்த வேதாளம் அவன் சிந்தனையைத் தணிக்கை செய்தது.

"விக்ரமாதித்தா. உனக்கு நித்திரை வராமல் இருக்க நான் ஒரு கதை சொல்கிறேன். அதைக் கவனமாகக் கேள். கதை முடிவிலே உன்னை நான் ஒரு கேள்வி கேட்பேன். அதற்கு நீ சரியான பதில் சொல்லா விட்டால் நான் உன்னை விட்டு போய் முற்றத்து முருங்கை மரத்தில் தொத்திக் கொள்வேன்" என்றது வேதாளம்.

'நீ கதை சொல்வதில் எனக்குப் பிரச்சினை இல்லை. ஆனால் கேள்வி பதில் எதற்கு? பள்ளிக்கூடம் விட்ட பிறகும் பாடம் எதுக்கு?'

'கேள்வி இல்லாவிட்டால் உன் சிந்தனை வேறு எங்கோ அலையும். அதைப்பிடித்துக் கட்டத்தான் கேள்வி"

தன்னை வேதாளம் தரக் குறைவாய் நினைக்கக் கூடாது என்பதற்காக எல்லாவற்றுக்கும் ஒத்துக்கொண்டான் விக்ரமாதித்தன். வேதாளம் கதை சொல்லத் துவங்கியது. இதுவே வேதாளம் விக்கிரமாதித்தனுக்குச் சொன்ன முதல் கதை.

தொடரும்

**தென்புலத்தார் தொழுதேற்றல்**

# பாரதியாரின் புதுமைப்பெண்:
## விடுதலை, சமத்துவம் மற்றும் சக்தியின் குரல்

முன்னுரை:

"பெண் என்பவள் வீட்டுக்குள் அடங்கி வாழ வேண்டியவள்" என்ற மடமைக் கருத்தை வேருடன் பிடுங்கி எறிந்தவர் மகாகவி பாரதியார். அவரது கவிதைகள் பெண்களுக்கு எழுச்சிப் பாடல்களாக அமைந்தன. "புதுமைப் பெண்", "பெண்மை", "பெண்கள் விடுதலைக் கும்மி" போன்ற பாடல்கள் வழியாக அவர் பேசும் கருத்துகள் இன்றும் பொருத்தமானவையாகவும், சக்திவாய்ந்தவையாகவும் உள்ளன.

1. புதுமைப்பெண்: ஒரு புரட்சிகர சித்திரம்

"புதுமைப் பெண்" பாடல் முழுவதும் ஒரு புதிய பெண்மைக் கோட்பாட்டின் அறிவிப்பாகும்.

சுதந்திரத்தின் தூதுவர்: பாரதியாரின் புதுமைப்பெண் "சுதந்திர பேரிகை" கொண்டு வரும் தூதுவர். அவள் வந்தது "சாதி செய்த தவப்பயன்" என்று கவிஞர் மகிழ்ச்சியோடு வரவேற்கிறார்.

அறிவின் வெளிப்பாடு: அவள் பேசும் "நவீனங்கள்" (புதுமைகள்) அறிவார்ந்தவை. ஆண்கள் பெண்களை அடிமைப்படுத்த முயல்வது "பித்தத்தனம்" என்று கூறும் அளவிற்கு துணிந்தவள்.

சமத்துவத்தின் அடித்தளம்: "ஆணும் பெண்ணும் நிகர்" என்பது அவளின் அடிப்படைக் கொள்கை. இந்த நிகர்தன்மைதான் உலகை வளப்படுத்தும் என்று அவள் நம்புகிறாள்.

பழமையின் மீதான தாக்குதல்: அவள் வீட்டுக்குள் ஒதுங்கி வளர்வதை "வீட்டிலோர் பொந்தில் வளர்வது" என்று கடுமையாகக் கிண்டல் செய்கிறாள். பல நாடுகளுக்குச் சென்று கல்வி கற்று, புதுமைகளைக் கொண்டுவர வேண்டும் என்று ஊக்குவிக்கிறாள்.

செயல்பாட்டுக்கு அழைப்பு: "சாத்திரங்கள் பலபல கற்பராம்", "மூடக் கட்டுக்கள் யாவுந் தகர்ப்பராம்" என்ற வரிகள், புதுமைப்பெண் பழைய சங்கிலிகளை உடைத்தெறியத் தயாராக இருப்பதைக் காட்டுகின்றன.

முடிவு: பாரதியாரின் புதுமைப்பெண் என்பது ஒரு கற்பனைப் பாத்திரம் மட்டுமல்ல; அவர் கண்ட கனவின் உருவகம். அறிவாளியாக, துணிச்சலானவளாக, சுதந்திரமானவளாக, சமூக மாற்றத்தின் இயக்கமாக விளங்கும் ஒரு புதிய தலைமுறைப் பெண்ணின் முன்மாதிரி.

2. பெண்மை: ஒரு வாழ்த்துப் பாடல்

"பெண்மை" பாடல் பெண்களின் இயல்புகளை வாழ்த்துவதாக அமைகிறது.

சக்தியின் மூலம்: "பெண்மை வாழ்க!" என்று தொடங்கும் இந்தப் பாடல், பெண்மையை ஒரு கொண்டாட்டமாக, ஒரு சக்தியாகக் காண்கிறது.

சமூகத்தின் அடித்தளம்: "வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா!" என்று கூறி, சமூகத்தின் அடிப்படையே தாய்மையில் உள்ளது என்பதை நினைவூட்டுகிறார்.

இணைந்த வாழ்வு: ஆணும் பெண்ணும் கண்ணிமை போல இணைந்து செயல்பட வேண்டும் என்பதே கருத்து. "கண்ணைக் காக்கும் இரண்டிமை போலவே காதலின்பத்தைக் காத்திடுவோமடா" என்பது இணைந்து வாழ்வதன் அழகையும் அவசியத்தையும் வலியுறுத்தும் வரி.

3. பெண்கள் விடுதலைக் கும்மி: ஒரு வெற்றிப் பாடல்

"கும்மியடி" என்று தொடங்கும் இந்தப் பாடல், பெண்கள் விடுதலைக்காக நடத்திய போராட்டத்தில் வெற்றி பெற்றுவிட்டது போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது.

வெற்றியின் மகிழ்ச்சி: "நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின" என்று பழைய கொடுமைகள் மறைந்துவிட்டன என்றும், "நன்மை கண்டோம்" என்று விடுதலை கிடைத்துவிட்டது என்றும் கூறி மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறது.

பழமையின் மீதான வெற்றி: "ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை" என்று எண்ணியவர்கள், பெண்ணை "வீட்டுக்குள்ளே... பூட்டிவைப்போம்" என்று நினைத்தவர்கள் தலை கவிழ்ந்துவிட்டனர் என்று பாடுகிறார்.

எதிர்காலத்திற்கான பணி: "வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும் வேண்டி வந்தோம்" என்ற வரி, பெண்கள் இனி அனைத்துத் துறைகளிலும் முன்னணியில் இருப்பார்கள் என்பதை செய்கிறது.

4. பெண் விடுதலை: ஒரு போராட்டப் பாடல்

இந்தப் பாடல் நேரடியாக ஒரு "பிரதிக்கினை"

(சத்தியம்/சபதம்) எடுக்கும் பாணியில் அமைந்துள்ளது.

சபதம்: "விடுதலைக்கு மகளிரெல்லோரும் வேட்கை கொண்டனம்; வெல்லுவம்" என்று சுதந்திரத்திற்கான தங்கள் விருப்பத்தையும், வெல்லும் திடமனத்தையும் செய்கிறார்கள்.

வரலாற்று அறிக்கை: "உடையவள் சக்தி ஆண்பெண் ணிரண்டும் ஒரு நிகர் செய்து உரிமை சமைத்தாள்" என்று கூறி, மூலத்தில் ஆணும் பெண்ணும் சமமாக இருந்ததாகவும், "இடையிலேபட்ட கீழ்நிலை" ஒரு வரலாற்று தவறு என்றும் விளக்குகிறார்.

செயல் அழைப்பு: "அறவிழுந்தது பண்டை வழக்கம்; ஆணுக்குப்பெண் விலங்கெனும் அஃதே" என்று பழங்கால பழக்கத்தை நிராகரித்து, "கடமை செய்வீர்... துணிவுற்றே" என்று அனைவரையும் செயற்பட அழைக்கிறார்.

மொத்த முடிவு:

பாரதியாரின் இந்தப் பாடல்கள் ஒரு சமூகப் புரட்சியின் விஞ்ஞாபனம் *manifesto* (கோட்பாட்டுச் சாற்று) போன்றவை. அவர் பெண்களைப் பற்றிக் கனவு கண்டது ஒரு சமத்துவ, அறிவார்ந்த, சுதந்திரமான சமூகத்தை நிர்மாணிப்பதற்காகும். "புதுமைப்பெண்" என்பது அவரது கனவின் *personification* (உருவகப்படுத்துதல்) ஆகும். இந்தக் கவிதைகள் நமக்கு வழங்கும் செய்தி தெளிவானது: ஒரு நாட்டின் முன்னேற்றம், அங்குள்ள பெண்களின் முன்னேற்றத்தைச் சார்ந்தது; பெண்ணடிமைத்தனம் என்பது சமூகத்தின் முழுமையான வளர்ச்சிக்கு ஒரு தடையாகும்.

---

# உணவும் நலமும்

*அழ. பகீரதன்*

இருவேளை உண்ணல் நலமோம்பப் போதும்
முதுமையில் ஏற்கப் பழகு. *01*

உமிழ்நீர் கலந்து உணவது உட்கொள்ளச்
சத்தாய்த் தருமே வயிறு. *02*

மாமிச உண்ணியென நாளுமே கொள்ளாது
தாளித்த காய்கறி உண்ணு. *03*

பழையது காலையில் உண்ணப் பழக
விளைவது நோயிலா வாழ்வு. *04*

அறுசுவை சேர்ப்பு இளமையில் சீரே
இருசுவை மூப்பில் குறை. *05*

பசிக்கே உணவு நயந்து ருசிக்க
உசிதம் இலவுடற் தெம்பு. *06*

காலம் கருதியே ஞாலத்து நீரினை
வேண்டும் அளவு பருகு. *07*

நாக்கின் உருசியில் நாட்டம் இருப்பின்
விரைந்து வருவது சா. *08*

தயாரித்த உண்டி தவிர்த்தே பசுமை
மிகுந்தன உண்ணில் நலம். *09*

கொழுப்பு மிகுந்தன நீக்கிடில் யார்க்கும்
பழுதிலாத் தன்மை உடம்பு. *10*



குன்றக்குடி அடிகளார்

*நூற்றாண்டு*

# காவியுடை தரித்த சிவப்புச் சிந்தனையாளர்

*அநாதரட்சகன்*



காவியுடை தரித்த சிவப்புச் சிந்தனையாளர் தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் நூற்றாண்டு நிறைவு நாள் 12.07.2025 ஆகும்.

அரங்கநாதன் எனும் இயற்பெயரைக் கொண்ட அடிகளார், மயிலாடுதுறை மாவட்டத்தில் நடுத்திட்டு என்கிற கிராமத்தில் 11.07.1925 இல் பிறந்தார். குன்றக்குடி திருமடத்தின் தலைவராக விளங்கிய அடிகளார், தனது பேச்சாலும், எழுத்தாலும் மக்கள் பணியை இறைபணியாக ஏற்று தன் வாழ்நாள் முழுவதும் மானிட நேயராக இயங்கியவர். மானிட வாழ்வை நேசித்தவராகவும், பற்றுக்களை அறுத்துக் கொண்ட ஒரு சமூகப் போராளியாகவும் வாழ்ந்தவர் அடிகளார்.

குன்றக்குடி அடிகளார் ஆடம்பரம், வெற்றுச் சம்பிரதாயங்களைத் தவிர்த்து இறுதிவரை சமத்துவ சிந்தனையாளராக வாழ்ந்த உண்மையான துறவியாவார். ஒரு மனிதருடைய செயறபாடுகளே அவரை விளங்க வைக்கும் என்பது உண்மையானால், இது குன்றக்குடி அடிகளாருக்குப் பொருந்தும். ஏனெனில் அவர் ஒரு குறிக்கோளும், நோக்கமும் கொண்ட துறவியாக இருந்தார்.

மார்க்சிசத்தின் மனிதாபிமானம் அடிகளாரை ஈர்த்ததில் வியப்பில்லை. அது மார்க்சிசத்தின் இதயம் என்பதையும் மனிதகுலத்தின் மகிழ்ச்சிக்காகப் போராடுகின்ற மக்களின் உலகக்கண்ணோட்டம் என்பதையும் அடிகளார் உணர்ந்திருந்தார். அதனால் காவியுடை தரித்த சிவப்புச் சிந்தனையாளரானார்.

இலக்கியத்திலும் எழுத்திலும் அவரிடம் ஏற்பட்டிருந்த தீவிர ஈடுபாடு பல நூல்களை எழுத வைத்தது. 'அருண்நெறி முழக்கம்' , 'ஆலயங்கள் சமுதாய மையங்கள்' , 'குறட்செல்வம்' , 'கம்பன் கண்ட ஆட்சியில் அரசியல் சமூகம்' , 'எங்கே போகிறோம்' போன்றவை குறிப்பிடத்தக்கவை. அத்துடன் அருளோசை, மணிமொழி, அறிக அறிவியல், தமிழகம் ஆகிய இதழ்களையும் வெளியிட்டு சாதனை படைத்தார்.

தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் புலமைபெற்ற குன்றக்குடி அடிளார் சிறந்த பேச்சாற்றல் மிகுந்தவர்.

பேரறிஞர் ரா. பி. சேதுப்பிள்ளை யுடனான உறவினால், திருக் குறள் மீது ஈடுபாடு கொண்டு திருக்குறள் நெறியினை தமிழகத்தில் பட்டி தொட்டியெங்கும் பரப்பினார். குன்றக்குடி அடிகளார், சுவாமி விபுலானந்தரால் தீண்டாமை விலக்குணர்வு பெற்றார் என்பதும் முக்கியமானது.

குன்றக்குடி அடிகளாரின் சமுதாயப் பணிகள் அளப்பரியன. சகலவிதமான ஆதிக்கங்களுக்கும் எதிராக குரல் கொடுத்தவர் அடிகளார். சாதி ஆதிக்கம், சமய ஆதிக்கம், மொழி ஆதிக்கம், ஆணாதிக்கம் என எல்லாவற்றையும் எதிர்த்து நின்றவர்.

1982ல் குமரி மாவட்டத்தில் பரவிய மதக் கலவரத் தின்போது, சர்வ மதத் தலைவர்களையும் கூட்டி, ஊர் ஊராக நடந்து சென்று மக்களின் அச்சம் போக்கி, வேகம் தணித்து சமாதானத்தை நிலைநாட்டினார்.

அடிகளாரின் சிறந்த பண்பு தான் செய்கின்ற ஒவ்வொரு செயலும் சமூகத்துக்கு நன்மை பயக்க வேண்டும் என்கிற எண்ணம் ஆகும். சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமந்ததை உழைப்பாளர் தினமாகக் கொண்டாடி மகிழ்ந்தவர். இதனைத் தனது 27வது வயதில் செய்து காட்டியவர். இத்தினத்தில் கோவில்களில் பிட்டினை பிரசாதமாக உழைப்பாளர்களுக்கு வழங்கிய ஆன்மீக வாதியாகத் திகழ்ந்தவர்.

ஒரு முறை தனது மடத்து வயல்களில் வேலை செய்யும் கூலி விவசாயிகளை வரவேற்று கௌரவித்து விருந்துபசாரமும் வழங்கினார். சம்பவம் இதுதான்.

சிவகங்கை மன்னர் பரிவாரங்களோடு மதியம் ஒருநாள் மடத்துக்கு வருகை தருகிறார். மன்னரை வரவேற்க சிறப்பான ஏற்பாடுகளைச் செய்யுங்கள் என மடத்திலிருந்தவர்களிடம் கூறினார். அவர்களும் சிறந்த வரவேற்பை வழங்க தடல்புடலாகினர்.மதியம் வந்ததும் மடத்துக்கு வந்தவர்களோ வயல்களில் வேலை செய்யும் விவசாயக் கூலிகள், மன்னருக்குரிய வரவேற்பும், விருந்தும் அவர்களுக்கே, ஏன் சாமி எங்களை ஏமாற்றினீர்கள் எனக் கேட்டபோது, உண்மையைச் சொன்னால் இத்தனை சிறப்பாக வரவேற்றிருப்பீர்களா..? எனக் கேட்டு, இவர்கள்தான்

நம் நாட்டின் உண்மையான மன்னர்கள் எனக் கூறினார். இப்படியொரு சம்பவம் வேறு எந்த மடத்திலும், எக்காலத்திலும் நடந்தேறியதில்லை.

பொதுவுடமைக் கொள்கைகளில் பற்றுக்கொண்ட குன்றக்குடி அடிகளால் 1973ல் சோவியத் யூனியனுக்கு பயணம் மேற்கொண்டிருந்தார். திரும்பி வந்ததும், 'குன்றக்குடி கிராமத் திட்டம்" என்ற திட்டத்தை உருவாக்கினார். அக் கிராமத்தினை தற்சார்புக் கிராமமாகக் கட்டியெழுப்ப முயன்றார். இத்திட்டத்தினை அன்றைய பிரதமர் இந்திராகாந்தியே பாராட்டினார் என அறியமுடிகிறது.

அத்துடன், எல்லாச் சாதியினரும் அர்ச்சகராகலாம் எனக் கூறியதோடு நில்லாமல் கோவில்களில் தமிழில் அர்ச்சனை என்ற புரட்சியையும் முன்னெடுத்தார்.

குன்றக்குடி அடிகளாரது மேன்மைத்துவம் என்பது விஞ்ஞானமும், மெய்ஞானமும் ஆன்மீகமும் நாத்திகமும் எதிரெதிர் நிலைளில் வீறுடன் செயற்பட்ட காலத்தில் வாழ்ந்து பணியாற்றியதுதான்.

இத்தகு மேன்மைகளைக் கொண்ட குன்றக்குடி அடிகளாரிடமிருந்த மானிட நேசிப்பே அவரை உலக சமாதான இயக்கத்தில் இணைந்து செயற்படவைத்தது.

---

# சீரகத்தின் பயன்கள்

சீரகம் பல மருத்துவ குணங்களைக் கொண்ட ஒரு மூலிகையாகும். இது செரிமானத்தை மேம்படுத்தவும், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும், உடல் எடையைக் குறைக்கவும், இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தவும் உதவும். மேலும், இது அசிடிட்டி மற்றும் நெஞ்செரிச்சல் போன்ற பிரச்சினைகளைத் தடுக்கிறது.



***சீரகத்தின் முக்கிய பயன்கள்:***

- செரிமானத்திற்கு நல்லது:

சீரகம் செரிமான அமைப்பை சீராக இயங்கச் செய்து, அஜீரணம், வயிற்றுப் போக்கு போன்ற பிரச்சினைகளைத் தடுக்கிறது.

- நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்:

சீரகத்தில் உள்ள ஆன்டிஆக்சிடன்ட்கள் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவுகின்றன.

- எடை இழப்புக்கு உதவும்:

சீரக நீர் உடல் எடையைக் குறைக்க உதவும் என்று கூறப்படுகிறது, ஏனெனில் இது வளர்சிதை மாற்றத்தை அதிகரிக்கிறது.

- இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும்:

சீரகத்தை திராட்சை ஜூஸுடன் கலந்து குடித்து வந்தால், இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தலாம், என்று தினமலர் கூறுகிறது.

- அசிடிட்டி மற்றும் நெஞ்செரிச்சலைப் போக்கும்:

சீரகத்தில் உள்ள alkaline properties வயிற்றுப் பகுதியில் உள்ள அமிலத்தை சமன் செய்து அசிடிட்டி மற்றும் நெஞ்செரிச்சல் போன்ற பிரச்சினைகளைத் தடுக்கிறது.

- தூக்கமின்மைக்கு உதவும்:

படுக்கைக்குச் செல்வதற்கு முன் சீரகத் தண்ணீரை குடித்தால், ஆழ்ந்த தூக்கம் வரும், என்று ஹெர் ஜிந்தகி கூறுகிறது.

- சிறுநீர் எரிச்சலைப் போக்கும்:

சீரகத்தை ஏலக்காய் சேர்த்து பாலில் காய்ச்சி குடித்தால் சிறுநீர் எரிச்சல் குணமாகும், என்று தினமணி கூறுகிறது.

***சீரகத்தை பயன்படுத்தும் முறை:***

- சீரகத்தை பொடி செய்து உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.
- சீரகத்தை தண்ணீரில் கொதிக்க வைத்து சீரகத் தண்ணீராக குடிக்கலாம்.
- சீரகத்தை பாலில் கலந்து குடிக்கலாம்.
- சீரகத்தை வறுத்து பொடி செய்து சுக்கு, மிளகு, சித்தரத்தை ஆகியவற்றுடன் சேர்த்து சாப்பிடலாம், என்று கால்கி ஆன்லைன் கூறுகிறது.

சீரகம் ஒரு எளிய, ஆனால் பயனுள்ள மூலிகை யாகும். இதன் மூலம் பல உடல்நலப் பிரச்சினைகளைத் தடுக்கலாம் அல்லது குணப்படுத்தலாம்.

சிறுகதை

# அம்மா...

எஸ். சிவஞானராஜா



நீ எனக்கு மகளாகப் பிறந்ததில் இருந்து நான் பெற்ற சந்தோஷம் கொஞ்ச நெஞ்சம் அல்ல. அவ்வளவு செல்வமும் வந்து என்னைக் கட்டியணைத்தது. எல்லோருக்கும் உதவி செய்தேன். அள்ளி அள்ளி கொடுத்தேன். கொடுக்கக் கொடுக்க என்னைத் தெய்வ மகளென்று கூப்பிட்டு என்னை வாயார வாழ்த்தி'மாதவி' என்றனர். 'கண்ணகி' என்றனர். 'லக்ஷ்மி'என்றனர். என்னை கண்படாதவாறு எனது அம்மாவும் வீட்டுக்கு வெளியே போக விடமாட்டார். அப்படி கொள்ளை அழகு. அப்படி சிவப்பு. என் தலையில் இருந்து கால் வரையும் மினுமினுப்பாக அங்கமெல்லாம் தேன் என வடிவெல்லாம் கொட்டி வழிந்திருப்பதைப் பார்த்தால் நீயே வளர்ந்து அதிசப்படுவாய் மகளே! நீ சீக்கிரம் வளர்ந்து பெரிய பிள்ளையாகும் போது என் அழகைக்கண்டு நீ மயங்கி என்னைக் கொஞ்சி ஆசை தீர கட்டியணைப்பாய் மகளே என்று மாதவி சொல்லும் போதே மகள் சீதாவுக்கு விளங்கியதோ இல்லையோ ஆசை தீரக் கொஞ்சினாள்.

"அம்மா ஏன் அம்மா அப்பா உன்னைப் பார்க்கவே வரவில்லை. கோபமா இல்லை கொடுமைப்படுத்தினாரா?"

"இல்லைப் பாப்பா, எல்லா அப்பாமாரும் தங்கள் தங்கள் வேலை முடித்த பின்னர் அவர் அவர் வேலைகளுக்கு் போய்விடுவார்கள் பாப்பா. உன்னைப் பார்க்கவே வரவில்லையே. உனக்கிருக்கிற ஆசை போல எனக்கும் இருக்கும் மகளே" என்றாள் மாதவி.

"சீக்கிரம் அப்பா வந்து உன்னைப் பார்ப்பார். கவலைப்படாமல் போய் விளையாடு பாப்பா"என்று சீதாவைக் கொஞ்சி அனுப்பினாள் மாதவி.

"அம்மா! தூரப்போய் விளையாடவா" என்றாள் சீதா.

"இல்லை இல்லை. அம்மாவுக்குக் கிட்ட நின்று விளையாடு" என்று அம்மா சொன்னதும் சீதா அழுதாள்.

"சரி சரி. தூரப்போய் விளையாடு. அக்கம் பக்கம் பார்த்து கவனமாக விளையாடு, யாரேனும் உன்னைக் கண் வைத்தால் பிடித்துக் கொண்டு போய் படாத பாடு எல்லாம் படுத்துவாங்கள். காயப்படுத்துவாங்கள். பிறகு காணாமலே ஆக்கிப்போடுவின. பிறகு உனது அம்மா எப்படியெல்லாம் அழுது புரண்டு சாப்பிடாமல் இருந்து செத்துப் போனால் நீ என்ன செய்வாய். தனித்து நீயும் கஸ்டப்படாமல் இருக்கத் தான் அம்மா உனக்கு கவனமாக சொல்லுகின்றா?" என்று சொல்ல சீதாவும் தலையாட்டினாள்.

நேரம் கழிந்தது.

ஐயோ! கனநேரமாப் போச்சுது. சீதாவைக் காணவில்லை. "சீதா சீதா" என்று மாதவி அலறிய சத்தம் அந்தக் கிராமத்தையே நடுங்க வைத்தது. மாதவி அலறிய படி நாலா பக்கமும் ஓடி களைத்துப் போய் வீதிக்கே வந்துவிட்டாள். எனக்கு நன்றாகத் தெரியும். வடிவான பிள்ளைகளைச் சமூகம் திண்டு பசியாறியே தீரும். தெய்வங்களும் கல்லாகவே போய் கனநாளாய்ப் போய்விட்டபடியால் கோயிலில் போயும் சொல்ல முடியாமல் தவித்தாள் மாதவி.

"ஐயோ என்ர பிள்ளையைக் காணவில்லையே! நான் என்ன செய்வேன். சீதா... சீதா... அட நான் ஆபிரிக்காவில் பிறந்திருக்க கூடாதா? இப்பிடிக கொள்ளை அழகையும் கோயில் வரத்தையும் எனக்குத் தந்தது மட்டுமல்ல. என் பிள்ளைக்கும் கொள்ளை அழகைக் கொடுத்து என்னைப் பதை பதைக்கச் எய்துவிட்டாயே! என்ரை செல்லம் என்ற பதக்கம் என்ற குஞ்சு ஐயோ நான் என்ன செய்ய அழகைக் கண்டு களிக்கவும். அள்ளிக் கொட்டிச் சிந்தி பசியாறவும். அது

தெரியாமல் கொல்லாமல் ருசி பார்க்கவும் அடே அப்பா ஏராளம் பேர் தவம் இருக்கின்றார்கள். என்ன நடந்ததோ ஏது நடந்ததோ நான் அறியேன்– என்று மாதவி துடித்தாள்.

"சீதா எங்கே அம்மா நிக்கிறாய் சொல்லம்மா." மூலை முடுக்கு, குச்சு ஒழுங்கை, கிணறு கிணறாய், வீடு வீடாய், வாசல வாசலாய், தேம்பித் தேம்பி, மாதவி அழுவதைப் பார்த்து அந்தக் கிராமமே மாதவியோடு கூடவே தாமும் அழுவதாகி கூட சேர்ந்து தேடத் தொடங்கியது. "அம்மா! அம்மா!" என்று அலறும் சத்தம் ஆள் அரவமில்லாத ஒரு பாழ் அடைந்த வீட்டில் இருந்து உரத்துக் கேட்டது. அந்தப் பக்கமாக மாதவி ஓடினாள்.

அதோ! அதோ! சீதாவே தான்!

மாதவியும் அந்தக் கிராம்மும் ஓலை வேலையைப் பிடுங்கித் தள்ளி பாய்ந்து உள்ளே நுழைந்து சீதாவை அழுது கண்ணீர் மல்க வாரி அணைத்து தூக்கி கதை கதையாகக் கேட்டு இதெல்லாம் செய்யக் கூடியது கண்ணன் தான் என்று முடிவு செய்து அவனை ஓரம் கட்ட ஒரு கூட்டம் தலைதெறிக்க ஓடியது. சீதா புழுதியில் அவிழ்ந்து கிடந்தாள். சீதாவை ஒன்றுமே மிச்சம் வைக்காமல் கசக்கிப் பிழிந்து அவளைப் புண்ணாக்கி, காயப்படுத்தி, பேசாமடந்தை ஆக்கிவிட்டனரே. சின்ன வயசு. பிஞ்சு உள்ளம். என்னதான் தெரியும் உலகமே புரியாத இளமை.

ஏன்? எதற்கு? எப்படி? என்றுமே விளங்காத அனுபவம். அழகான மிடுக்கான தோற்றம். எப்படித்தான் சொன்னாலும் விளங்காத மனசு, எத்தனை தரம் கவனம் கவனம் என்று சொன்ன அம்மாவுக்கு நீ தந்த தண்டனை இது.

யாழ்ப்பாணத்தின் கதை இப்படியாகப் போச்சுதே. பிஞ்சுகள், சிறுவர்கள், பெண்கள், ஏன் கிழவிகள் கூட தப்ப முடியவில்லையே. உனக்கே இப்படியென்றால் நான் என்ன செய்யப் போகின்றேன். இந்த உலகம் என்னைப் பார்க்கின்ற பார்வையால் நான் பயந்து கூனி குறுகிப்போய் உள்ளேன். இவ்வாறு மனம் வெதும்பி ததும்பியவளாய், சீதாவை அழ அழ கூட்டிச் சென்றாள் மாதவி. வைத்தியம் வழக்கு எல்லாமே முடிந்து சீதாவை வீட்டிலே வைத்து கண்ணும் கருத்துமாய் எண்ணும் எழுத்துமாய்ப் பொத்தி வளர்க்க முடிவு செய்தாள். மாதவி அப்பாமாருக்கு எந்தக் கவலையும் இல்லை. எங்கெங்கு என்னென்ன தேவையோ அங்கங்கு அவர்கள் தங்கியே விடுவார்கள். ஒருவருடத்திற்கு ஒருக்கால் வந்து கண்ணே மணியே, கற்கண்டே என்று சேர்ந்திருப்பார்கள். பிறகு அவ்வளவு தான் பிள்ளைகளைப் பற்றிக் கவலையும் இல்லை. கண்ணீரும் இல்லை.

எங்கெங்கு சீதாவுக்கு நோதல் எற்பட்டதோ அங்கங்கு ஒத்தடம் கொடுத்து தூங்க வைத்தாள் மாதவி. இப்போ வீட்டில் சீதாவும் அவவின் பாட்டியும் மட்டும் தான். இப்படியாக கண்படாவாறு காலங்கள் ஓடின. கண்களில் துன்பங்கள் நீடித்தன. அப்பாவின் உழைப்பில்லாமல் அம்மாவின் உழைப்பிலேயே குடும்பமும் ஓடிற்று. கோவிலும் வரம் கொடுத்தது. எளிமையாக, வறுமையாக, வாழ்ந்தாலும் அழகு என்பது ஆன்மீக அரசியல். குடும்ப முனிவர்களையே தடுமாற வைத்தே தீரும். இந்நிலையில் ஓர் அமாவாசை நாளன்று சீதாவின் மருந்துக்காக தூரச் செல்லத் துணிந்து வீதியைக் கடந்து குறுக்கு வீதியில் நடந்தாள் மாதவி!

கண்ணை மூடித்திறக்கும் மின்னல் வேகத்தில் வேகமாக வந்த ஒரு வாகனம் சீதாவைக் கடத்தியது. சீதா கதறினாள். குழறினாள். குமுறினாள். களைத்துப் போய் மயங்கினாள். பலாத்காரமாக சிதைக்கப்பட்டாள். வாய்விடாத பாவி ஆக்கப்பட்டாள். கால்கள் கட்டப்பட்டன. கத்திகள் தீட்டும் சத்தம் கேட்டது. கழுத்தை இலாவகமாக இறுக்கிப் பிடித்து அமுக்கிய போது இரத்தம் பீறிட துடிதுடித்து, 'அம்மா அம்மா' என்று அவ்வூரையே அழ வைத்தாள்.

அமாவாசை பிதிர்களுக்கு மட்டுமா? வாய்விடாத சாதிகளான சகல உயிரிழந்த பிராணிகளுக்குமானதோ? அது செம்மணி வரை நீளுமே. முள்ளி வரை நீளட்டும். காசா வரை கனக்கட்டும். வீதிகள் தோறும் விரியட்டுமே. உயிரிழந்த அத்தனை பேருக்குமாக அமாவாசைகள் காணாமலே இனியும் இருக்கவேண்டுமோ? யாவும் கற்பனையோ? எத்தனை மாலதிகள் இங்கு காணாமலே போய்விட்டனர். மனிதன் பசியாறுகின்றான். அவ்வளவுதான்.


## நூலகமும் மழலைகள் மகிழகமும்

மறுமலர்ச்சி மன்ற ஆறுமுகம் கந்தசாமி &செல்லம்மா ஞாபகார்த்த நூலகம், மழலைகள் மகிழகம் (சிறுவர் நூலகம்) தினமும் (திங்கள் விடுமுறை) மாலை 3 மணியிலிருந்து 6 மணிவரை திறந்திருக்கும்.

நூல்களை இரவல் பெற்றும் வாசிக்கமுடியும்.

வாசிப்பை நேசிப்போம் வாருங்கள்.

மறுமலர்ச்சி மன்றம், காலையடி, பண்டத்தரிப்பு

கல்வியியல் நோக்கு

# இலங்கைப் பாடசாலைக் கல்வியில் தொழில்நுட்பக் கல்வியின் பங்கு

*பி. முத்துலிங்கம்*

இலங்கைப் பாடசாலைக் கல்வியில் ஆரம்பக் கல்வி; கணித, விஞ்ஞானக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டே வந்தது. 1943களில் அப்போதைய கல்வி அமைச்சர் திரு C.W.W.கன்னங்கரா அவர்கள் இலவசக் கல்வியைக் கொண்டுவந்து 100இற்கு மேற்பட்ட மத்திய கல்லூரிகளை நாடு பூராக உருவாக்கினார். மத்திய கல்லூரிகள் விவசாயம், மனைப் பொருளியல், மரவேலை, மோட்டார் பொறிமுறை, மின்னியல் பாடங்களுக்கான தரமான ஆய்வு கூடங்களையும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களையும் கொண்டிருந்தன. ஆனால் தரம் 8 வரையுமே அனைத்து மாணவர்களும் தொழில் நுட்பப் பாடங்களைக் கற்கக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. ஏனெனில் அக்காலத்தில் தரம் 9 இலிருந்தே மாணவர்கள் அவர்களது விருப்பம், திறமைக்கு ஏற்ப கலைப்பிரிவு, விஞ்ஞானப் பிரிவு எனப் பிரிக்கப்பட்டார்கள். கலைப்பிரிவு மாணவர்கள் எண்கணிதம் உட்பட கலைப்பாடங்களையும், விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள் தமிழ் மொழி, சமயம், தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதீகம், இரசாயனம், உயிரியல், ஆங்கிலம் ஆகிய பாடங்களையும் கற்றார்கள். இங்கு பாடத் தெரிவுகளைப் பொறுத்தவரை நூல் கல்விக்கே கூடுதலான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

1970களில் பதவிக்கு வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் 'புதிய பாதை' எனும் கல்விச் சீர்திருத்தத்தின் மூலம் பாடசாலைக் கல்விச் சீர்திருத்தத்தின் மூலம் பாடசாலைக் கல்விக் கட்டமைப்பில் பல புரடசிகரமான மாற்றங்களைக் கொண்டுவந்தது. காலனித்துவ காலம்முதல் இருந்து வந்த க.பொ.த (சாதாரணதரம்), க.பொ.த (உயர்தரம்) என்பன பொதுக் கல்விக்கான உயர் தேசிய சான்றிதழ் என மாற்றியமைக்கப்பட்டது. தரம் 6 தொடக்கம் தேசிய சான்றிதழ் பரீட்சை வரை மாணவர்கள் எல்லோரும் தமிழ் மொழி, சமயம், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சமூகக்கல்வி, அழகியல் பாடங்கள், தொழில்நுட்பப் பாடங்கள் என்பவற்றை கட்டாயம் கற்கவேண்டும். இங்கு கல்வியைப் பொருளாதாரம், வேலைவாய்ப்புடன் இணைக்கும் நோக்கில் தொழில்நுட்பப் பாடங்களுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. தரம் 6 தொடக்கம் 8 வரையான கனிஷ்ட இடைநிலை மாணவர்களுக்கு பாடசாலைச் சூழலின் இயற்கை வளங்கள், உற்பத்தி மற்றும் கைவினைச் செயற்பாடுகள் சார்ந்து தொழில் நுட்பப்பாடங்கள் வடிவமைகப்பட்டன. 9,10,11ந் தரங்களில் விவசாயம், மனைப் பொருளியல், கடல் வளம், மின் தொழில் நுட்பவியல் போன்ற பாடங்கள் சேர்க்கப்பட்டன.

1977இல் பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் திறந்த பொருளாதாரக் கொள்கையை அமுலுக்குக் கொண்டுவந்து, 1981இல் கல்வி வெள்ளை அறிக்கையின் மூலம் கல்விச் சீர்திருத்தங்களை மேற்கொண்டது. பழைய மாதிரி க. பொ. த (சாதாரணதரம்), க.பொ.த (உயர்தரம்) என்பவற்றறைக் கொண்டு வந்ததோடு; கனிஷ்ட இடைநிலை வகுப்புக்களில் தொழில்நுணுக்கப் பாடங்களை அறிமுகப்படுத்தியது. தரம்10, 11 களில் அதே தொழில் நுட்பப் பாடங்கள் போதிக்கப்பட்டன. இவ்வரசாங்கம் சுதந்திர வர்த்தக வலயங்களை அமைத்து, பயிற்றபட்ட தொழிலாளர்களை உள்வாங்குவதற்காக பாடசாலைக் கல்வியில் தொழில்நுட்ப, தொழில் நுணுக்கப் பயிற்சியை ஊக்குவித்தது எனலாம்.

1995 இல் கொண்டு வரப்பட்ட பொதுக்கல்வி சீர்திருத்தத்தின் மூலம் கனிஷ்ட, இடைநிலை வகுப்புக்களில் வாழ்க்கைத்திறன்; செயன்முறைத் திறன்களும், தொழில்நுட்பத் திறன்களும் எனும் பாடங்கள் போதிக்கப்பட்டன. இருந்தும் பாடசாலைக் கல்விக் கட்டமைப்பில் தொழில்நுட்பக் கல்வி, செயன்முறைக் கல்வி என்பன போதிய எழுச்சி பெறவில்லை. இதனால் மூன்றாம் நிலைக் கல்வியிலுள்ள தொழில்நுட்ப, தொழில் நுணுக்க நிறுவனங்களை நிரப்புவதில் மாணவர்கள் பின்னிற்கின்றார்கள். நாட்டில் க.பொ.த (உயர்தரம்) கற்க தகைமை அடைபவர்களில் 60%–70% மானோர் கலைப்பிரிவையே தெரிவு செய்கின்றார்கள். இவர்களே நாட்டில் கூடுதலாக வேலையில்லாமல் இருக்கின்றார்கள். இதனைக் குறைக்கும் நோக்கிலேயே க. பொ. த (உயர்தரம்) இல் பொறியியல் தொழில்நுட்பவியல், உயர் முறைமைத் தொழில் நுட்பவியல் போன்ற பிரிவுகள் 2010இல் அறிமுகம் செய்யப்பட்டு பாடசாலைகளில் அவற்றிற்கான தொழில்நுட்பக் கூடங்களும் அமைக்கப்பட்டன. இதனால் குறிக்கப்பட்ட அளவு மாணவர்கள் பல்கலைக் கழகங்களில் உருவாக்கப்பட்ட தொழில்நுட்பவியல் பீடங்களிலும், ஏனைய மூன்றாம் நிலைக் கல்விநிறுவனங்களிலும் அனுமதி பெற்றார்கள்.

எமது நாட்டில் தொழில்நுட்ப, தொழில் நுணுக்க கல்வியைப் பெற இலங்கை திறந்த பல்கலைக்கழகம், தொழில்நுட்பவியல் கல்லூரிகள், உயர்தொழில்

நுட்பவியல் நிறுவனங்கள், இலங்கை–ஜேர்மன் பயிற்சி நிறுவனங்கள், தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழான பயிற்சி மையங்கள் என்பன உள்ளன. பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமை பெறுகின்ற மாணவர்கள் மானிய ஆணைகுழுவின் வழிகாட்டலில் அனுமதிக்கப்படுகின்றார்கள். இவ்வாறே க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்த, சித்தியடையாத ஏறத்தாழ இரண்டு இலட்சம் மாணவர்களில் ஒரு லட்சம் பேரையாவது மேற் குறிப்பிட்ட நிறுவனங்களில் உள்வாங்கக் கூடிய செயல்திட்டத்தை தொழில்நுட்பத்திற்கு பொறுப்பான அமைச்சு நடைமுறைப்படுத்துவதன் மூலமே பாடசாலைக் கட்டமைப்பில் தொழில் நுட்பக் கல்வியின் மடை மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பது திண்ணம் என்று கூறி முடிக்கின்றேன்.

---

# ஆபிரிக்க கண்டத்தின் பிளவு

## (East African Rift System – EARS)

**ஆபிரிக்க கண்டத்தில் உருவாகிக் கொண்டிருக்கும் **புவிப்பொறைத் தட்டுப் பிளவு (*Continental Rift*)** என்பது புவியியலில் மிக முக்கியமான ஒரு நிகழ்வாகும். இது **கிழக்கு ஆபிரிக்கப் பிளவுப் பகுதி (*East African Rift System – EARS*)** என்று அழைக்கப்படுகிறது.

முக்கிய விவரங்கள்:

### 1. என்ன நடக்கிறது?

ஆபிரிக்கப் புவிப்பொறைத் தட்டு (*African Plate*) இரண்டு சிறிய தட்டுகளாகப் பிரியத் தொடங்கியுள்ளது: **நூபியத் தட்டு (*Nubian Plate*)** மற்றும் **சோமாலியத் தட்டு (*Somali Plate*)**. இவற்றுக்கு இடையே ஒரு பிளவு உருவாகி வருகிறது.

### 2. எங்கு நடக்கிறது?

இந்தப் பிளவு கிழக்கு ஆபிரிக்காவில், வடக்கில் ஜிபூட்டி, எத்தியோப்பியா தொடங்கி, கென்யா, தான்சானியா, உகாண்டா, ருவாண்டா, புருண்டி, மலாவி வழியாகத் தெற்கே மொசாம்பிக் வரை நீண்டுள்ளது. இது **கிழக்குப் பிளவுக் கோடு (*Eastern Rift*)** மற்றும் **மேற்குப் பிளவுக் கோடு (*Western Rift*)** என இரு முக்கிய கிளைகளாக உள்ளது.

### 3. எப்படி நடக்கிறது?

- புவியின் உள்ளேயிருந்து மேல்நோக்கி வரும் **கவர்ச்சி விசை (*Convection Currents*)** காரணமாக, புவிப்பொறைத் தட்டு வலுவிழந்து பிளவுபடுகிறது.
- தட்டுகள் விலகும்போது, இடையேயுள்ள பாறைகள் உடைந்து மிகப் பெரிய பள்ளத்தாக்குகள் (*Rift Valleys*) உருவாகின்றன.
- பூமிக்கடியில் இருந்து உருகிய பாறை (மாக்மா) மேலே வந்து எரிமலைகள், வெந்நீரூற்றுகள், பூமிக்குழிகள் (*Grabens*) மற்றும் ஏரிகளை உருவாக்குகிறது (எ.கா: டாங்கன்யீகா ஏரி, விக்டோரியா ஏரி, மலாவி ஏரி).

### 4. விளைவுகள்:

- **நிலநடுக்கங்கள்:** தட்டுகளின் இயக்கம் காரணமாக இப்பகுதி அடிக்கடி நிலநடுக்கங்களைச் சந்திக்கிறது.
- **எரிமலைகள்:** பிளவுப் பகுதியில் புகழ்பெற்ற எரிமலைகள் உள்ளன (எ.கா: கிலிமஞ்சாரோ, மவுண்ட் கென்யா, எத்தியோப்பியாவில் எர்டா அலே).
- **நிலவடிவ மாற்றம்:** பள்ளத்தாக்குகள், மலைத் தொடர்கள், ஏரிகள் உருவாகின்றன.
- **எதிர்காலம்:** இந்தப் பிளவு **மில்லியன் கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு**, ஆப்பிரிக்காவை இரண்டு தனிக் கண்டங்களாகப் பிரித்துவிடக்கூடும். இடையே புதிய கடல் (இந்தியப் பெருங்கடலுடன் இணையக்கூடிய) உருவாகலாம் (எத்தியோப்பியாவில் உள்ள அபால் பகுதி இதற்கு ஆரம்ப உதாரணம்).

### 5. ஏன் முக்கியமானது?

**மனிதத் தோற்றம்:** இந்தப் பிளவுப் பகுதியே (குறிப்பாக ஓல்டுவாய் பள்ளத்தாக்கு) மனிதர்களின் பரிணாம வளர்ச்சியின் முக்கியமான இடமாகக் கருதப்படுகிறது.

**சூழலியல்:** இங்குள்ள ஏரிகள் மற்றும் புல்வெளிகள் தனித்துவமான வனவிலங்குகளுக்கு உறைவிடமாக உள்ளன.

**புவியியல் ஆய்வு:** கண்டங்கள் எவ்வாறு பிளவுபடுகின்றன, புதிய கடல்கள் உருவாகின்றன என்பதைப் புரிந்துகொள்ள இது ஒரு வாழும் ஆய்வகமாகும்.

சுருக்கமாக:

ஆபிரிக்காவின் கிழக்குப் பகுதியில், பூமியின் உட்புற விசைகளால், கண்டம் மெதுவாக இரண்டாகப் பிளவுபட்டுக்கொண்டிருக்கிறது. இது மிகப் பெரிய பள்ளத்தாக்குகள், ஏரிகள், எரிமலைகள் மற்றும் அடிக்கடி நிலநடுக்கங்களை உருவாக்குகிறது. இந்தப் பிளவு பல மில்லியன் ஆண்டுகளுக்குப் பிறகு ஆப்பிரிக்காவை இரண்டு புதிய கண்டங்களாகப் பிரித்துவிடக்கூடும். இது பூமியின் வியத்தகு புவியியல் செயல்பாடுகளில் ஒன்றாகும்.

சிறுகதை

# கணவனை எதிர்பார்த்து இருக்கும் பெண்ணின் வாக்குமூலம்

*சை.கிங்ஸ்லி கோமஸ்*

வாசல் சுவரில் கொண்டு வந்த கொழுந்துக் கூடையை மாட்டிவிட்ட மாரியாய், வெளியில் சுடுதண்ணீர் காய வைப்பதற்காக வைத்திருந்த தண்ணீர் பெரலில் இருந்த தண்ணீரை அள்ளி கை கால்களை கழுவிக் கொண்டு, முகத்தையும் கழுவி வீட்டுக்குள் வந்தார். இடுப்பில் கட்டி இருந்த படங்கை கழட்டி வீட்டு கதவில் மாட்டியவர், உள்ளே வந்து எங்களைப் பார்த்து சிறிய புன்முறுவலுடன் விபூதியை நெற்றியில் பூசி, சிகப்பு நிற குங்குமத்தை பெரிதாக நெற்றியில் வைத்துக் கொண்டார். மஞ்சள் கயிற்றில் கட்டி இருந்த தாலியைத் தொட்டு நெற்றியில் ஒற்றிய அவர் எம்மோடு கதைக்க துவங்கினார். அவரது சகல அசைவுகளையும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த இளம் பெண்களான நாம் அனைவரும் வியப்போடு அவரை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தோம். "தேநீர் தயாரித்து வருகிறேன்" என்று சமையலறைக்குள் போனார்.

"நமது சமூகம் வறுமையில் இருந்தாலும் மிகவும் சுத்தமாக வாழும் ஒரு சமூகம். அதிலும் தேயிலைத் தோட்ட வீடுகள் லயங்களாக இருந்தாலும், வீடும் வீட்டில் காணப்படும் பாத்திரங்களும் சமையலறையும் மிகவும் சுத்தமாக இருப்பதுடன், எமது தாய்மாரும் சுத்தமாகவும் மங்களகரமாகவும் இருக்கின்றார்கள்" என்று எங்களில் ஒருவர் கூறினார்.

மற்றுமொருவர் "இந்த வீடுகளும் குடியிருப்புகளும் இருக்கும் வெளி பிரதேசம் சுத்தமாக இல்லாமைக்கு காரணம், உள்ளூராட்சி மன்றங்கள் ஏனைய கிராமங்களில் குப்பைகளை அகற்றுவதற்காகவும் குப்பை சேகரிக்கவும் செய்யும் முறையான செயற்பாடுகள் தோட்டப்புறங்களுக்கு கிடைக்காமலேயே" என்று கூறினார்.

"உண்மைதான் சில விடயங்களை உற்று அவதானிக்கும் போது, அந்த மக்களோடு மக்களாக இருந்து பார்க்கும்போது வெளியில் இருந்து பார்ப்பவர்கள் தோட்டப்புறங்கள் அசுத்தமாகவும், வீடுகள் அசுத்தமாகவும், குப்பைகள் நிறைந்தும் இருப்பதாக விமர்சிக்கின்றனர். ஆனால் தேர்தல் காலத்தில் இந்த மக்களின் வாக்குகளை பெற வருபவர்கள் இவர்களுக்கான சரியான சேவையை வழங்காமல் இவர்களை விமர்சிப்பது சரியானது அல்ல" என்று நாங்கள் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே மாரியாயி ஒரு கையில் நான்கு தேநீர் குவளைகள் உடனான தட்டையும், மாரி பிஸ்கட் பக்கெட் ஒன்றையும் கொண்டு வந்து தந்தார்.

நாங்கள் மலையகத்தில் இருக்கும் இளம் பெண் புகைப்படப்பிடிப்பாளர் சங்கம். அங்கங்கே வாழும் மலையகத்தின் சிறப்பான கதாபாத்திரங்களைப் புகைப்படம் பிடித்து, சிறிய புகைப்பட ஆவணங்கள் ஆக்கி, கண்காட்சிகளை நடத்துவது எமது பொழுதுபோக்கு. எங்களுக்குச் சில அரச, அரசுசார்பற்ற நிறுவனங்கள் உதவிகள் செய்கின்றன. இந்தக் குழுவில் அதிகமானவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள். நாங்கள் இன்று நான்கு பேர் பொகவன்தலாவின் பெத்தராசி தோட்டத்திற்குத் தோட்டத் தொழிலாளி மாரியாயியைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறோம்.

தானும் ஒரு தேநீர் குவளையுடன் எம்மோடு வந்து அமர்ந்து, சகஜமாக உரையாடத் துவங்கினார். ஏற்கனவே ஒருமுறை நாங்கள் இவரை வந்து சந்தித்திருந்தோம். அவரது மகனும் மகளும் எம்மோடும், எமது வேலைகளுக்காகவும் அதிகமாக உதவி செய்பவர்கள். அவர்களைக் கலை, இலக்கிய செயற்பாடுகளில் ஈடுபட வைப்பதற்காக நாங்கள் பல முயற்சிகளைச் செய்து வருகின்றோம். இன்றும் கூட அவர்கள் வாசிப்பதற்குச் சில நூல்களைக் கொண்டு வந்து கொடுத்தோம். அவர்கள் அவற்றை மிகவும் ஆர்வமாக வாசித்துக் கொண்டிருந்தனர். இதனைக் கவனித்த மாரியாயி, "உங்களைப் பார்த்ததும் எனக்கு என் பிள்ளைகளும் படித்து உங்களைப் போல வந்துவிடுவார்கள் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. தனி ஆளாக இருந்து இவர்களைப் படிக்க வைப்பதும், குடும்பத்தைக் காப்பாற்றுவதும் மிகவும் கடினமான ஒரு விடயம்" என்று கூறினார்.

மாரியாயி மேலும் தொடர்ந்தார்:

"1983 ஆம் ஆண்டு. அப்போது எனக்கு 16 வயது. வீட்டு கஷ்டம் ஸ்கூல் படிச்ச என்னைய பேர் பதிஞ்சு கொழுந்து எடுக்க அனுப்பிட்டாங்க. எங்க அப்பா முத்துக்கருப்பன் நல்ல உழைப்பாளி. அதுக்கேத்த மாதிரி தண்ணி போடுற ஆளு. தண்ணிய போட்டுட்டு ஆடு பாலத்துல வரும் போது பாலத்தில இருந்து உளுந்து இடுப்புக்கு கீழே பலம் இல்லாம போச்சு. அதுல இருந்து எங்க அம்மா முனியம்மா நம்மள வளர்க்கப்பட்ட கஷ்டம்

சொல்ல முடியாது" என்று கூறி, முனியம்மாவினதும் முத்து கருப்பனினதும் படம் ஒன்றை– சிறியது, கருப்பு– வெள்ளை நிறத்தில் இருந்தது– கொண்டு வந்து காட்டினார்.

அவரை அந்தப் படத்தை கையில் வைத்த படி ஒரு படம் எடுத்தோம். கிட்டதட்ட 36 அல்லது 40 வயதைக் கொண்ட மாரியாயி, தோற்றத்தில் 55– 60 வயது மதிக்கத்தக்கவராக காணப்பட்டார். இவர்களின் தோற்ற முதிர்ச்சிக்குக் காரணம், கடின உழைப்பும் உடலுக்கு ஆரோக்கியமான உணவும் இல்லாதது என்றால், ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

மாரியாயி தனது கதையைத் தொடர்ந்தார்:

"எனது அப்பாவை வைத்தியம் பார்ப்பதற்காக பொகவன்தலாவ டவுனுக்கு கூட்டிட்டுப் போவோம். பலாங்கொடையிலிருந்து வரும் சிங்கள வெத மாத்தையா கிட்ட ஒவ்வொரு மாசமும் 11ஆம் தேதி கூட்டிட்டு போவோம். ஏன்னா அம்மாவுக்கு சம்பளம் பத்தாம் தேதி.

இடுப்புக்கு கட்டு போடுவாரு. பிறகு பத்துப் போடறதுக்கும் கட்டு போடறதுக்கும் மருந்து தருவாரு. அந்த மருந்தைக் கொண்டு வந்து பச்ச மஞ்சள், கொட்ட முத்து இலை, விளக்கெண்ணெய் போட்டு இடிச்சி சூடாக்கி கட்டனும். அந்த வேலையை நான்தான் செய்வேன். அப்பா கொஞ்சம் கொஞ்சமா சுகமாகினார். பிறகு அப்பாவை நான் மட்டும்தான் கூட்டிட்டு போவேன்.

அப்பா மருந்து கட்டும்வரை நான் வெளில உட்கார்ந்து இருப்பேன். அந்த வெத மாத்தியா கூலிக்கு இருந்தது ஒரு ஆசாரி கடையில். அந்த ஆசாரி கடையில் ஒரு பகுதியில் வெத மாத்தியாவின் மருந்து கட்டும் எடம். மத்த பக்கம் பட்டறையும் நகை ஈடு பிடிக்கிற இடமும் இருந்துச்சு. நானும் அடிக்கடி நகைகளை ஈடு வைக்க அங்க போவேன். அம்மாவோட தோடு, மூக்குத்தி, பாட்டியோட தோடு, மூக்குத்தி, வளையல்– இதெல்லாம் அங்க தான் ஈடு வெச்சோம்.

அப்பாட மருந்து செலவுக்காக அவ்ளோ நகையும் ஈடு வெச்சோம். அவர் சுகமாக்கினார். ஆனாலும் திருப்பி தண்ணி போட துவங்கி ரொம்ப வருத்தமாகி இறந்து போயிட்டாரு.

அந்தக் கடையில தான் குமுதா அப்பாவை கண்டேன்" என்றார்.

குமுதா மாரியாயின் மகள். பாடசாலையில் இருந்து இடை விலகி பாலர் பாடசாலை ஒன்றில் ஆசிரியையாக வேலை செய்து கொண்டிருந்தாள். எம்மோடு தொடர்பு ஏற்பட்டதன் பின் அவளை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பாலர் பாடசாலை பயிற்சிக்காக சேர்த்துவிட்டு, எமது நிறுவனத்தின் மூலம் படிப்பதற்கு சில உதவிகளையும் செய்யத் துவங்கியுள்ளோம்.

கணவரின் பெயரைக் கூட கூறாமல் குமுதாவின் அப்பா என்று மாரியாயி கூறியதில், அவர் மீது இவர் வைத்திருக்கும் மதிப்பையும் கௌரவத்தையும் மிக ஆழமாகக் காணக்கூடியதாக இருந்தது.

அப்போது எங்களில் ஒருவர் கேட்டார்: "அப்போ மகனின் பெயர் என்ன?"

மாரியாயி சிரித்துக் கொண்டே சொன்னார்:

"குமார்... அவனும் எனது மகன் தான்"

அவனைப் பார்க்க சிறுவனாக இருந்தான். அப்போது குமுதா குறுக்கிட்டுக் கூறினாள்:

"இது நம்ம அம்மாவோட தூரத்து உறவுக்கார பையன். அவனுக்கு அம்மா அப்பா ரெண்டு பேரும் இல்ல. தமிழ்– சிங்கள கலவரத்துல பதுள்ள பக்கம் ஒன் செல்ல அவங்களக் கொன்னுட்டாங்க. இவங்களும் கிளிநொச்சி பக்கமாக இருந்து தான் பதுளைக்கு வந்திருக்காங்க.

அதற்குப் பிறகு இவனை நம்ம பாட்டி தேடிக் கண்டுபிடிச்சு இப்ப நம்ம வீட்ல தான் இருக்கிறான். படிக்கிறான். நல்லா படிக்கிற பையன்" என்றாள்.

எங்களுக்கு எல்லாமே வியப்பாக இருந்தது. ஏழ்மை, வறுமை எல்லாவற்றையும் மீறி இவ்வாறான பண்புகள், தியாகங்கள் பற்றி நினைக்கும்போது– பணக்கார வர்க்கத்திடம் இருக்கும் கஞ்சத்தனமும், நடுத்தர வர்க்கத்தினரிடம் இருக்கும் தமது உழைப்பில் இருந்து ஒரு யாசகனுக்கு உதவாத பண்பும், சொந்த தாய் தகப்பனை ஆதரிக்க மறுப்பவர்களும், பெற்ற பிள்ளைகளை கவனிக்காதவர்களும், தந்தை– தாய்மாரை முதியோர் இல்லங்களில் விடுபவர்களும், பிறந்த குழந்தைகளைக் குப்பைத் தொட்டிகளில் போடுபவர்களும் வாழும் இந்தக் காலத்தில்– உண்மையிலேயே இவர்கள் வாழும் தெய்வங்கள் என்றே கூற வேண்டும்.

பின்பு மீண்டும் மாரியாயியின் முகத்தைப் பார்த்தேன். அவர் ஒவ்வொரு கதையையும் கூறும் போது, அவரது முக மாற்றங்களையும் ரசித்து ரசித்து, புகைப்படக் கருவிக்குள் சிறைப் பிடித்துக் கொண்டிருந்தனர் எமது இரண்டு புகைப்படக் கலைஞர்களும்.

அவர் கதையைத் தொடர்ந்து, தனது கணவனுடன் காதல் வயப்பட்டதைக் கூறும் போது, வெக்கப்பட்டு புகைப்பிடிப்பாளர்களுக்கு முகத்தைக் காட்டாமல் தலை குனிந்து, அவர்களது காதல் வாழ்வையும் அதன் நளினங்களையும் ரசனையையும் எடுத்து இயம்பின. இவரது பச்ச முகச்சுருக்கங்களையும் தாண்டி, இன்னும் அந்தக் காதலுக்குள் அவர் வாழ்வதனை நாங்கள் அந்த புகைப்படங்களில் கண்டோம்.

"கல்யாணம் நடந்துச்சு. அவங்க வீட்டுல சரியான எதிர்ப்பு. அவங்க கொஞ்சம் வசதியானவங்க. சாதியில

வேற ஆளுங்க. அவங்க குடியானவங்க– ஆசாரி. இருந்தாலும் நம்ம வீட்டுக்காரர் என்னை கொழுந்து எடுக்க போக விடல. தோட்டத்திலேயே கொஞ்சம் வசதியான வீடொன்று எடுத்து என்னை தங்க வச்சாரு. அவர் தனியா பட்டறை போட்டு தங்க நகை செய்ய துவங்கினார்.

எனக்கு குமுதா பிறந்தா. இவளுக்கு காது குத்து கல்யாணம் மிகப் பிரமாண்டமா செஞ்சாரு. அவங்க அண்ணன் தம்பிங்க எல்லாம் வந்தாங்க. ரெண்டு கடா ஆடு வெட்டி விருந்து வச்சாரு. ஏன்னா நம்ம கல்யாணம் ரிஜிஸ்டர் காரியாலயத்துல அவங்க வீட்டு எதிர்ப்போட நடந்துச்சு இல்ல, அதுதான்" என்று கூறிய மாரியாயி எங்களைப் பார்த்தார். அவளது ஒவ்வொரு அசைவும் புகைப்படங்களாக பதிவதனை அவர் அறிவார்.

"குமுதா பொறந்து 3 வயசு இருக்கும். நாங்க 1985 இல் கல்யாணம் கட்டணும். குமுதா 1986 ல பொறந்தா. 1987 பொங்கல் எனக்கு நல்ல நினைவு இருக்கு. காலைல பொங்க வெச்சு, சாம்பிராணி போட்டுட்டு, அம்மா கிட்ட விபூதி வச்சுக்கிட்டு, அவர் கையால எனக்கும் குமுதாக்கும் விபூதி வச்சாரு"

சற்று மௌனமாகி, தனது முந்தானையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மீண்டும் பேசத் தொடங்கினார்:

"சாமிக்கு வச்ச பொங்கல எங்க அம்மாவுக்கு கொடுத்துட்டு, எனக்கும் அவர் கையாலே கொடுத்துட்டு, குமுதாவைத் தூக்கி மடியில வச்சுக்கிட்டு பொங்கல் ஊட்டுனாரு. அதுக்கப்பறம் அவரும் சாப்பிட்டுட்டு, தோட்டத்துப் பொடியன்மார் மூன்று பேத்தோட கல்லு பாக்க போனாரு"

"கள்ளா?" இன்று நாங்கள் வியப்போடு கேட்க "ஆமா, மாணிக்க கல்லு பார்க்க ஆத்துக்கு போவாங்க. போய் ஒரு மூணு மணித்தியாலத்தில் வீட்டுக்கு வந்தாங்க. குமுதாவ தூக்கி தலைக்கு மேல புடிச்சுகிட்டு, எங்க வீட்டு மகாலட்சுமி, நீ பொறந்த யோகம் எனக்கு கல்லு கிடைச்சிருக்குன்னு சொல்லி, முத்தம் கொடுத்தாரு. அவரோட போன பொடியன் மார்க்கு 500 ரூபாய் கணக்குல காசு கொடுத்துட்டு, கல்ல வித்தா இன்னும் காசு தாரேனென்னு சொன்னாரு. கல்ல என் கையில கொடுத்துட்டு, நான் டவுனுக்கு போய் வாரேன்னு போயிட்டாரு.

நான் கையில புடிச்சு பார்த்தேன். அந்த கல்லு நீல கலர்ல பளிச்சுன்னு இருந்துச்சு. பலாக்கொட்டை சைஸ்ல வழுவழுன்னு இருந்துச்சு " என்றவர் மீண்டும் மௌனமானார்.

ராத்திரி வரும்போது அவருடைய தம்பியும் அவரோடு வந்தார். அவர் டவுன்ல தங்க நகை கடையில் அடகு எடுப்பாரு. நம்ம குமுதா அப்பாவோட கடைசி தம்பி சுரேஷ்னு பெயர். அவர் ஆசாரி கடையோட டெக் பீஸ் கடையும் டெக் கூலிக்கு கொடுக்கும் கடையும் வச்சிருந்தார். அவரை எல்லாரும் வீடியோ சுரேஷ் னு கூப்பிடுவாங்க.

அவர்தான் நம்ம கல்யாணத்துக்கு ரொம்ப எதிர்ப்பு காட்டினார். குமுதா அப்பாவோடையும் என்னுடைய முகம் பார்த்தும் பேச மாட்டார். டவுன்ல கண்டாலும் காரி எச்சி துப்பிட்டு போவார். அந்த காலத்துல ரொம்ப கவலையா இருக்கும்" என்று அவர் கூறும் போது அவரது முகத்தில் கண்ட அப்பாவித்தனமும் சிறுமைப்பட்டுப்போன அடையாளங்களும் எமக்கு உணரக்கூடியதாக இருந்தன.

மலையகத்தில் சாதியோடு சேர்ந்து வர்க்க ரீதியான ஒடுக்கு முறையும் ஒருங்கே இணைந்த ஒரு நிலைமை காணப்படுகின்றது என்பதனை இவரது கதையிலிருந்து புரிந்தது.

பின்பு அவர் எம்மோடு கதைக்க மனம் இல்லாமல் அந்த இடத்தை விட்டு நகர்ந்தார். "வாகன சாரதி வந்து இன்னும் நேரம் ஆகுமோ" என்று வினவினார்.

இவரது இந்த ஸ்டோரியை இன்றே முடிக்க வேண்டும் என்பதற்காக, "இன்னும் ஒரு மணி நேரம் காத்திருக்க வேண்டும்" என்று கூறினோம்.

குமுதாவும் குமுதாவின் தம்பியும் நாங்கள் கொடுத்த புத்தகங்களான மார்க்சின் கோர்க்கியின் தாய் நாவலையும் சீன சிறுகதைகளையும் தீவிரமாக வாசித்துக் கொண்டிருந்தனர்.

மீண்டும் எங்களுக்காக தேநீர் தயாரித்து எடுத்து வந்த மாரியாயி அன்போடு அவற்றை பரிமாறினார். எங்களுக்கும் அந்த தேநீரின் தேவை அதிகமாகவே இருந்தது.

தேனீரோடு அவருடைய கதை மீண்டும் தொடங்கியது:

"அன்று வந்த சுரேஷ் மாணிக்க கல்லை வாங்கி பல மணித்தியாலங்கள் அதை பரிசோதனை செய்தார். பின்பு 'இன்று இல்லை நாளை நாங்கள் கொழும்பிற்கு போவோம். அல்லது ரத்தினபுரிக்குப் போவோம். அங்கு எனக்குத் தெரிந்த நல்ல வியாபாரிகள் இருக்கின்றார்கள்' என்றான்.

மறுநாள் காலை குமுதா அப்பா ரொம்ப சந்தோஷமாக மாணிக்கக் கல்லை எடுத்துகொண்டு சுரேஷ் கூட போனார். போனவர் போனவர் தான். குமுதா அப்பாவும் ஊர் பக்கம் வரல; சுரேஷும் ஊர் பக்கம் வரல. வருவாங்க, வருவாங்க, எப்போவாவது வருவாங்க" என்று நம்பிக்கையுடன் என்னைப் பார்த்தார்.

அவரது கண்களில் தெரிந்தது நம்பிக்கையா? அவநம்பிக்கையா? என்று எம்மால் யூகிக்க முடிய வில்லை.

பின்பு குமுதா குறுக்கிட்டு கூறினாள்:

"அப்பா 1987 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 21 ஆம்

தேதி நடந்த கொழும்பு பிரதான பஸ்தரிப்பு நிலைய குண்டு வெடிப்பில் இறந்து இருப்பார் என்று தந்தையின் குடும்பத்தினர் கூறினாலும் அம்மா அதை நம்புவதாக இல்லை" என்றாள்.

"அப்பாவின் தம்பி சுரேஷ் குண்டுவெடிப்பில் இறந்து விட்டாரா? என்று வினவிய போது,

"இல்லை, அவருடையதுதான் கொழும்பு காலி வீதியில் பம்பலப்பிட்டி சந்தியில் காணப்படும்... உணவு விடுதியும் தெய்வலை விகார மாவத்தையில் இருக்கும் பெரிய வீடும்" என்று குமுதா கவலையுடன் கூறினாள்.

அப்போது பெய்த பெரும் மழையின் காரணமாக, நாங்கள் இருந்த அந்த வீட்டின் கூரையில் பல இடங்களில் இருந்து தண்ணீர் சொட்டியது.

"அவர்கள் நல்லா இருக்கட்டும் அப்பா கட்டாயம் வருவார்" என்று கூறி மாரியாயி அவரது சேலை முந்தானையில் முடித்து வைத்திருந்த இரண்டு ரூபாய் காணிக்கையை காட்டினார். "அவர் போய் ஏழாவது நாள் இந்த இரண்டு ரூபாய் காணிக்கையை முடிந்து வைத்தேன். 32 வருடங்களாக முடிந்தே வைத்திருக்கின்றேன்"

என்று அந்த இரண்டு ரூபாயை தனது இரண்டு கைகளாலும் எடுத்துக்காட்டினார்.

அந்த இரண்டு ரூபாவுடன் உழைத்து தேயிலை கொழுந்து பறித்து வெடித்து கருப்பாகிப்போன கைகளை நாங்கள் பிடித்த ஒரே ஒரு புகைப்படம் உலகப் பிரசித்தி பெற்ற படமாகும் என்று நாங்கள் யாரும் அறிந்திருக்கவில்லை.

"நன்றி திருமதி மாரியாயி நடராசா ஆசாரி."

ஒரு உண்மை சம்பவத்தை அடிநாதமாகக் கொண்டு எழுதப்பட்ட கதை.

# யோகி கார்த்திகேசு அறநெறிப்பாடசாலை பரிசு நாளும் விசு க. விமலன் நினைவேந்தலும்



# இலங்கையில் ஏற்பட்ட பிரதான அரசியல் மாற்றங்களும் இன்றைய அரசியல் மாற்றமும்:

## ஓர் இயங்கியல் பார்வை

*பி. முத்துலிங்கம்*

இலங்கையில் 1956இல் S.W.R.D.பண்டார நாயக்க தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அதன் கூட்டு முன்னணியும் ஆட்சிக்கு வந்தமை பிரதான அரசியல் மாற்றமாகக் கருதப்படுகின்றது. பண்டாரநாயக்க, விவசாயிகள், தொழிலாளர்கள், ஆசிரியர்கள், ஆயுர்வேத வைத்தியர்கள், பிக்குமார் போன்ற ஐம்பெரும் சக்திகளின் உதவியோடு பிரதமரானார். பிரித்தானியர் வசமிருந்த விமான நிலையம், போக்குவரத்து, துறைமுகங்கள் என்பவற்றை தேசியமயமாக்கியதன் மூலம் தேசிய முதலாளித்துவத்தை எழுச்சி பெற வைத்தார்.

எழுச்சி பெற்ற சிங்கள தேசியவாதத்தின் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில் சிங்களத்தை அரச கரும மொழியாக்கினார். தேசிய கலை, கலாசாரம், தேசிய உணவு, தேசிய உடை என்பவற்றுக்கு புத்துயிர் அளிக்கப்பட்டது. காலனித்துவ ஆடம்பரப் பொருள்களின் இறக்குமதிகளைத் தடை செய்து உள்ளூர் உற்பத்திகளையும் பாவனையையும் அதிகரிக்கச் செய்தார். பண்டாரநாயக்கவின் வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்த வரையில் அணிசேராக் கொள்கையைப் பின்பற்றினார். சோஷலிச நாடுகளான சோவியத் ஒன்றியம், மக்கள் சீனக்குடியரசு போன்ற நாடுகளுடன் நட்புறவை ஆரம்பித்தார்.

ஆனால் இவரது சிங்களம் மாத்திரம் மொழிக் கொள்கையால் வடக்கு, கிழக்கில் போராட்டம் வெடிக்க, அதற்கு பிராந்திய சபை மூலம் தீர்வு காண பண்டா– செல்வா ஒப்பந்தம் மேற்கொண்டார். இந்த ஒப்பந்தமும் J.R. தலைமையிலான ஐ.தே.கட்சியினதும், பிக்குமார்களினதும் எதிர்ப்பால் கிழித்தெறியப்பட்டது. இவ்வாறாக இருபக்கமும் நெருக்கடி ஏற்பட 1958இல் இனக்கலவரம் வெடித்தது. 1959இல் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பண்டாரநாயக்கவின் ஆட்சி சாதாரண மக்களை நோக்கிச் சென்ற போதிலும் அவரது சமூக ஜனநாயகக் கொள்கை நடுவழிப் பாதை மற்றும் தலைமைத்துவ பலவீனங்களே ஆட்சி முழுமை பெறாமைக்கான காரணங்களாக ரெஜி சிறீவர்த்தன தனது விமர்சனக் கட்டுரையொன்றில் குறிப்பிடுகின்றார்.

அவ்வாறே 1970 இல் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி இணைந்த முக்கூட்டு முன்னணி 2/3 பங்கு பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்தார்கள். பிரதமர் ஸ்ரீமாவோவின் அமைச்சரவையில் டாக்டர் N.M. பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர். டீ. சில்வா, பீற்றர் கெனமன் போன்றவர்கள் அமைச்சர்களானார்கள். இப்போதும் பெரிய மாற்றமொன்றை மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் இப்போது ஆட்சி அமைத்திருக்கின்ற தேசிய மக்கள் சக்தியின் மையக் கட்சியான மக்கள் விடுதலை முன்னணி (J.V.P) அரசுக்கு எதிராக 1971 ஏப்ரலில் ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டது. அக் கிளர்ச்சியை அரசாங்கம் ஒரு மாத காலத்திலேயே ஒடுக்கியதோடு, பதினெட்டாயிரம் இளைஞர்கள் கொல்லப்பட்டார்கள். இக் கிளர்ச்சியும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு உந்து சக்தியாக அமைந்தது. அரசாங்கத்தின் புதிய பொருளாதாரக் கொள்கையினால் அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதிகள் கட்டுப்படுத்தப்பட்டு உள்ளூர் விவசாய உற்பத்திகள் ஊக்குவிக்கப்பட்டன. இதனால் காடுகள், மேடுகள், தரிசு நிலங்கள் யாவற்றிலும் விவசாயம் மேற்கொள்ளப்பட்டது. கைவினைப் பொருட்களின் உற்பத்தியும் அதிகரித்தது. பெருந்தோட்டத் துறையும் ஜனசம, உசவசம என தேசியமயமாக்கப்பட்டன. இவற்றின் மூலம் விவசாயிகள் கைவினைஞர்கள், தொழிலாளர்கள் நன்மையடைந்தார்கள்.

புதிய கல்விக் கொள்கையின் பிரகாரம் தரம் 6 தொடக்கம் க. பொ. த(சாதாரண தரம்) வரை மாணவர்கள் எல்லோரும் தாய்மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சமூகக்கல்வி போன்ற பொதுப்பாடங்களைக் கற்கும் நடைமுறை அமுல்படுத்தப்பட்டது. இன்றும் அது நடைமுறையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. பாடசாலை, பல்கலைக் கழக பாடவிதானங்கள் நாட்டின் சமூக, பொருளாதார, அபிவிருத்திக்கு ஏற்ற முறையில் மாற்றப்பட்டன. ஆனால் அரசாங்கம் மொழிவாரித் தரப்படுத்தலைக் கொண்டு வந்ததன் மூலம் இன விகிதாசார அடிப்படையில் கணித, விஞ்ஞானத் துறைகளுக்கு சிங்கள மொழி மூல மாணவர்கள் கூடுதலாக பல்கலைக் கழக அனுமதியைப் பெற்ற போதும், இதுவரை திறமை அடிப்படையில் கணித, விஞ்ஞானத் துறைகளுக்கு பல்கலைக்கழகம் சென்ற தமிழ் மாணவர்களின் விகிதாசாரத்தில் குறைவு ஏற்பட்டது. இது தங்களைப் பாதிப்பதாக தமிழ் மாணவர்கள் குறைபட்டுக் கொண்டார்கள். இதனால் நன்மை அடைந்த சிங்கள மாணவர்களும் நகர, புற நகரப் பகுதிகளைச் சேர்ந்தவர்களாகவேயிருந்தார்கள். இதற்கான காரணம் அப்பொழுது கிராமங்களில் உள்ள மகா வித்தியாலயங்கள், மத்திய மகா வித்தியாலயங்களில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய

துறைகள் போதிய வளர்ச்சி அடையவில்லை. இதனால் கிராமப்புற சிங்கள மாணவர்கள் பாதிக்கப்பட்டார்கள்.

1972இல் புதிய அரசியல் யாப்புகொண்டு வரப்பட்டு இலங்கை ஜனநாயக சோசலிஸ குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இந்த அரசியல் யாப்பில் பௌத்த மதத்திற்கு முதலிடம் கொடுத்ததன் மூலம் மதச்சார்பான அரசியல் யாப்பாக மாற்றப்பட்டது. சோல்பரி அரசியல் யாப்பில் சிறுபான்மை இனங்களின் பாதுகாப்பிற்காகவிருந்த 29வது சரத்தும் நீக்கப்பட்டது. இலங்கைத் தமிழரசுக் கட்சியினால் முன் வைக்கப்பட்ட ஆறு அம்சக் கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டது. இவை இன ரீதியான பிளவை மேலும் அதிகரிக்கச் செய்தது. இவ்வாறாக ஐக்கிய முன்னணி அரசின் உள்ளே வலது சாரி, இடது சாரி முரண்பாடும், வெளியே தீவிர இடதுசாரிகளின தொழிற்சங்கப் போராட்டங்களும் அரசு வீழ்ச்சியுறக் காரணங்களாயின.

1977 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 5/6 பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்தது. இவ்வரசாங்கம் தாராளவாதம், திறந்த பொருளாதாரம் போன்ற கொள்கைகளை அமுல்படுத்தியது. 1978இல் கொண்டு வரப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் மூலம் இலங்கையைச் சிங்கப்பூராக்க நினைத்த ஜனாதிபதி J.R, அதனை இந்து சமுத்திரத்தின் வெடிகுண்டாகவே மாற்றினார். சமாதானத்தின் தேவதையாக 1994இல் ஜனாதிபதியாக வந்த சந்திரிக்கா பண்டாரநாயக்க இறுதியில் சமாதானத்திற்கான யுத்தத்தைச் செய்தார். 2005இல் ஜனாதிபதியாக வந்த மகிந்த ராஜபக்ஷ 2009இல் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த பின்னர் 2010இல் இலங்கையை ஆசியாவின் அதிசயமாக்குவேன் என்றார். மாறாக குடும்ப ஆட்சி, ஊழல், மோசடி, சர்வாதிகாரம் காரணமாக பதவியையே இழந்தார். தொடர்ந்த குடும்ப ஆட்சி காரணமாக 2022 இல் இலங்கை பொருளாதார நெருக்கடியின் மூலம் ஆசியாவின் அதிசயமானது.

பொருளாதார நெருக்கடியினால் நாடு பூராகவும் மக்கள் போராட்டம் வெடித்தது. காலிமுகத்திடலில் இலட்சகணக்கான மக்கள் கூடி "கோதா வீட்டிற்கு போ" என ஆர்ப்பாட்டம் செய்தார்கள். இதனைப் பயன்படுத்தி ரணில் விக்கிரம சிங்க இடைக்கால ஜனாதிபதியாகி, சர்வ தேச நாணய நிதியத்துடன் கடன் ஒப்பந்தம் செய்து இந்தியா, சீனா போன்ற நாடுகளிடம் அவசர உதவியைப் பெற்று பொருளாதார நெருக்கடியைத் தற்காலிகமாகத் தீர்த்தார்.

2019இல் ஜனாதிபதித் தேர்தலில் 3.16% வீத வாக்குகளைப்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க 2024 செப்டம்பர் தேர்தலில் 42% வீத வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியானார். 2020 பாராளுமன்றத் தேர்தலில் 03 ஆசனங்களை மாத்திரம் பெற்ற தே.ம. சக்தி 2024 நவம்பர் தேர்தலில் 159 ஆசனங்களைப் பெற்று 2/3 பெரும்பான்மையைப் பெற்றார்கள். இந்த வரலாற்று சாதனையைப் படைத்த தே. ம. சக்தியின் மையக் கட்சி மக்கள் விடுதலை முன்னணி எனப்படும் JVP ஆகும். ஜே.வி.பி கிராமிய விவசாயிகள், தொழிலாளர்கள் என்னும் சமூகப் பின்புலத்தில் இளைஞர்கள், மாணவர்கள், இளம் பிக்குமார்கள் எனப்பட்டோரைக் கொண்ட ஒரு குட்டி முதலாளித்துவ அமைப்பென ஆய்வாளர் பேராசிரியர் G.B. கீரவஸ்ஸ குறிப்பிடுகின்றார். குட்டி முதலாளித்துவ வர்க்க மனோபாவமும், தீவிர சிங்கள தேசிய வாத உணர்வுமே அவசர, அவசரமாக இரண்டு ஆயுதக் கிளர்ச்சிகளில் ஈடுபடச் செய்து பெரும் தோல்விக்கு இட்டுச் சென்றது. ஜே.வி.பி சிங்கள தேசிய வாதமும், சோசலிச வாதமும் கலந்த அமைப்பாகும். 1990 இற்குப் பின்னர் பாராளுமன்ற ஜனநாயக அரசியலில் பங்குகொண்ட ஜே.வி.பி. பெரிய வெற்றிகளைப் பெறவில்லை. இதனை உணர்ந்த அநுரகுமார திஸநாயக்கஜே.வி.பி. சார் அமைப்புகளைச்சேர்த்து தே. ம. சக்தியை உருவாக்கினார். பொருளாதார நெருக்கடி யால் பாதிக்கப்பட்ட மக்கள் முறைமை மாற்றத்தற்காக தே. ம. சக்தியை ஆட்சியில் அமர்த்தியுள்ளார்கள்.

1956இல் பண்டாரநாயக்க சில மாற்றங்களை ஏற்படுத்தினார். அவை முழுமையானவையல்ல. 1972 முக்கூட்டு அரசாங்கம் ஒரே நேரத்தில் புதிய பொருளாதாரம், புதிய கல்வி, புதிய அரசியலமைப்பு என மாற்றங்களைக் கொண்டு வந்து நடைமுறைப்படுத்தின. அவையும் முழுமை பெறவில்லை. 2024இல் வந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் முழுமையான மாற்றத்தையே வலியுறுத்துகின்றார்கள். இவர்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள். இதற்காக தேவையற்ற செலவுகளைக் குறைத்தல், ஊழல், மோசடிகளை இல்லாதொழித்தல், அரச சேவையை வினைத்திறன் உடையதாக்கல் எனச் சில மாற்றங்களைச் செய்து வருகின்றார்கள். நாட்டின் பொருளாதார ஏகபோக உரிமையாளர்களைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளது. இதன் காரணமாகவே அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறையவில்லை. நாட்டில் ஏற்கனவேயுள்ள கடன் சுமை, சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள், முதலீடுகள் இன்மை போன்ற காரணங்களால் நாட்டிற்கே உரித்தான பொருளாதாரக் கொள்கையொன்றை முன்வைக்க அரசாங்கத்தால் முடியாதுள்ளது.

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு இன ஐக்கியம், இனப் பிரச்சினைத் தீர்வு, ஆட்சி முறை மாற்றம், சுத்தமான சந்தை, ஊழல் மோசடியற்ற சூழல் என்பன முக்கியமானவையாகும். அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் மக்களின் வாக்களிப்பு வீதம் குறைந்தமைக்கும், அரசாங்கம் 18% வாக்குச் சரிவைச் சந்தித்தமைக்கும் மேல் குறிப்பிட்ட விடயங்களே காரணமாகலாம். ஆனாலும் அரசாங்கத்தின் கூரிய செயற்பாடுகளுக்கு இன்னும் காலம் இருக்கின்றது என்பதையும் நாம் மறந்துவிடலாகாது.

**தேசிய கலை இலக்கியப் பேரவை 26வது புத்தக அரங்கத் திருவிழா - அளவெட்டி அருணோதயா கல்லூரி - 25,26,27 ஜூலை 2025 - நிகழ்வுகளின் சில காட்சிகள்**














**கலாநிதி ந. இரவீந்திரன் 18 நூல்கள் ஆய்வரங்கு - முதலாம் நாள் 19-07.2025 -மறுமலர்ச்சி மன்றம்**












**கலாநிதி ந. இரவீந்திரன் 18 நூல்கள் ஆய்வரங்கு -இரண்டாம் நாள் 20-07.2025 -மறுமலர்ச்சி மன்றம்**












## மறுமலர்ச்சி மன்றம் 53வது ஆண்டுவிழா கலைநிகழ்வுகள் -26.07.2025

















### அமரர் அழகரத்தினம் சிவகெங்கா முப்பதாவது ஆண்டு நினைவு
### 21.09.2025

அமரர் சிவகெங்கா அழகரத்தினம் தரும கருமம் மூலம் மறுமலர்ச்சி மன்றத்தின் முன்பள்ளிக்கான smart board தொடுதிறன் பலகை மூன்று ஆண்டுகளுக்கு முன் வழங்கப்பட்டதுடன் தொடரந்து மாதந் தோறும் முனபள்ளி ஆசிரியரகளுக்கான வேதனமும் வழங்கப்பட்டு வருகின்றது.

அவரின முப்பதாவது ஆண்டு நினைவாக மறுமலர்ச்சி மன்றத்தின் வெளியீடாக வரும் எங்கள் முற்றம் இதழுக்கான அனுசரணை வழங்கப்படுகின்றது.

அழகரத்தினம் சிவகெங்கா தரும கருமம்